அன்புப் பணிக்கு ஓர் அன்னை தெரேசா

கே.பி.நீலமணி

தமிழ் வளர்ச்சித் துறை

அன்புப் பணிக்கு ஓர் அன்னை தெரேசா

கே.பி.நீலமணி

தமிழ் வளர்ச்சி இயக்ககம்
எழும்பூர், சென்னை - 600 008.

நூல் விவரக் குறிப்பு

நூலின் பெயர்	:	**அன்புப் பணிக்கு ஓர் அன்னை தெரேசா**
ஆசிரியர்	:	**கே.பி.நீலமணி**
வெளியீட்டாளர்	:	இயக்குநர் தமிழ் வளர்ச்சி இயக்ககம் எழும்பூர், சென்னை-600 008
பதிப்புரிமை	:	தமிழ்நாடு அரசு
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	2017
விலை	:	70
பக்கம்	:	104
படிகள்	:	1500
தாள்	:	70 ஜிஎஸ்எம், டிஎன்பிஎல்
நூலின் அளவு	:	1/8 டெமி
அச்சிட்டோர்	:	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இரண்டாம் முதன்மைச் சாலை சி.ஐ.டி. வளாகம், தரமணி சென்னை - 600 113
நூல் கிடைக்குமிடம்	:	தமிழ் வளர்ச்சி இயக்ககம் தமிழ் வளாகம், ஆல்சு சாலை, எழும்பூர், சென்னை-600 008.

முனைவர் **கோ.விசயராகவன்** எம்.ஏ., எம். ஃபில்.,எம்.பி.ஏ.,பி.எட்., பி எச்.டி
இயக்குநர் (பொறுப்பு)
தமிழ் வளர்ச்சித்துறை
எழும்பூர், சென்னை-600 008

அணிந்துரை

தமிழக அரசு சிறந்த தமிழறிஞர்களின் நூல்களை நாட்டு உடைமை ஆக்கி, அதன் மூலம் அந்நூல்கள் எல்லோருக்கும் எளிதில் கிடைத்துப் பயன்பெறுமாறு அவற்றை மறு அச்சுச் செய்து வெளியிட்டு வருகின்றது. இவ்வரிசையில் **'அன்புப் பணிக்கு ஓர் அன்னை தெரேசா'** என்னும் இந்நூலும் அடங்கும்.

உலகமானது 'உலகத்தின் ஒளிச்சுடர்கள்' எனச் சிலரை அடையாளம் காட்டும். அவ்வாறு அடையாளம் காட்டப் பட்ட சிலருள் அன்னை தெரேசாவும் ஒருவர். அன்னிய நாடான அல்பேனியாவில் பிறந்து இந்தியா வந்து இந்திய மக்களுக்குத் தொண்டு செய்து வாழ்வதையே வாழ்க்கையாகக் கொண்டவர்.அப்படிப்பட்ட அன்னையுள்ளம்,அன்புஉள்ளம், தூயவுள்ளம் கொண்ட ஒருவரைப் பாரதம் உலகுக்கு அடையாளம் காட்டியது. சாதி, சமய பேதமின்றி எந்தத் துயரத்தையும் தூக்கி யெறிந்துவிட்டு அமைதியாகத் தன்னுடைய பணிகளைத் தொடர்ந்து செய்து அமைதியின் தூதுவரானார். அவருடைய பணியைப் பாராட்டி இந்தியா அவருக்குப் பாரத ரத்னா விருது வழங்கியது. அந்த அன்புத் தாயின் வாழ்க்கை அனைவர்க்கும் பாடமாக உள்ளது. அவர் பெருமையை வெளிப்படுத்துவதே "அன்புப் பணிக்கு ஓர் அன்னை தெரேசா" என்னும் இந்த நூலாகும்.

அருமையும் பெருமையும் உடைய இந்த நூலை எழுதியவர் கே.பி. நீலமணி. அவர் முறையாகச் சங்கீதம் கற்றவர். தினமணி ஆசிரியர் குழுவில் பணியாற்றியவர். சங்கீதத்தை அடிப்படையாகக் கொண்டு இவர் எழுதிய நாவல் புல்லின் இதழ்கள். காயத்ரி, ஜானகிநாதன் ஆகிய புனைப்பெயர்களில் நாவல்களும் சிறுகதைகளும் எழுதி வருபவர். பல்வேறு இதழ்களில் சித்திரத் தொடர்கதைகள், சிறுவர் நூல்கள், வானொலி நாடகங்கள், வரலாறுகள் எழுதிய வண்ணம் இருப்பவர். இந்த நூல் 1979 இல் முதல் பதிப்பைக் கண்டுள்ளது.

இந்நூல் மறு அச்சாகி மக்களுக்கு எளிதில் கிடைத்திட வேண்டும் எனும் அரிய வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்துள்ள தமிழும், தமிழ்நாடும் வாழ்ந்திட, அல்லும் பகலும் அயராது உழைத்த மேனாள் தமிழ்நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கும் மற்றும் இந்நாள் தமிழ்நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்களுக்கும் இதயம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து வரும் மாண்புமிகு தமிழ் மொழி, தமிழ் பண்பாட்டுத் துறை, அமைச்சர் **கே. பாண்டியராஜன்** அவர்களுக்கும் நன்றி.

தமிழ் வளர்ச்சிப் பணிகளில் ஆர்வத்தோடு நாட்டம் செலுத்தித் தமிழ்த் தொண்டாற்றிவரும் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர் **இரா.வெங்கடேசன் இ.ஆ.ப.** அவர்களுக்கும் இதயம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் சிறப்பான முறையில் மறு அச்சுப் பெற முனைந்து உழைத்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் மற்றும் அனைத்துப் பணியாளர்களுக்கும் அச்சகத்தார்க்கும் நன்றி.

இயக்குநர்

நினைவு ஒரு பறவை. . .

தரை தட்டிய கப்பல் போன்ற வாழ்க்கையின் ஒரு கால கட்டத்தில் வயிற்றுக்காக ஒரு தொழிலைச் செய்து கொண்டே-சங்கீதகலாநிதி கும்பகோணம் ராஜமாணிக்கம்பிள்ளை அவர்களிடம் நான் வயலின் கற்றுக் கொண்டிருந்த காலத்தில்-

என்னுள்ளிருந்த இலக்கிய ஆர்வத்தினால் அவ்வப் போது நான் எபதிய சிறுகதைகளை என் மதிப்பிற்குரிய நண்பர்கள் திரு. கி. ரா கோபாலன், எம். வி. வெங்கட்ராம், போன்ற பிரபல எழுத்தாளர்களிடம் காட்டிய போது-

அவற்றைப் பொறுமையோடு படித்து விட்டு அவர்கள் பாராட்டிய உற்சாக மேலீட்டினால் புதுத்தென்பு பெற்று; மேலும் மேலும் பல கதைகள் எழுதி அவை, கல்கி, ஆனந்தவிகடன், சுதேசமித்திரன், அமுத சுரபி போன்ற பத்திரிகைகளில் பிரசுரமாக மூலகாரணமாகிய அந்தப் பழம்பெரும் எழுத்தாளநண்பர்களை நன்றியோடு நினைவு கூர்கிறேன்.

அப்போது-

வேதாரண்யம் திருக்கோயில் நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றிவந்த திரு ந.பிச்சமூர்த்தி அவர்களைப் பார்க்கவேண்டு மென்று அடங்காத ஆவலோடு சென்று கண்டபோது-

என்னை நேரில் அறியாத-

என் எழுத்துக்களின் மூலமே என்னை அறிந்து வைத்திருந்த அந்த மதிப்பிற்குரிய பெரியவர் என்னை அன்புடன் வரவேற்று; என் கதைகளைப் பற்றிக்கூறிய அறிவுரைகளையும் வழங்கிய ஆசிகளையும்-

அன்று ஏற்பட்ட தொடர்பு சென்னை வரை நீண்டு; அவர் அமரராகும் வரை அவர் வீட்டுப்பிள்ளையாகவே எனக்குக் கிட்டிவந்த அன்பையும், பாசத்தையும் பசுமையோடு நினைவு கூர்ந்து சிரம் தாழ்த்தி வணங்குகிறேன்.

இப்படிப் பலப்பல காலங்களில், பலப்பல இலக்கிய அன்பர்களின் அன்புக்குப் பாத்திரமாகி வளர்ந்து வந்த வேளையில்-

கும்பகோணத்தில் நடைபெற்ற அன்னதான சிவன் விழாவில் உரையாற்ற வந்த வாகீசகலாநிதி திரு கி. வா. ஜகந்நாதன் அவர்களின் சிறப்புச் சொற்பெருக்கைக் கேட்டு நான் மனம் பறிகொடுத்து நின்றதையும்; விழா நிறைவு பெற்ற பின்னர் என்னை நானே அறிமுகம் செய்து கொண்டு, இனிக்க இனிக்கப் பெற்ற ஆசிகளையும்-

அன்றிலிருந்து, இன்று எனது இந்நூலுக்கு அழகான தொரு முன்னுரை வழங்கி என்னை வாழ்த்தி இருக்கும் காலம் வரை, திரு. கி. வா. ஜ. அவர்களின் அன்பிற்கும் ஆசிக்கும் பாத்திரமாகி வருவதையும், பாக்கியமாகக் கருதி வணங்குகிறேன். வயலின் கம்பிகளோடி கொஞ்சிக் குலாவி; சாதகத்தையும், சிக்ஷையையும் முடித்துக்கொண்டு, சங்கீதவித்வானாகலாம் என்று சென்னை வந்த என்னை எப்படியோ பத்திரிகை ஆசை பிடிவாதமாகப் பற்றிக் கொண்டு விட்டது. கதை எபதிக் கொண்டிருந்த நான், வேலை வேண்டி தட்டிய ஒரே கதவு தினமணி கதிர்

எனது அசையை வரவேற்று என்னைப் பேராசிரியர் உயர்திரு. ஏ.என்.சிவராமன் அவர்கள் வீட்டிற்கு அழைத்துச்சென்ற இந்தியா சிமெண்ட்ஸ் திரு.ராதாகிருஷ்ண ஐயர் அவர்களுக்கும்; ஆசிரியர் ஊரில் இல்லாத சமயமாயிருந்தும் எனக்காக மனமுவந்து உடனே தினமணி கதிருக்கு போன் செய்து, கதிர் பொறுப்பாசிரியர் திரு. டி. ஆர். நடராஜன் அவர்களுடன் தொடர்பு கொண்டு வேலை கிடைக்க உதவிய வரும்; அனைவரிடமும் அன்போடு பழகும் மனம் படைத்தவருமான தினமணி பிரதம உதவி ஆசிரியர் திரு. டி.வி. கணேசன் அவர்களுக்கும்

என் தேவையை உணர்ந்து, உடனே எனக்கு வேலை கொடுத்து உதவிய ஆசிரியப் பெருந்தகை உயர் திரு. ஏ. என். சிவராமன் அவர்களுக்கும்-

நான் செலுத்தும் நன்றியும் வணக்கமும்; என் வாழ்க்கை முழுமைக்கும் உரிய ஒன்று. தினமணிகதிரில், திருவாளர்கள் துமிலன்; பொறுப் பாசிரியர் டி.ஆர். நடராஜன் இவர்களின் கீழ்பணியாற்றியது ஒரு பொற்காலம்.

அந்தக் காலங்களில் அவர்கள் என்னிடம் காட்டிய அன்பையும்; என் எழுத்துக்களுக்கு அனித்த வாய்ப்பையும் மிகுந்த நன்றியோடு நினைவு கூர்கிறேன்-

குழந்தைகளுக்காக எழுத வேண்டும் என்கிற ஆவலை என்னுள் வளர்த்தவர், கண்ணன் குழந்தை பத்திரிகை ஆசிரியராக இருந்த திரு 'ஆர்வி' அவர்கள். "அகதி", "00 சங்கர்" போன்ற எனது சிறுவர் நாவல்களையும், ஏராளமான சிறுகதைகளையும் பிரசுரித்து, எனக்கு ஊக்கமும், உற்சாகமும் ஊட்டிய அன்னாரை நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன்-

சில கவிஞர்களையும், புலவர்களையும் பண்டிதர்களே அறிவர். குழந்தைகளும் அறிந்த கவிஞராக இருப்பது ஒரு சிறப்பு. குழந்தைகள் மத்தியில் ஒரு கவிஞராக- குழந்தை கவிஞராகக் கொண்டாடப்படுபவர் திரு. அழ. வள்ளியப்பா அவர்கள்.

குழந்தைக் கவிஞரின்-

"நேரு மாமா"வை. இன்றையக் குழந்தைகளும் பாடும்; நாளையக் குழந்தைகளும் எல்லோரும் கேட்டு மகிழும்வண்ணம் பாடிக் கொண்டேயிருப்பர். இப்படிக் காலத்தால் அழியாத பாடல்களை எழுதியுள்ள குழந்தைக் கவிஞர் அவர்கள் என்னையும், என் நூலையும வெகுவாக மதித்து எழுதித் தந்துள்ள பாராட்டுரைக்கு என் இதயம் நிறைந்த நன்றியையும், வணக்கத்தையும் செலுத்துகிறேன்.

அன்னை தெரேசாவின் அன்புப் பெருக்கைப் பற்றி அறிய நேர்ந்த போது-என்னுள் எழுந்த ஆர்வத்தின் இனிய விளைவே இந்நூல்-

இந்நூலை எழுத எனக்கு அவ்வப்போது உதவிய என் இனிய நண்பர்களுக்கும்; தினமணி உதவி ஆசிரியர் திரு. அ. ராமசாமி அவர்களுக்கும்; அன்னை தெரேசா நோபல் பரிசு பெறுவதற்கு முன்பே; அவரைப் பற்றிய இந்நூலுக்கு முதற் பரிசளித்த குழந்தை எழுத்தாளர் சங்கத்திற்கும்-

தங்களது அறக்கட்டளை மூலம் இந்நூலுக்கு தங்கப் பதக்கம் வழங்கிய ஏ வி எம் சாரிடீசாருக்கும், அமரராகிவிட்ட வள்ளல் திரு ஏ. வி. மெய்யப்பச் செட்டியார் அவர்களுக்கும்-

இந்த நூலை, தமது பொருட் செலவையும் பாராது, அழகிய முறையில் தயாரித்து அறிமுகம் செய்திருக்கும் காயத்ரி பப்ளிகேஷன்ஸ் உரிமையாளருக்கும்; இனிய நண்பர் ஓவியக் கவிஞர் அமுதோனுக்கும்; அருமை நண்பர் மூவேந்தர் அச்சக அதிபர் திரு. ஜி. டி முத்து அவர்களுக்கும் எனது நன்றியும் வணக்கங்களும்.

கே. பி நீலமணி

இந்நூலாசிரியரைப் பற்றி

மதுரையில் பிறந்தவர். இளம் வயதிலிருந்தே இசையிலும் இயலக்கியத்திலும் ஆர்வம் கொண்டவர். இசை ஆர்வம் காரணமாக சங்கீதகலாநிதி கும்பகோணம் பிடில் ராஜமாணிக்கம் பிள்ளை அவர்களிடமும், திருவாளப் புத்தூர் திரு கிருஷ்ணமூர்த்தி பிள்ளை அவர்களிடமும், ஏழு ஆண்டுகள் முறையாகக் குருகுல வாசம் செய்து வயலின் வித்தையைக் கற்றுத் தேர்ந்தவர். கர்நாடக சங்கீத அரசாங்கத் தேர்வில் முதலாவதாகத் தேறி, டிப்ளமா பட்டம் பெற்றவர். முழுநேர வயலினிஸ்டாக விளங்க வேண்டியவர்; ஒரு ஜர்னலிஸ்டாக தினமணி ஆசிரியர் குழாத்தில் பணிபுரிகிறார்.

சங்கீதத்தை அடிப்படையாகக் கொண்ட இவருடைய 'புல்லின் இதழ்கள்', என்னும் நாவல் கலைமகளில் தொடர் கதையாக வந்து ஏராளமான ரசிகர்களின் பாராட்டைப் பெற்றது.

"காயத்ரி," "ஜானகி நாதன்" ஆகிய புனைப் பெயர்களிலும் எழுதிவரும் கே. பி. நீலமணி-

ஆனந்த விகடன், கல்கி, கலைமகள், குமுதம், தினமணிகதிர். மித்திரன், அமுத சுரபி, கண்ணன், தியாகபூமி போன்ற பல பத்திரிகைகளின் மூலம் நூற்றுக் கணக்கான சிறுகதைகள், பல நாவர்கள், சித்திரத் தொடர் கதைகள், சிறுவர் நூல்கள், வானொலி நாடகங்கள், வரலாறுகள் ஆகியவை எழுதிப் புகழ் பெற்றவர். இவர் எழுதியுள்ள, "அன்புப் பணிக்கு ஓர் அன்னை தெரேசா," என்னும் இந்நூல் குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் முதற் பரிசான, ஏ.வி.எம். அறக் கட்டளையின் தங்கப் பதக்கத்தைப் பெற்றது.

முதல் பரிசு பெற்ற ஆசிரியரின் இந்நூலை-
நோபல் பரிசு பெற்ற
அன்னை தெரேசாவின் அன்பு பணியை-
எங்கள் பிரசுரத்தின்
முதல் நூலாக வெளியிட்டு
உங்கள் முன் வைப்பதில்
பெருமகிழ்ச்சி யடைகிறோம்.

குழந்தைக் கவிஞரின் பாராட்டுரை

குழந்தைகளுக்குப் புத்தகமாக வெளியிடுவதற்கேற்ற கையெழுத்துப் பிரதிகளுக்கு ஆண்டுதோறும் குழந்தை எழுத்தாளர் சங்கம், ஏவி.எம். அறக்கட்டளைப் பரிசுகளை வழங்கி வருவது பலருக்குத் தெரிந்திருக்கும்.

கவிதை, வாழ்க்கை வரலாறு, சிறுகதை, நாடகம், நாவல், அறிவியல் ஆகிய ஆறு துறைகளில் 1972ஆம் ஆண்டு முதல் ஒவ்வோராண்டும் இருதுறைகளுக்குப் பரிசுகள் வழங்கி வருகிறது. ஒவ்வொரு துறையிலும் முதல் பரிசாகத் தங்கப் பதக்கமும், இரண்டாவது பரிசாக வெள்ளிப் பதக்கமும் வழங்கப் பெறுகின்றன.

சென்ற ஆண்டு வாழ்க்கை வரலாற்றுத் துறையில் முதல் பரிசாகத் தங்கப்பதக்கம் பெற்றது திரு. நீலமணி அவர்கள் எழுதிய அன்புப் பணிக்கு ஓர் அன்னை தெரசா என்ற கையெழுத்துப் பிரதி.

அன்னை தெரசாவைப் பற்றிய நூலுக்குப் பரிசு கிடைத்தது சென்ற ஆண்டில்; அன்னை தெரசாவுக்கு நோபல் பரிசு கிடைத்தது இந்த ஆண்டில்!

நோபல் பரிசு பெறுவதற்கு முற்றிலும் தகுதி வாய்ந்த ஒருவரைப் பற்றி, நோபல் பரிசு கிடைப்பதற்கு ஓராண்டு முன்பே சிறுவருக்குச் சிறப்பாக எழுதிய பெருமை திரு. நீலமணி அவர்களுக்கு உரியது.

துயரப்படும் மனித குலத்துக்குத் தொண்டு செய்வதிலே பேரின்பம் காண்பவர் அன்னை தெரசா.

அல்பேனியா நாட்டில் பிறந்த தெரசா, பன்னிரண்டு வயதுச் சிறுமியாயிருக்கும் போதே, மக்கள் தொண்டிலே மன ஈடுபாடு கொண்டார். பதினெட்டு வயதிலே கல்கத்தா வந்த அவர் ஆதர வற்ற குழந்தைகளுக்கும், அவதிப்படும் ஏழைகளுக்கும், தொழு

நோயினருக்கும் பல வகையிலே பல எதிர்ப்புக்களுக் கிடையே தொண்டு செய்து வந்தார்; தொடர்ந்து தொண்டு செய்து வருகிறார். அவரால் துவக்கப் பெற்ற கருணை இல்லம், இன்று உலக முழுவதும் பரவிப் பல வகையிலும் பணிபுரிந்து வருகிறது.

திக்கற்ற ஊனமுற்ற-நிராகரிக்கப் பெற்ற பச்சிளம் குழந்தைகள் பல 'சிசு விஹா'ரில் வளருகின்றன. 'பாலர் பவன'த்தில பராமரிக்கப்படும் குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்வியிலிருந்து, கல்லூரிப் படிப்பு வரை அளிக்கப்படுவதோடு, கௌவரமான முறையில் அவர்கள் சமூகத்தில் வாழ்வதற்கும் வழி வகை செய்து கொடுக்கப்படுகிறது.

இவ்வாறு ஏழைகளுக்காகவே தமது வாழ்க்கையை அர்ப்பணித்து மாதர் குல மாணிக்கம் பிறந்தது. வேறொரு நாடா னாலும் நம் இந்திய நாட்டின் பிரஜையாக மாறி, இந்தியாவுக்கு மிகப் பெரியதொரு பெருமையைத் தேடித் தத்துள்ளார்.

அன்னை தெரசாவின் வாழ்க்கை வரலாற்றை மிக அழகாகச் சிறுவர் படித்து உணரும் வகையில் எழுதித் தந்துள்ளார் திரு. நீலமணி அவர்கள். சிறிய வயதிலே அன்பெனும் விதையை நெஞ்சிலே விதைத்தால், அதன் மூலம் அரிய பல செயல்களை ஆற்றுதற்கான ஆசை வளரும். ஆசை வளர்ந்தால், நாளடைவில் அது செயலாக மலரும் என்பதைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார் ஆசிரியர். சிறுவர் மட்டுமன்றிப் பெரியோரும் படித்துப் பயன் பெற, மனப்பக்குவம் பெற உதவும் நூல் இது.

ஏற்கெனவே 'ஒரு மாணவன் மகாத்மாவாகிறான்' என்ற சிறுவருக்கான நூலை மிகத் திறம்பட எழுதியவர் திரு. நீலமணி அவர்கள் சிறுவர் இலக்கியத்தில் பெரும் ஈடுபாடு கொண்ட இவர் மேன்மேலும் பல நூல்களை இயற்றிச் சிறுவர் உலகுக்கு நன்மையும், சிறுவர் இலக்கியத்திற்கு ஆக்கமும் அளிப்பார் என நம்புகிறேன்.

'காயத்ரி பப்ளிகேஷன்ஸ்' தனது முதல் நூலாகப் புனிதப் பணியில் ஈடுபட்ட ஒருவரைப் பற்றிய வாழ்க்கை வரலாற்றை வெளியிடுகிறது. மேன் மேலும் பல நல்ல நூல்களைத் தொடர்ந்து வெளியிடுமென எதிர்பார்க்கிறேன்.

காரைக்குடி | அழ. வள்ளியப்பா

30-10-79

முன்னுரை

செல்வச் சூழ்நிலையில் வாழ்கிறவர்கள் அந்தச் சூழ்நிலையி னின்றும் விலகி வாழ்வதற்கு அவர்கள் உள்ளம் இணங்குவதில்லை. இன்பத்தை அநுபவித்துப் பழகிய உள்ளம், இதுவரையில் அநுபவித்தது போதும் என்று எண்ணுவதில்லை. அதை மறுபடியும் அவாவி நிற்கும். இன்பத்தினின்றும் விலகுவதே அருமையானால், அதனின்றும் விலகித் துன்பச் சூழலில் புகுவதற்கு மனம் இடம் கொடுக்குமா? சாதாரண மனித உள்ளம் அதற்கு இயைந்து வராது.

ஆனால் உள்ளத்தைத் தம் வசப்படுத்தி, பிறர் படும் துன்பத்தைக் கண்டு இரங்கி, அந்தத் துன்பத்தைப் போக்கும் முயற்சியில் தாமும் துன்பப்படவேண்டியிருந்தால் அதையே இன்பமாக ஏற்று, பிறர் நலத்துக்காக வாழ்கிறவர்கள் சாமானிய மனிதர்களைவிட மேம்பட்டவர்கள்; அவர்களே மகாத்மாக்கள்.

ஆணானாலும் பெண்ணானாலும் பிறருக்கு நலம் புரிவதற்குரிய தொண்டை மேற்கோண்டு, இடர்களைத் தைரியத் துடன் எதிரிட்டு நிற்கும் மக்களைத் தெய்வத்துக்கு ஒப்பாகக் கொள்ள வேண்டும். வானுலகில் தேவர்கள் இருக்கிறார்கள் என்பது நம்பிக்கையினால் ஒப்புக்கொள்ளும் கருத்து. இந்த நில வுலகில் பிறர் நலத்துக்காகத் தம் நலத்துக்காத் தம் நலத்தைப் புறக் கணித்துப் பிறருக்கே, அதுவும் ஏழைகளுக்கே, தொண்டாற்றும் பெரியவர்களே கண்கண்ட தேவர்கள்.

அன்னை தெரஸா மேல் நாட்டில் பிறந்து இந்தியாவுக்கு வந்து ஏழைகளின் அல்லல்களைத் தீர்க்க முற்பட்டவர். உலக இன்பங்களை அவாவும் இளம் பருவத்திலேயே, 'பிறர்க்கென வாழும்' வாழ்க்கையை அவர் மேற்கொண்டார். அவர் கிறிஸ்தவ ரேயானாலும் சாதி, சமயம், நாடு முதலிய வேறுபாடுகளைக் கடந்து ஏழைகளுக்கு நலம் செய்யும் பணியிலே ஊன்றி நின்றார். பருவத்தில் நுகரும் நுகர்ச்சிகள் சில காலத்துக்குத்தான் இருக்கும். ஆனால் இநத்த் தொண்டோ நாளாக ஆக அதிக இன்பத்தைப்

பயக்கும். ஏழைகளிடத்தில் இறைவனைக் காணும் தன்மையினால் அவர்களுக்குச் சேரியிலே தெய்வ தரிசனம் கிடைக்கிறது.

இந்தத் தெய்வத் திருத்தொண்டில் ஈடுபட்டுப் பழுத்த அன்னை தெரஸா, புகழை எதிர் பாராமல் தொண்டு ஆற்றியவர். ஆயினும் ஏழைகளின் உள்ளார்ந்த நன்றி அவர்கள் உள்ளமென்னும் சிங்காசனத்தில் அவரை ஏற்றிவிட்டது. அவருடைய உயர்ந்த தியாகத்தைக் கண்டு வியந்தவர் பலர்; புகழ்ந்தவர் பலர்! அவற்றால் அவர் பெருமிதம் அடையவில்லை. தம் பணியை எப்போதும் போல் எதையும் எதிர் பாராமல் செய்து வருகிறார்.

கனிந்த கனியாக, தொண்டென்னும் சாற்றை ஏழைகளுக்கு ஊட்டும் அன்னையாக விளங்கும் அவரை இன்று உலகம் அறிந்து கொள்ளும் வாய்ப்பு உள்டாகியிருக்கிறது. அவருக்கு நோபல் பரிசு கிடைத்திருக்கிறது. ஏழைகளின் உள்ளம் குளிர அங்கே உண்டாகும் நன்றியுணர்வை விட இந்தப் பரிசு பெரிதன்று. ஆனாலும் உலகத்தாருக்கு இத்தகைய தொண்டின் உயர்வை எடுத்துக் காட்ட இது பயன்படும்.

இப்படி ஓங்கி உயர்ந்து விளங்கும் அன்னை தெரஸாவின் சுருக்கமான வாழ்க்கை வரலாறு இது. மனிதர்கள் மனிதர்களாக வாழ்ந்து, பிறர் நலத்தையே கருதித் தொண்டாற்றும் தெய்வமாக வளர முடியும் என்பதை இநத் வரலாறு சொல்கிறது.

கதையும் நாவலும் எழுதிப் பழக்கப்பட்ட அன்பர் ஸ்ரீநீலமணி இநத் உண்மைப் பதையையும் எழுதியிருக்கிறார்.

படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய பல செய்திகள் இதில் உள்ளன. எழுதிய அன்பரைப் பாராட்டுகிறேன்.

"காந்த மலை"

சென்னை-28

கி. வா. ஜகந்நாதன்

12-11-79

உள்ளே...

1. தாகங்கள்! 1
2. அல்பேனியா அளித்த பரிசு 6
3. இலட்சியக் கனவுகள் 10
4. சுவர்க்கமும், நரகமும் 15
5. ஆசிரியை தெரேசா 18
6. புதிய பிறவி, பழைய சிந்தனை 25
7. இதய தாகம் 28
8. ஓடும் ரயிலில்... 32
9. கடலில் குளித்தொரு முத்தெடுத்தேன்... 42
10. மடம் மாறினாலும் மனம் மாறாது 48
11. கூண்டைத் துறந்த பறவை 53
12. ஏழைகளின் பிருந்தாவனம் 57
13. சுபாஷிணிகள் 64
14. அன்னையின் அன்பு இல்லங்கள் 69
15. நிர்மல ஹிருதயம் 72
16. என்னதவம் செய்தோமோ! 77
17. கொஞ்சும் குழந்தைகள் 79
18. அன்பின் வெற்றி 82

அன்புப் பணிக்கு ஓர் அன்னை தெரேசா

தாகங்கள்!

1

"நன்றாய் எழுதிய
ஜீவிய சரித்திரம்
நன்றாய் வாழ்ந்த
ஜீவியத்தைப் போலவே அரியதாகும்."
-கார்லைல்

இங்கு குறிப்பிடவிருக்கும் தாகங்கள், ஸ்தூலமான-உலோகாயதமான தாகங்கள் அல்ல.

உயிரை வருத்தும் ஆத்மாவின் தணியாத தாகங்களின் முனைப்பை-உயர்ந்த இலட்சியங்களுக்கான அந்த உள்ளுணர்வின் உந்துதலைப் பற்றியவை.

உள்ளுயிரினின்றும் இதழ்விரிக்கும் ஆத்மாவின் மலர்ச்சியே இந்த இலட்சிய தாகம். இந்த தாகம் பற்றிய உள்ளுணர்வு, பிறவியிலேயே அரும்பி, அபூர்வமாகச் சிலருடைய வாழ்க்கையில் மொட்டவிழ்ந்து மலர்ந்து, மணம் வீசும்.

இந்த மணங்கள்--

இந்த உள்ளுணர்வின் வெளிப்பாடுகள்--

தெய்வப்பணி, தேசப்பணி, மானிட அன்புப்பணி எனப் பலவாகலாம். அவரவரின் எண்ணங்களுக்கும், இயல்புகளுக்கும் ஏற்ப, ஈடுபாட்டிலும், செயலிலும் இவை மாறுபட்டுக் காணப் பட்டாலும், இவற்றின் அடிப்படையும், முனைப்பான இலட்சியமும் ஒன்றே.

தங்களது இலட்சியத்திற்காக அவர்கள் எந்தத் தியாகத்திற்கும் தயங்குவதில்லை. அந்த இலட்சிய வேட்கைக்காக அவர்கள் தங்களையே அர்ப்பணித்துக் கொண்டு விடுகிறார்கள் மேவார் மகாராணாவைக் கணவனாகப் பெற்ற பக்தை மீராவின் உள்ளுணர்வும் இலட்சியமும்; இளம் பிராயத் திலிருந்தே கண்ணன் மீது லயித்திருந்தது.

இந்த் லயிப்பினால்-

மகாராணியாக அரசபோகத்துடன் அரண்மனை வாழ்வு வாழவேண்டிய பேதை மீராவின் உள்ளத்தில், 'தான் எதற்காகவோ-யாருக்காகவோ, பிறந்திருப்பதாக' ஓர் உறுத்தல் ஊடுருவி நின்றது.

இந்த உறுத்தலின் உந்துதல்--அல்லது முனைப்பு ஒருநாள்--

மீராவைக் கண்ணனுக்கே அடிமையாக்கியது.

அகத்துக்கும் புறத்துக்கும் முரண்பட்ட வாழ்க்கையில், தன் இதய தாகத்தோடு போராடிய மீரா, மாட மாளிகைகளையும், அரச வாழ்வையும் துறந்து, கண்ணனைத் தேடி நடந்தே பிருந்தாவனம் சென்று விட்டாள்.

தென்னாட்டில் பிறந்த ஆண்டாளும்-

வடநாட்டில் பிறந்த மீராவும்-- இறைவனுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்கிற பாதைகளில் வேறுபட்டாலும்; பான்மையில் அவ்விருவரின் இலட்சிய தாகங்களும் ஒன்றே.

பக்தி நெறி மட்டுமின்றி, அரசியலிலும் இத்தகைய தாகங்களை-உள்ளுணர்வைக் காண்கிறோம். வெள்ளையனை பாரத பூமியினின்றும் விரட்டியே தீருவது என்ற போர்க்களம் புகுந்த ஜான்சி ராணி லட்சமிபாயின் இலட்சிய தாகமும்-

தென்னாப்பிரிக்காவில், காந்திஜி தலைமையில் வெள்ளை யரின் நிற வேற்றுமைக் கொடுமையை எதிர்த்துப் போராடி, மனித உரிமைக்காகக் கடுஞ்சிறை புகுந்து உயிர்துறந்த தமிழ்ப் பெண் வள்ளியம்மையின் இலட்சிய தாகமும்-இதற்கச் சான்றுகளே.

வெள்ளையரின் நிற வெறியை எதிர்த்த குற்றத்திற்காகச் சிறையில் அடைக்கப்பட்ட வள்ளியம்மை' சொல்லொணாத் துயர்களை அனுபவித்தாள். சிறைக் கொடுமையால் உடல்நலம் குன்றி குற்றுயிரான வள்ளியம்மை இறந்துவிடுவாளோ என அஞ்சிய வெள்ளையர், அவளை விடுதலை செய்தனர்.

பதினாறுவயதுக் கட்டிளங் குமரியான வள்ளியம்மை, சரகுக் கூடாகச் சிறையிலிருந்து வெளியே வந்தாள்.

காந்திஜி வள்ளியம்மையைச் சென்று பார்த்தார். நோய்வாய்ப் பட்டிருந்த அவளிடம், "என்னாலல்லவா உனக்கு இத்தனை சித்திரவதையும், துன்பமும்" என்று மனமுருகிக் கேட்டபோது, அந்த ஏழைப் பெண், "அப்படியல்ல, மனிதருக்கு மனிதர் பாரபட்சம் காட்டும் இந்த வெள்ளையரின் நிறவெறியை எதிர்க்கும் எனது இலட்சியம் ஈடேறும் வரை நீதிக்காகப் போராடியே தீருவேன்" என்று கூறினாள்.

உடனே காந்திஜி கேட்டார்:

"மீண்டும் ஒரு முறை சிறை செல்ல நேர்ந்தால்?"--

"ஒரு முறை என்ன காந்திஜி, பலமுறை வேண்டுமானாலும் சிறை செல்லுவேன்" என்று ஆவேசத்துடன் கூறினாள். ஆனால் அந்த இளம் வீராங்கனையின் உயிர் அப்போதே அந்தக் கூட்டை விட்டுப் பிரிந்து விட்டது.

காந்திஜியின் விழிகளினின்றும் நீர் சுரந்தது.

காந்திஜி தமது சத்திய சோதனையில் 'அந்தப் பேதைப் பெண்ணின் இலட்சிய தாகம், தனது சுதந்திர வேட்கையி னின்றும் துளியும் குறைந்தது அல்ல'- என்று வள்ளியம்மையைப் புகழ்ந்து குறிப்பிட்டார்.

பக்தியும் தியாகமும் சதந்திரமும் மனித உரிமையும், தணியாத தாகங்களாக அவர்களின் ஆவியை உலர்த்தின.

தெய்வப் பணி போல--

தேசப்பணி போல--

அன்புப் பணிக்காக இத்தகையதொரு இதயதாகத்தோடு போராடியவர்தான் அன்னை தெரேசா!

மனிதகுல சேவைக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ளத் துடித்தவர் அன்னை தெரேசா.

துளி அன்பிற்காக நாள் முழுதும் ஏங்கி ஏங்கித் தவித்து, நாவறண்டு கிடக்கும் நாதியற்ற மனிதப் பயிர்களுக்கு கருமுகில் போல் அன்பைச் சொரிய ஆர்வம் மிகுந்து, உருகித்தவித்த தெரேசாவின் இதயக் குரலை-பிரார்த்தனை கீதத்தைக் கேட்போம்:

"என் இறைவன் சிலுவையில் அறையுண்டு துன்பங்களைச் சுமந்தது போலவே, நானும் துன்பங்களைச் சுமந்து ஏழை யாக வார்வதையே நான் வணங்கும் இயேசு விரும்புகின்றார்.

"அந்தப் புதிய பாடத்தை இன்று கற்றுக்கொண்டேன்.

"ஏழ்மையின் கொடுமையை அநுபவ பூர்வமாக அறிந்து கொண்டேன்.

"கால் வலிக்க நடந்தேன்.

"பசியைத் தீர்க்கச் சிறிது உணவிற்கும், நிழலைத் தரும் சிறு கூரைக்கும், ஏழை மக்கள் ஏங்கித் தவித்துத் தேடி அலையும் போது அவர்கள் எவ்வளவு வெறுப்பும் வேதனையும் அடைந்திருப்பார்கள் என்பதை நேரில் அறிந்துகொண்டேன்.

"அனாதையாக விடப்பட்டவகள் -- ஆதரவற்ற கடைப் பட்டவர்கள் -- இவர்களின் விழிகளில் தான் உண்மையான தெய்வத் தோற்றத்தைக் காணமுடியும்! தெரு ஓரங்களில், பசியாலும், பிணியாலும் வீழ்ந்து கிடப்பவர்கள் தான் என் கண்கண்ட தெய்வங்கள்.

"ஒடக்கப்படுபவனும், தெருவில் ஆதரவற்று இறந்து படுபவனும், தொழு நோயால் மனம் நைந்து, உள்ளம் வெதும்புபவனும் நானே'-- என்னும் உனது குரல் என் இதயக் கடலில் அலைகள் போல் ஒலிக்கின்றன.

"என் நினைவும் நெஞ்சமும், அன்பை வேண்டி உறவை நாடி, வாடி நிற்கும் ஏழைகளிலும் பரம ஏழைகளோடு ஒன்றிடவே ஏங்குகிறது; இதற்காக நாளும் என உள்ளம் துடிக்கிறது.

"இறைவா!

"என் இலட்சியப் பாதைக்கு என்னை அழைத்துச் செல்லும்.

"சொகுசும், சுகமும் நிறைந்த லொரேட்டா மடத்து வாழ்க்கை என் கண்முன் நிழலாடி என்னைப் பலவீனப் படுத்துகிறது. கடவுளே! இநத நேரத்தில் நீ எனக்கு அதற்கான நெஞ்சுரத்தை மட்டும் தந்துவிடு."

--*அன்னை தெரேசா*

இன்று--

தான் கண்டுவந்த இலட்சியக் கனவுகளை ஈடேற்றுவதில் அன்னை தெரேசா ஓரளவு வெற்றி கண்டுவிட்டார். ஆனால், இந்த் வெற்றிக்காக அவர் நோற்ற நோன்பு?--

உள்ளத்தை அகலாக்கி - அதில்
அன்பென்னும் நெய்வார்த்து,
உடலைத் திரியாக்கித் தன் இனிய
சுகங்களனைத்தையும் சுடராக்கி-
கடைப்பட்டோர்க்குக் கருணைப்
பேரொளி காட்டினார்.

ஒடுக்கப்பட்டவர்களின் உடைந்த உள்ளங்களில் நம்பிக்கை நீர் வார்த்தார். கடையரிலும் கடையரைத் தன் இதய பீடத்தில் ஏற்றி வைத்துப் போற்றினார். அவர்களுக்காக அல்லும் பகலும், அயராது உழைத்தார். அவர்களது நல்வாழ்வையே தன்பிறவிப் பயனாகக் கருதினார்.

நம்மில் பலர் பார்க்கவும், தீண்டவும், ஏன்-மனத்தால் நினைக்கவும் அஞ்சும் தொழு நோயாளிகளுக்கும் அவரே அன்னை--

நிர்க்கதியான அந்த மக்களுக்குக் கருணையுடன் இல்லம் ஈந்து--

வயிறாற அமுது ஊட்டி--

இனிய ஆறுதல் வார்த்தைகள் கூறி அன்புத் தொண்டு புரியும், அரிய வீராங்கனை அவர்.

இந்தப் பரிதாபத்திற்குரியவர்களின் விமோசனத்திற்காக இடைவிடாது பிரார்த்திப்பவர்.

அவர்களது துன்பமெனும் வேள்வித் தீயில் தன்னையே ஆஹீதிப் பொருளாக்கிக் கொண்டவர்.

இன்று நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கும்,

இத்தகைய தொரு நடமாடும் கருணை இல்லமான அன்னை தெரேசாவின் அன்புப் பணிகளையும்--

ஆற்றல் மிக்க தொண்டினையும்--

புனித வாழ்வையும் பற்றிக் கூறுவதே இநத்க் கதை--

இந்த இலட்சியக் கன்னிகையின் கதை,

முடிவுறாத ஒரு தொடர் கதை!

அன்பு செலுத்துவதற்கு எல்லை ஏது?

ஓய்வுதான் ஏது?

ஆயினும்,

இந்நூலின் முடிவு--

அனைத்துலகமும் அறிந்த--1979-ம் ஆண்டு உலக சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்ற--புனித அன்னை தெரேசாவின் அன்பின் வெற்றியைப் பற்றிக் கூறுவதாக இருக்கும்.

இனி--

கருணையே வடிவான அன்னை தெரேசாவின் உருக்குலை யாத இலட்சியங்களையும்; அவற்றை அடைய அவர் மேற் கொண்ட சத்திய சோதனைகளையும் காண...

தொடர்வோம்.

★★★

அல்பேனியா அளித்த பரிசு

2

"தாய்நாட்டை நேசிப்பது இயல்பு;
மனித குலம் முழுவதையுமே
நேசிப்பது சிறப்பு" -பஹாயி மதக் கொள்கை

கண்ணுக் கெட்டிய தூரம் வரை விண்ணை முட்டும் உயர்ந்த மலைகள். மலைகளின் உச்சியை மறைத்தும், தழுவியும் செல்லும் வெண் முகில் கூட்டங்கள்.

மலையின் அடிவாரத்தில் வளர்ந்தோங்கி நிற்கும், பெரிய பெரிய மரங்கள், வற்றாத நதிகள், சுற்றிலும் அகன்று பரவிக் கிடக்கும் செடி கொடிகள்.

தூரத்திலிருந்து பார்ப்பதற்கு -- மரகதப்பாய் விரித்தாற் போன்று காட்சியளிக்கும் பசுமையான வயல்வெளிகள்.

இத்தகைய அழகிய இயற்கைக் காட்சிகளைக் கொண்ட அல்பேனியா, சதுப்புநிலக் கடற்கரை கொண்ட மலைப்பாங்கான நாடு.

வடக்கே டினாரிக்ஸ் ஆல்ப்ஸ் மலை தெற்கே பெனின்சுலா. வடக்கும் கிழக்கும் யூகோஸ்லேவியா. இந்த எல்லைகளைக் கொண்ட, தென்கிழக்கு ஐரோப்பிய நாடு அல்பேனியா. இதன் ஜனத்தொகை 25 லட்சம். பேசும் மொழி அல்பேனியம்

இங்குள்ள மக்களுக்கு முக்கிய தொழில் விவசாயம், கால் நடை வளர்ப்பு. கோதுமை, சோளம், புகையிலை, பருத்தி, கம்பளி ஆடைகள், பெட்ரோலியம், நிலக்கரி, மரம், தோல், கனிஜ வகைகள் போன்றவை இங்கிருந்து ஏற்றுமதியாகின்றன.

அல்பேனியாவிலுள்ள, செகாப்ஜி என்னும் கிராமத்தில், ஓர் விவசாயக் குடும்பத்தில், 1910-ம் ஆண்டு, ஆகஸ்ட்டு மாதம் 27-ம்

தேதி தெரேசா பிறந்தார். தெரேசாவுக்குப் பெற்றோர் இட்ட பெயர் ‘அக்னெஸ் கான்ஷா போஜாக்ஷா’ வாகும். தெரேசாவின் பெற்றோர்களுக்கு, இரண்டு பெண்கள், ஒரு பையன்.

தெரேசாவின் தந்தை விவசாயப் பண்ணை ஒன்றில் காப்பாளாராக வேலை பார்த்து வந்தார். தாயாரும் அதே பண்ணையில் பணியாற்றி வந்தார். மிகவும் வசதியான குடும்பம் அல்ல என்றாலும், மகிழ்ச்சியோடு இருக்கப் போதுமானதாயிருந்தது.

தெரேசா தன்னுடைய ஆரம்ப காலப் படிப்பை அரசாங்கப் பள்ளியொன்றில் பயின்றார். இளம் வயதிலிருந்தே எல்லோருடனும் அன்பாகப் பழகுவார். எடுத்துக் கொண்ட எந்தக் காரியத்தையும் அழகாகச் செய்து முடிப்பார். மிகுந்த துணிச்சலும், தன்னம்பிக்கையும் கொண்டவர்.

குழந்தைப் பருவத்திலிருந்தே தெரேசாவுக்கு, ஏசுநாதரிடம் அளவுகடந்த பக்தி. பக்தி வளர வளர ஏசுவின் உபதேசங்களும், வாழ்க்கையும் அவரது இளம் நெஞ்சில் ஆழப்பதிந்திருந்தது.

நாடு நலம் துறந்து, தியாகங்கள் புரிந்து, கிருஸ்துவமதம் பரப்பி வருபவர்களைப் பற்றி தெரேசா அறிவார். அவர்களைப் போலவே, தானும் ஏசுவுக்குத் தொண்டு செய்ய வேண்டுமென்று தெரேசாவின் மனம் மிகவும் ஆசைப்பட்டது.

இந்தியா செல்ல வேண்டும்; இந்திய மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும்; இயேசுவின் உயர்வையும் சித்தாந்தங்களையும் இந்தியர்களுக்கு உணர்த்த வேண்டும் என்று லட்சியக்கனவு கண்டு வந்தார். அதற்கான காலத்தை எதிர்நோக்கி, ஏசுவின் அழைப்புக் குரலுக்காக உள்ளத்தில் ஏங்கிக் கொண்டிருந்தார்.

அப்போது தெரேசாவுக்கு, பனிரெண்டே வயதுதான்.

அல்பேனிய நாட்டுப் பெண்ணுக்கு இந்திய மண்ணில் சேவை செய்யும் மோகம் அப்போதே பிறந்து விட்டது.

--பனிரெண்டு வயதில், இப்படியொரு ஆசையும். லட்சியமும் சாத்தியமா?-என்று வியப்பாக இருக்கலாம். இந்தக் கேள்விக்கு அன்னை தெரேசாவே அளித்துள்ள பதிலைக் கேட்போம்.

--“என் வாழ்க்கைப் பாதையின் வரைமுறையை நிர்ணயிக்க, பனிரெண்டு வயது அறியாப் பருவம் இல்லை. அன்பு காட்டவும், தொண்டு செய்யவும் துடிக்கிற இதயத்துக்கு, வயது ஒரு பிரச்னையாயிருக்காது.

“மணம் செய்யக் காத்திருக்கும் பெண்ணைப்போல என் லட்சியங்களுக்காக, என்னையே அர்ப்பணம் செய்யத்

துடித்தேன். அதற்கான அழைப்புக்காக, ஏசுவின் அருளுக்காக என் உள்ளத்தினுள்ளே ஏங்கிக் காத்து நின்றேன்."-

தெரேசா பள்ளியில் படிக்கும்போதே 'சோடலிட்டி'யில் ஒரு அங்கத்தினராகச் சேர்ந்திருந்தார். சோடலிட்டி என்பது, மதச்சார்புடைய தொரு குழுமம்.

இந்த சமயத்தில், வங்காளத்தில் ஒரு பயங்கரமான சூழ்நிலை உருவாகியிருந்தது. மக்கள் வறுமையாலும், கொள்ளை நோயாலும் வாடித்தவித்தனர். யூகோஸ்லாவியாவிலுள்ள (JESUITS) ஜேசீஸ் (ஏசுநாதர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள்) இந்தியர்களுக்குச் சேவை செய்ய ஒப்புக் கொண்டிருந்தனர். அதற்காக அவர்கள் கல்கத்தாவிலுள்ள, அதிமேற்றி ராசனத்தில் (ARCHDIOCES) பணிபுரியச் சென்றனர்.

இதன் முதல் கோஷ்டி 1925-ம் ஆண்டு டிசம்பர் 30-ம் தேதி கல்கத்தா வந்தடைந்தது. கிருஸ்துவமிஷனரிகள் தங்கள் உயிரையும் லட்சியம் செய்யாது மக்களுக்குச் சேவை செய்தனர்.

இவர்களில் ஒருவர் குர்ஸியாங்கிற்கு அனுப்பப்பட்டிருந் தார். அவர் அங்கிருந்து அல்பேனியாவிலுள்ள தங்கள் சங்கத் திற்கு அடிக்கடிக் கடிதங்கள் எழுதி வந்தார். ஒவ்வொரு கடிதமும், வங்காள கிருஸ்துவ மிஷனரிகள் ஆற்றிவரும் சிறப்புப் பணிகள்; சேவைகள் பற்றி மிக உற்சாகமூட்டுபவையாக இருக்கும்.

ஜேசீஸ் சபைக்கு இக்கடிதங்கள் வரும். பிறகு இவற்றை - தெரேசா உறுப்பினராகவுள்ள - சோடலிஸ்ட் சங்கத்தினருக்கும் எடுத்துச் சென்று படித்துக் காட்டுவது வழக்கம்.

அந்தக் கடிதத்திலுள்ள விஷயங்கள், தெரேசாவின் உள்ளத்து ஆவலைப் பன்மடங்காகப் பெருக்கிவிட்டன, இளம் வயதிலிருந்ததே தெரேசா 'இந்தியா செல்ல வேண்டும்; இந்திய மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும்' என்று ஆசைப்பட்டு வந்தார். இப்போது அந்த ஆசை அவர் உள்ளத்தில் பெரும் ஆவேசமாகவே உருப்பெற்று விட்டது.

தெரேசாவின் மனம் அப்போதே கல்கத்தாவிற்குச் செல்லத்துடித்தது. அவர்களோடு இந்த அறப்போரில் தானும் பங்கு கொள்ள வேண்டுமென்று ஆசைப்பட்டார். தன்னுடைய விருப்பத்தை பாரிஷ் பாதிரியாரிடம் தெரிவித்தார் தெரேசா.

சிறுபிராயம் முதற்கொண்டே தெரேசாவைப் பற்றி, பாரிஷ் பாதிரியார் நன்கு அறிவார். இளகிய மனமும், உறுதியான கொள்கைக் பிடிப்பும் உடைய தெரேசாவின் விருப்பம் அவருக்கு

மகிழ்ச்சியையே அளித்தது. ஆயினும், இது அவ்வளவு சிறிய விஷயமல்லவே! அதனாலேயே அவர் தயங்கினார்.

மேலும், அப்போது தெரேசாவுக்கு வயது பதினான்கேதான்.

ஆகவே, தெரேசாவின் தொண்டு ஆர்வம், இளம் பிராயத்து ஆவேசமாக இடையில் நின்று விடக் கூடாதே என்று எண்ணினார்.

தெரேசாவை அருகில் அழைத்து, மிகவும் அன்புடன் கூறினார் பாதிரியார்:

"அன்புள்ள அக்னெஸ், உன்னுடைய விருப்பம் மிகவும் நியாயமானது. உனக்கு அனுமதி கொடுப்பதில் நான் மகிழ்ச்சியே அடைவேன். ஆயினும் உன்னுடைய இந்த முடிவை, நீ மீண்டும் மறுபரிசீலனை செய்தல் நலம். உணர்ச்சி வசப்படாமல், நன்கு யோசனை செய் நிதானமாகத் தனிமையில் பலமுறை உன்னுடைய விருப்பத்தைப் பரிசீலனை செய்து முடிவுக்குவா. கர்த்தரின் அருள் உனக்குக் கிட்டுவதாக" என்று ஆசி கூறி அனுப்பி வைத்துவிட்டார்!

★★★

இலட்சியக் கனவுகள்

3

"ஒரே குறிக்கோள்; அளவற்ற ஊக்கம்;
தளர்வற்ற நெஞ்சுறுதி; சளைக்காத உழைப்பு;
நேர்மையான பாதை. வெற்றி கிட்டாமலா
போய்விடும்?"
- **கிரென்வில் க்ளீஸ்பார்.**

'மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும், வாழ்க்கையில் ஏதாவது ஓர் உயர்ந்த இலட்சியம் இருத்தல் வேண்டும். அதை அடைவதற்கான தளராத உள்ளமும்; தன்னம்பிக்கையும் வேண்டும்.

இலட்சியம் இல்லாத வாழ்க்கை, துடுப்பு இல்லாத படகில் பயணம் செய்வதைப் போன்றது. தன்னம்பிக்கை இல்லாத வாழ்க்கையோ, ஓட்டைப் படகில் பயணம் செல்வதைப் போன்றது என்பார்கள். ஆனால், என்னுடைய இலட்சியமும், தன்னம்பிக்கையும் ஏன் மதிக்கப்படவில்லை?--

எந்த ஒரு இலட்சியமோ, குறிக்கோளோ இன்றி, உண்டு உறங்கி வீண் பொழுது போக்கி தன் போக்கில் வாழ்கிற வாழ்க்கையும்; தனக்காகவே வாழ்ந்து மடிகிற வாழ்க்கையும், கிடைத்தற்கரிய மனிதப் பிறவிக்குத் தேடிக் கொடுத்த ஒரு சாபக்கேடே யல்லவா-

பிறருக்கும் பயன்படும்படி வாழ்வது தானே வாழ்க்கையின் பயனாகும்?-

ஆனால், என்னுடைய ஆசைகளும் நம்பிக்கைகளும் ஏன் ஈடேற வில்லை? அதற்கு வழியின்றியே போய்விடுமோ' என்று தெரேசா மனம் வருந்தினார்.

தன் உருவத்தையும் வயதையும் கணக்கில் கொண்டு, தன் விண்ணப்பத்தை ஏற்காததற்காக வேதனைப்பட்டார்.

-'ஒருவேளை அந்தப் பெரும்பணிக்குத் நான் அருகதையே யில்லையோ?'-

சிந்தனை வண்டுகள் தெரேசாவின் உள்ளத்தைக் குடைந்து கொண்டேயிருந்தன.

-'நான் தகுதியற்றவளா?' -இதே கேள்வியை அவர் தன் உள்ளத்திடமே திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருந்தார்.

-'என்னடைய அன்பும், பாசமும், என் குடும்பத்தோடு நின்றுவிட வேண்டியதுதானா? சொந்தமோ பந்தமோ இல்லாதவர்களையும், என் குடும்பத்தினராக பாவிக்க என்னால் முடியுமா? முற்றிலும் அன்னியவர்களிடமும் என்னால் மனதார அன்பு செலுத்த முடியாதா? அந்த மனப்பக்குவம் எனக்கு இருக்கிறதா? அதற்குரிய எந்த சோதனைகளிலும், மனதார, தைரியமாக என்னால் ஈடுபட முடியுமா, அவற்றைச் சமாளித்து நான் வெற்றி கொள்வேனா?'--

எத்தனைமுறை மாறி மாறி யோசித்தாலும், இவையனைத் தும் தெரேசாவுக்கு அசாத்தியமானதாகத் தோன்றவே இல்லை ஆயினும் பாதிரியார் கூறிய வார்த்தைகள், தெரேசாவை பயமுறுத்திக் கொண்டே இருந்தது.

-'என்னுடைய இந்த முடிவை ஒரு அவசர முடிவாகச் சிலர் கருதக்கூடும் ஆனால் சிறு வயது முதற் கொண்டே நான் ஏசுவை நேசிப்பது போலவேதானே அனைவரையும் நேசித்து வருகிறேன். அவரிடம் அன்பாய் இருப்பது போல்தானே மற்றவர் களிடமும் அன்பாக இருக்கிறேன். ஆயினும் இதையெல்லாம் நான் எப்படி நிரூபித்துக் காட்டுவேன்?

'ஒருவேளை என் முயற்சியில் நான் தோற்றுப்போனால்? என் லட்சியத்தில் நான் தவறிவிட்டால்? அதன்பிறகு இந்த அல்போனியா நாட்டிற்குத் திரும்பி வந்தால், மற்றவர்கள் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்? என் எதிர்காலம் அதன் பிறகு எப்படிப்பட்டதாக இருக்கும்?'-

இதைப் பற்றியே தெரேசா திரும்பத் திரும்பச் சிந்தித்துக் கொண்டிருந்தார். அவரது பிரார்த்தனைகள் எல்லாம் இதனைப் பற்றியதாகவே இருந்தது. தொண்டு செய்யத் துடிக்கும் அந்த உள்ளத்தில், சோர்வே ஏற்படவில்லை. மனம் சிறிதும் அதைரியப் படவுமில்லை. ஆயினும் கர்த்தரின் அருளை வேண்டி இடைவிடாது பிரார்த்தித்து வந்தார்.

இது மிகவும் நியாயமானதும், தேவையானதுமாகும் என்று தெரேசா மனப்பூர்வமாக நம்பினார்.

ஒரு குறிப்பிட்ட இலட்சியத்திற்காக உள்ளத்தில் ஆசை எழுவது இயற்கை. ஆனால் அந்த லட்சியத்தை அடைவதற்கான, உறுதியும், தகுதியும் அந்த உள்ளத்திற்கு இருக்க வேண்டும். அந்தத் தகுதி தனக்கு உண்டா என்றறிவதற்கு ஆத்ம சோதனை அவசியமான ஒன்று.

இதற்கு தெரேசாவும் விதிவிலக்கல்லவே!

ஓயாத பிரார்த்தனைகள்; மனம் அலுக்காத பிரார்த்தனைகள்.

இந்தக் காலத்திலெல்லாம் தெரேசா மிகவும் மனக் குழப்பத் துடனேயே இருந்தார். ஆயினும் அவர் பிரார்த்தனைகளைக் கைவிடவில்லை. தனக்கு ஏசுநாதர் எப்படியும் நல்வழி காட்டுவார் என்கிற நம்பிக்கை தெரேசாவின் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்திருந்தது. அந்த நம்பிக்கையுடனேயே தெரேசா காத்திருந் தார். அது விண்போகவில்லை.

கடவுளிடம் நம் பொறுப்புகளை எல்லாம் ஒப்படைத்து விடவேண்டும்; நமது கடமைகளை மட்டும் நாம் தவறாது செய்து வந்தால் போதும். இறைவன் நம் விருப்பத்தை ஈடேற்றி வைப்பான்.

தெரேசாவின் இந்த அசைக்க முடியாத இறை நம்பிக்கை, அற்புதமாகப் பலித்தது,

தன்னை எதற்காக இறைவன் படைத்திருக்கிறார் என்பது அவருக்குப் புரிந்தது. தன்கடன் பணி செய்து கிடக்கவேண்டியதே என்பதை தெரேசா முழுமையாக உணர்ந்தார். ஆயினும் பணியை யாருடன் தொடங்குவது?-

பல மிஷனரிகளும், இறைவனை அடையும் ஒரே மார்க்கத் தைத் தான் வலியுறுத்துகின்றன. அதற்கான நல்வழிகளைத்தான் போதிக்கின்றன. தியாகத்தையும், சேவைகளையும் தான் வலியுறுத்துகின்றன. ஆயினும் தன் பணியை எந்தப் பிரிவின் கீழ் துவங்குவது? தன்னை வழிநடத்திச் செல்லத் தக்கவர்கள் யார்?-

இதில் தெரேசாவுக்கு மீண்டும் குழப்பம் ஏற்பட்டது.

அன் பிறகு--

அந்தப் பொறுப்பையும் ஏசுவிடமே ஒப்படைத்து விட்டு, பிரார்த்தனைகளிலேயே முழு மனத்தையும் செலுத்தினார்.

பலன்--

இறைவன் அவரது பிரார்த்தனைகளுக்குச் செவிசாய்த்தாற் போன்று காரியங்கள் நடந்தன.

இந்த சமயத்தில், கல்கத்தாவில் பணிபுரியச் சென்றிருந்த ஜேஸீஸ் மிஷனரிகளில் சிலர், தங்கள் தாய் நாடான அல்போனியாவிற்குத் திரும்பி வந்தனர். அவர்கள் கல்கத்தாவிலுள்ள லொரேட்டா மடத்தைப் பற்றிக் கூறினர். அதைச் சேர்ந்த கன்னிகைப் பெண்கள், கல்கத்தாவிலும், சுற்றுப் புறங்களிலும் ஆற்றும் அற்புத சேவைகளைப் பற்றி வர்ணித்தனர்.

இது தெரேசாவின் மனதை மிகவும் கவர்ந்தது. சேவை ஆர்வத்தால் அவர் மனம் பரந்தது.

அதே சமயம் லொரேட்டா மடத்துக்குக் கன்னிகைகளும் தெரேசாவுக்குத் தங்கள் முழுஆதரவையும் ஒத்துழைப்பையும் அளிக்க முன் வந்தனர். இது தெரேசாவின் சஞ்சலத்தை நீக்கி விட்டது.

தெரேசா அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. தான் செல்லவேண்டிய பாதை திட்டவட்டமாகத் தெரிந்து விட்டது. நிலவொளி போன்ற அந்த தெய்வீகப் பாதையில், ஏசுவின் திருக்கரம் பற்றி வழி நடக்க தெரேசா சித்தமாகி விட்டார்.

உடனே, லொரேட்டா கன்னிகாமாட உறுப்பினரானார். லொரேட்டா கன்னிகா பெண்களுடன் சேர்ந்து பணி புரிய தெரேசா முடிவு செய்து விட்டார்.

தெரேசாவின் திடமான முடிவைக் கண்டு பாதிரியார் மனம் மகிழ்ந்தார். தெரேசாவை இறைவன் எந்தப் பணிக்காகப் படைத் தரோ; அந்தப் பாதையை நோக்கி இப்பொழுது தெரேசா பயணமாகி நிற்கிறார். ஏசுவின் அருளுக்குப் பாத்திரமான தெரேசா வுக்கு மனம் நிறைந்த ஆசிகளை வழங்கினார் பாதிரியார்.

அதன் பிறகு காரியங்கள் வேகமாக நடந்தன.

இந்தியா செல்லுமுன் லொரேட்டா முறைப்படி மத சம்பந்தமான பயிற்சியை தெரேசா பெறவேண்டும். அதற்காக தெரேசா அயர்லாந்துக்கு அனுப்பப்பட்டார் அங்குள்ள ஏனைய கன்னிமாடப் பெண்களுடன் தெரேசாவுக்குத் தொடர்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

அந்தக் கன்னிகைப் பெண்கள், கல்கத்தாவிலுள்ள அதிமேற்றிராசனத்தில் (Archdiocese) பணிபுரிந்து பயிற்சி பெற்றவர்கள். இவர்கள் தெரேசாவுக்கு மனமுவந்து உதவினர்.

1928-ம் ஆண்டு நவம்பர் மாதம் 29-ம் தேதி தெரேசா அப்பாய் நகரிலுள்ள லொரேட்டா கன்னிகா மாடத்திற்கு அனுப்பப்

பட்டார். அங்கிருந்து ராத்பர்ன்ஹாம், டம்ளின், அயர்லாந்து ஆகிய கன்னிகா மாடங்களுக்கு அனுப்பப்பட்டார். முதல் வருஷப் பரீக்ஷையில் தெரேசா தேர்ந்தெடுத்து அனுப்பி வைக்கப்பட்டார்.

தெரேசா தன் முதல் பயிற்சியை இந்தியாவிலுள்ள டார்ஜிலிங்கில் பெற்றார். டார்ஜிலிங் பயிற்சி முடிந்ததும் கல்கத்தா வந்து சேர்ந்தார். கல்கத்தாவிலுள்ள லொரேட்டா கன்னிகா மாடத்தின் உறுப்பினராக நியமனம் பெற்றார்.

1929-ம் ஆண்டு-

கல்கத்தாவிலுள்ள என்டேலி புனித மரியன்னை உயர்நிலைப்பள்ளியில், புவிஇயல் ஆசிரியையாக தெரேசா தனது பணியைத் துவக்கினார்.

இந்திய மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்று இளம்பிராயத்திலிருந்தே தெரேசா லட்சியக் கனவுகள் கண்டு வந்தார். அந்தப் பாதையிலிருந்த கதவுகள் இப்போது திறந்து கொண்டு விட்டன; இனி மேல் தடை என்ன?

கருணை மொட்டவிழந்து, இந்திய மண்ணில் அன்பு. மணம் பரப்ப, அல்பேனிய மலர் பூத்து விட்டது.

கல்கத்தாவில் தெரேசாவின் அன்புப் பணிகளைப் பார்க்குமுன்-தெரேசா கண்ட கல்கத்தாவை நாமும் காண்போம்.

★★★

சுவர்க்கமும், நரகமும்

4

"நாம் மனிதர்களைப் பன்றிகள் போல் வாழ அனுமதித்து விட்டுப் பின் அவர்கள் மனிதர்கள் போல் நடக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறு."

- மேற்கு வங்க ஆளுநர். ஏ. எல். டயஸ்.

வங்காளம் இரு பிரிவுகளைக் கொண்டது. ஒன்று கிழக்கு வங்காளம்; மற்றொன்று மேற்கு வங்காளம். மேற்கு வங்கம் இந்தியாவைச் சேர்ந்தது. அதன் தலைநகரம் கல்கத்தா.

கிழக்கு வங்காளம் பாகிஸ்தானைச் சேர்ந்ததாயிருந்தது. டிச. 1971-ல் பாகிஸ்தானுக்கும், கிழக்கு வங்காளத்திற்கும் உள்நாட்டுப்போர் மூண்டது. அதில் வெற்றியடைந்த கிழக்கு வங்காளம், சுதந்திர பங்களாதேஷ் ஆக மாறியது. இந்தப் போரின் போது லட்சக்கணக்கான ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் தங்கள் நாட்டைவிட்டு, அகதிகளாக மேற்கு வங்கத்தில் தஞ்சம் புகுந்தனர். இந்தியா அவர்களுக்கு தஞ்சம் அளித்து உதவியது. இதனால் கல்கத்தாவின் ஜனத்தொகை மேலும் பெருகியது.

கல்கத்தாவின் ஜனத்தொகை கிட்டத்தட்ட எண்பது லட்சம். அமெரிக்காவிலுள்ள நியூயார்க்; ஜப்பானிலுள்ள டோக்கியோ; சீனாவிலுள்ள 'ஷாங்காய்', போன்ற உலகப் பெருநகரங்களுடன் கல்கத்தாவை ஒப்பிடலாம்.

ஆனால்-

மக்கள் பெருக்கத்தில் மட்டுமே கல்கத்தாவை மேற்கண்ட நகரங்களுடன் ஒப்பிட முடியும். இது தவிர, பொருளாதார வளர்ச்சியிலோ, மக்களின் வாழ்க்கைத்தர உயர்விலோ ஒப்பிட முடியாது.

வரலாறு படைத்த நினைவுச் சின்னங்களுக்கும்; எழுச்சி மிக்க இயக்கங்களுக்கும் கல்கத்தா பெயர் பெற்றது.

புராதனமான கோயில்களுக்கும் இங்கு பஞ்சமில்லை.

உயர்ந்த ஸ்தூபிகளை எழுப்பி நிற்கும் பெரிய பெரிய ஆலைகள் நகருக்குப் பெருமை யூட்டுபவை.

வானளாவிய அழகிய பலமாடி அலுவலகக் கட்டிடங்கள்; வர்த்தகப் பெருமையைப் பறை சாற்றிக் கொண்டிருக்கின்றன.

செல்வந்தர்கள் வாழும் பார்க் வீதி, விக்டோரியா சதுக்கம் போன்ற, நாகரீகப் பகுதிகள் பார்ப்போரை பிரமிக்கவைக்கும்!

இத்தனையாயினும்-

கல்கத்தாவை ஒரு முழுச்சித்திரமாகப் பார்த்தால், ஏழ்மையின் கேந்திரமாகவும், வறுமையின் இருப்பிடமாகவும், அசுதத்தின் உறைவிடமாகவுமே காட்சியளிக்கும். செல்வச் செழிப்பை விழுங்கி ஏப்பம் விட்டு; வறுமை தாண்டவமாடும் ஒரு விசித்திர நகரம் கல்கத்தா வாழ்நாள் முழுவதும் வறுமையோடும், பசியோடும் போராடிப் போராடித் தோற்று மடிந்து கொண்டிருக்கும் மக்கள் பெருக்கத்திற்கு கல்கத்தா ஓர் உதாரணம்.

மூன்று லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள், நடுத்தெரு வாசிகள். பிளாட்பாரத்தையும், அங்கு கிடக்கும் நகரசபைக் குழாய்களையும் நம்பி குடும்பம் நடத்துபவர்கள். சினிமா விளம்பர பாவட்டங்களை கூரையாகவும், சாக்குக் கோணிகளை அறையின் தடுப்புச் சுவர்களாகவும் பாவித்து விடுதேடிக் கொண்டவர்கள்.

கல்கத்தாவின் இதயப் பகுதியில் லட்சக் கணக்கான மக்கள், சேறும், சகதியும் நிறைந்த இடங்களில் மிகக் கேவலமாக வாழ்கிறார்கள். சிறிது பசியைப் போக்கிக் கொள்ள ஒரு துண்டு ரொட்டிக்கும்; துளி நிழல் காண சிறு குடிலுக்கும் அலைகிறார்கள்.

பசியாலும், பிணியாலும் மடியும் மக்களின்

மாளாத--எண்ணிக்கை-

நாளுக்கு நாள் பெருகி வரும் மக்கள் வெள்ளம்;

அதில் முளைக்கும் புதிய புதிய பிரச்னைகள்-

இவற்றிற்கு இங்கு முடிவே இல்லை.

பணக்காரர்களுக்கும் பிரச்னைகள் இல்லாமல் இல்லை. ஆனால் அதை அவர்கள் தங்கள் பணபலத்தினால் தீர்த்துக் கொள்ள முடியும்; ஏழைகள் எங்கே போவார்கள்!

வஞ்சிக்கப்பட்டவர்கள்--

வாழ்விழந்தவர்கள்--

புறக்கணிக்கப்பட்டவர்கள்--

ஊனமுற்றவர்கள், இவர்கள் நடத்தும் அன்றாட வாழ்க்கைப் போராட்டத்திற்கு விடிவே இல்லை. விடிவில்லாத போராட்டமே அவர்களது வாழ்க்கையாக நிலைத்து விட்டது.

அங்கஹீனர்களின் அபயக்குரல்களையும், விழி இழந்தோரின் வேதனை நிறைந்த விண்ணப்பங்களையும், வீதிகள் தோறும் கேட்கலாம்.

இந்த--

ஏழைமக்களின் ஏக்கம்--

வஞ்சிக்கப் பட்டவர்களின் உள்ளக் குமுறல்--

வாழ்விழந்தவர்கள் வடிக்கும் கண்ணீர்--

அன்பிற்கு ஏங்கும் இதயங்கள்--

இவற்றிற்குக் கிடைத்த விடைதான் அன்னை தெரேசே!

மனம் வெதும்பி வாழ்பவர்கள்;

வாழ்வின் நம்பிக்கை ஒளி இழந்து தவிப்பவர்கள்; இத்தகைய அனாதைகளுக்கு அன்பும் ஆதரவும் தரும் நம்பிக்கை நட்சத்திரம்தான் அன்னை தெரேசா!

அந்தப் புனித உள்ளத்தினின்றும் வற்றாது சுரக்கும் அன்பும் கருணையுமே, தெரேசாவை "அன்னை தெரேசா" வாக ஏழைகளின் இதயத்தில் கொலுவிருத்தியது.

இனி--

"அன்னை தெரேசா" வாக அவர் ஆவதற்கு முன்பு-

"தெரேசா"வாக அவருக்குப் புதிய பெயரிடப்படுவதற்கு முன்பு--

"அக்னெஸ்" என்றே ஆசிரியர்கள் மத்தியில் சுருக்கமாக-- செல்லமாக அழைக்கப் பட்டுவந்த ஆசிரியை அக்னெஸ்ஸை;

கல்கத்தாவில்-

1929-ம் ஆண்டிலிருந்து, புவியியல் ஆயிரியையாக அவர் பணியாற்றும் என்டேலி புனித மரியன்னை உயர்நிலைப் பள்ளிக்குச்சென்று அவரைக் காண்போம்.

★★★

ஆசிரியை தெரேசா

5

"ஜீவராசிகள் அனைத்திடமும்
அன்பு செய்யத் தூண்டுவதே
உண்மையான கல்வி;
ஆனந்தம் அளிப்பதும் அதுவே."
-ரஸ்கின்

தெரேசா பணிபுரியும் என்டேலி புனித மரியன்னை உயர்நிலைப் பள்ளி; பார்ப்பதற்கு மிகவும் அழகாக கண்ணைக் கவரும் விதத்தில் ஒரு சிறிய அரண்மனை போன்று இருக்கும்.

பள்ளியைச் சுற்றியுள்ள தோட்டத்தை, இயற்கை அழகு கொஞ்சும் வண்ணம், மிகநேர்த்தியாக அதை உருவாக்கியிருந் தார்கள்.

பார்க்குமிடமெல்லாம் மிதிக்கக் கூடாத புல்விரிப்புகள். நடந்து செல்லும் பாதைகளின் இருமங்கிலும் தலை நிமிர்ந்து அசைந்தாடும் விதம் விதமான செடிகள். அதில மஞ்சளும், சிவப்பும், நீலமுமாகத் தலையசைத்து, பலவண்ணங்களில் பூத்துக் குலுங்கி நிற்கும் அழகிய பூக்கள்.

சற்று தூரத்தில், சிறிய ஏரிபோன்றதொரு அழகிய தடாகம் அமைக்கப்பட்டிருந்தது. அவ்வப்போது காற்று வீசும்போது, அத்தடாகத்தின் மீது எழும் சிறு சிறு மெல்லிய அலைகள்; பார்ப்போரைப் பரவசப்படுத்தும்.

சிறந்த அறிவு வளர்ச்சிக்கும், இனிய பொழுது போக்கிற்கும் எடுத்துக்காட்டாக விளங்கியது அந்தப் பள்ளி.

ஆனால், இத்தனை சிறப்போடு கூடிய அந்தப்பள்ளியில் செல்வச் சிறார்கள்; அதாவது பணக்காரர்களின் வீட்டுக் குழந்தைகள் மட்டுமே சேர்ந்து படிக்கமுடியும். ஏழைக் குழந்தை கள் அந்தப் பள்ளியைப் பற்றிக் கனவு கூடக் காணமுடியாது.

தெரேசாவின் மனதை மிகவும் வேதனைப்படுத்திய முதல் விஷயம் இது.

இந்த ஏற்றத்தாழ்வை பாகுபாட்டை தெரேசாவால் சகித்துக் கொள்ளவே முடியவில்லை.

தன் கண்ணெதிரே நிதம்காணும் எண்ணற்ற ஏழை மக்களை எண்ணி எண்ணி அவர் உள்ளம் உருகியது.

அமைதி பெறவேண்டிய அந்தப் பள்ளியில் பணியில் தெரேசா மன அமைதியை இழந்தார்.

செல்வச் சூழல் நிறைந்த என்டேலி பள்ளியை ஒட்டியே 'மோத்திஜில்' என்னும் பிரசித்தமான சேரிப் பகுதியும் இருந்தது. வறுமையோடும், பிணியோடும் போராடியபடி வாழும்; எண்ணற்ற ஏழைகள் அங்கு வசித்து வந்தனர். வறுமையின் மொத்த உருவத்தையும் அங்கு காணலாம்.

அவர்களுக்கு வயிறார உண்ண உணவில்லை; உடலை மறைக்கப் போதிய துணியுமில்லை. மானத்தை மட்டுமே மறைத்துக் கொண்டு வாழும் இந்த ஏழைகளின் குழந்தைகளுக்கு கல்வி என்பது ஒரு எட்டாக் கனியே அல்லவா!

பணக்கார வீட்டுக் குழந்தைகள், பளிச்சென்று உடை உடுத்திக்கொண்டு வருவார்கள், அருகிலிருந்தும், வெகுதொலை விலிருந்தும், பஸ்ஸிலோ, தங்கள் சொந்தக்காரிலோ அவர்கள் அந்தப் பள்ளிக்குப் படிக்க வருவார்கள்.

ஆனால்-

மிக அருகிலுள்ள சேரிக் குழந்தைகளுக்கோ?

பள்ளியின் வாசலிலுள்ள இரும்புக் கேட்டைக் கூடக் கடந்து உள்ளே நுழைய முடியாது. கூர்க்கா அவர்களை அனுமதிக்கமாட்டான். ஏனெனில்--

அந்தப் பள்ளியில் சேரவும், அங்கு கல்வி கற்கவும், பணவசதியும், ஒருசமூக அந்தஸ்தும் தேவைப்பட்டது.

பாவம்! அன்றாட உணவிற்கே அவதிப்படும் அந்த ஆதரவற்ற சேரிக் குழந்தைகள், தங்களுக்குக் கிட்டாத இந்த இரண்டிற்கும் எங்கே போவார்கள்?

தெரேசாவின் மனம்--

தன்னிடம் பள்ளியில் பாடம் கற்றுப் போகும் பணக்கார வீட்டுக் குழந்தைகளைப் பார்க்கும் போதெல்லாம்; கூடவே

அருகிலுள்ள வசதியற்ற சேரிக் குழந்தைகளையும் எண்ணிப் பார்க்கும் தாங்கமுடியாத வேதனையினால் அவரது உள்ளம் வருந்தும்.

இப்படிக் கூறுவதினால்--

தெரேசா பணக்கார வீட்டுக் குழந்தைகளை வெறுத்தார் என்றோ; அவர்களிடம் அன்பு காட்ட விரும்பவில்லை என்றோ பொருளல்ல. ஏனெனில்

தெரேசாவின் இதயம், அள்ள அள்ளக் குறையாத அன்புச் சுரங்கமாக இருந்தது.

இந்த உலகம் முழுமைக்குமே அன்பை வாரி வழங்க தன் சேவையைக் காணிக்கையாக்க -- அவருடைய மனம் அத்தனை விசாலமாக இருந்தது.

தன் இதயத்தில் பெரும் ஊற்றாகப் பொங்கி எழும் அன்பை ஏழை, பணக்காரர் என்கிற பாகுபாடின்றி; அனைவரையும் ஒன்றாக பாவித்து வாரி வாங்கி தொண்டு செய்ய அவர் சித்தமாயிருந்தார்.

அதற்கான உளப்பக்குவமும்--

மனத்தென்பும்--

பரந்த உள்ளமும்--

விசால நோக்கும்--

திடமான உறுதியும், தகுதியும் அவருக்கு இருந்தது.

எனவேதான், அவரால் சேரிக்குழந்தைகள்-அல்லது ஏழைக்குழந்தைகள் அந்தக் கல்விச் சாலையில் புறக்கணிக்கப் படுவதை ஏற்றுக் கொள்ள மனம் ஒப்பவில்லை.

தான் கற்ற கல்வியை தன்னிடமுள்ள அன்பையும் பாசத் தையும்; அந்த ஏழை குழந்தைகளுக்கும், ஊட்டவேண்டுமென்று உருகினார்.

ஆனால்--

அப்படித்தன்னால்தன் விருப்பப்படி இயங்கமுடியாற்போன போது; மனம் உடைந்தார்; வேதனைப்பட்டார்.

-'இந்த ஏழைக் குழந்தைகளுக்கு என்னால் ஒரு உதவியுமே செய்ய முடியாதா?'

'நான் கற்ற கல்வியும்--

'என் மனம் நிரம்பி வழியும் அன்பும், இந்த நான்கு சுவர்களுக்குள், மடத்தின் கட்டுதிட்டத்திற்குள் முடங்கிக் கிடக்க வேண்டியவைதானா?

'இந்த ஏழைகளுக்கு விமோசனமே இல்லையா?'--

என்பதைப் பற்றியே தெரேசா ஓயாது சிந்திக்கலானார்.

இது மற்றவர்கள் சிந்திக்காத ஒரு மாறுபட்ட சிந்தனை.

மிகவும் அவசியமான சிந்தனை இது; உயர்வான சிந்தனையும்கூட

அதனாலேயே தெரேசா, இதைப் பற்றியே தீவிரமாகச் சிந்திக்கலானார்.

இத்தகையதொரு பரந்த உள்ளமும், இரக்கச் சிந்தனையும், தெரேசாவின் பிறவியிலேயே ரத்தத்திலேயே ஊறிப்போயிருக் கும் ஒன்று.

பாரபட்சமற்ற இந்தப் பார்வையே தெரேசாவை மற்றவர்களினின்றும் பிரித்துக் காட்டியது;

மற்றவர்களின்றும் மாறுபட்டவராக அவரைப் பிரகாசிக்கச் செய்தது.

ஒரு துண்டு ரொட்டிக்காக அந்தச் சேரியில் நிதம் கொலைச்சண்டை நிகழ்வதை தெரேசா அறிவார்.

பாலுக்காக அழும் குழந்தை; உலையில் போடும் அரிசிக்காக வாடிக்கொண்டிருக்கும் தாய்;

வேலை தேடி ஓடிக்கொண்டிருக்கும் தந்தை;

உழைத்து உழைத்து ஓடாகிப் போய், நோயால் முடங்கிக் கிடக்கும் கிழ ஜீவன்கள்.

இத்தகைய காட்சிகளைக் காணும் தெரேசாவின் உள்ளத்தில் துக்கம் பீறிடும்.

'இறைவா! இவர்களுக்கெல்லாம் விடிவே கிடையாதா! விமோசனமே இல்லையா?--

'ஏழ்மை என்பது ஒரு குற்றமா? அல்லது வறுமை என்பதுதான் ஒரு சாபக்கேடா?--

'வயிற்றுப்பிரச்னையே அவர்களை இப்படி வாட்டி வருத்தும் போது, அறிவுப் பசியைப் பற்றிச் சிந்திக்க அவர்களுக்கு நேரமேது? அதற்காக செலவிட வசதி தான் அவர்களிடம் ஏது?'

தெரேசா தன்னையே கேட்டுக் கொள்வார்.

‘ஏசுவின் சிருஷ்டியில் அனைவரையும் சமமாகத்தானே படைத்தார்? சமயப் பிரிவினைகளையும், சமூக ஏற்றத் தாழ்வுகளையும் சிருஷ்டித்தவன் மனிதனே அல்லவா!

‘உயிர்களுக்கு உயிர் பாரபட்சம் காட்டுவது பாபமே அல்லவா?--

‘அன்பைக் கொட்டப் பிறந்த மனிதனே பாரபட்சமாக நடந்து, அன்புக்கு அநீதி இழைப்பதா?--

‘இல்லாதவர்களுக்கு ஈவதற்காகத்தானே, இறைவனால், ‘இருப்பவன்’ படைக்கப்பட்டிருக்கிறான். அவன் அதை மறப்பதும், மறுப்பதும், நன்றி கொன்ற செயல்-அல்லவா?--

மனித உள்ளத்தைச் சுண்டிப் பார்க்க அன்பு அல்லவா அளவுகோல்? அன்பைக் கொடுத்தால் தானே அன்பைப் பெறமுடியும்?

‘நம்மில் உயர்ந்தோரிடம் எவ்வளவோ தீமை இருக்கிறது; நம்மில் தாழ்ந்தோரிடமும் எவ்வளவோ நன்மை இருக்கிறது. இப்படிப்பட்ட உண்மையான நிலையில், பிறரை வெறுக்கவும், பகிஷ்கரிக்கவும் நம்மில் எவருக்குமே தகுதி இருப்பது அரிதே அல்லவா?’--

-- இத்தகைய

துன்ப மூட்டும் சிந்தனைகளிலே உழன்று உழன்று உறக்கம் வராமலே தெரேசா கழித்த இரவுகள் எண்ணிலடங்கா.

கண்களில் கண்ணீர் பெருக்கெடுக்கும். எண்ணங்களின் வேதனை தாளாது விழிகளை மூடினால், மீண்டும் மீண்டும் அதே துன்ப நினைவுகள்; அதே காட்சிகள் மறந்தும்கூட தெரேசாவால் ஏழைகளை எண்ணிப் பாராமலே இருக்க முடியவில்லை.

அவர்களைப்பற்றிய சிந்தனைகளின் ஆக்கிரமிப்பும் பாதிப்புகளும் அவரை வெகுவாக உடலாலும் உள்ளத்தாலும் வருத்தின.

பள்ளியின் இடைவேளை மணி கம்பீரமாக ஒலிக்கும்--

பளபளப்பான உடையணிந்த பள்ளிக் குழந்தைகள் துள்ளிக் குதித்துக் கொண்டு வெளியே ஓடிவருவார்கள்.

மதிய உணவு நேரம் அது--

அவர்கள் அழகாக உண்பதையும், உண்டபின் ஓடிவிளையாடுவதையும்; ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்

கொள்வதையும் எட்ட நின்று வேடிக்கை பார்க்க சேரிக் குழந்தைகள் வெளியே கூட்டமாக வந்து நிற்பர்.

எவ்வித களங்கமின்றியே வேடிக்கை பார்த்தாலும்--

அவ்வப்போது அந்த ஏழைக் குழைந்தைகளின் விழிகளில் பிரதிபலிக்கும் உணர்ச்சிகளைக் கவனிக்க தெரேசா தவறியதே இல்லை. அவரால் அந்த உணர்ச்சிகளை மறக்கவும் முடிந்ததில்லை.

செல்வந்தர்கள் வீட்டுக் குழந்தைகள் அணிந்திருக்கும் பளபளப்பான--அழகான உடைகளைக் கண்டு, அந்த ஏழைச் சிறுவர்களுக்குப் பொறாமை இல்லை.

அவர்கள் சுவையாக உண்ணும் விதம்விதமான விலை யுயர்ந்த உணவைக் கண்டு இந்த ஏழைக்குழந்தைகள், அவர் களிடம் கைநீட்டி யாசிக்கவும் இல்லை--

பின் எதற்காக இங்கே வந்து கூடுகிறார்கள்?--

தாங்கள் அறிந்தும், அநுபவித்தும் இராத மாறுபட்ட இந்த காட்சிகளைக் காண்பதிலுள்ள ஆசையும் ஆர்வமுமா? அல்லது--

ஒரு புதிய உலகத்திற்கு வந்து, பிரமிப்பூட்டும் தங்கள் வயதை ஒத்த குழந்தைகளை வேடிக்கை பார்க்கிற மகிழ்ச்சிதான் காரணமா?--

இல்லை--

இந்த உண்மைக்கும் அப்பால்; வேறொரு உண்மையும் இருக்கிறது!

வேடிக்கை பார்க்கிற அந்த விழிகளின் அடித்தளத்தில், 'இவையெல்லாம் தங்களுக்கும் ஏன் கிட்டுவதில்லை' என்கிற ஏக்கமும், ஏமாற்றமும் இல்லாமல் இருக்காது.

மேலெழுந்த வாரியாக அவர்கள் அதை மறைத்துக் கொண்டாலும், ஆழமாக உள்ளதினுள் அந்த ஏழைக் குழந்தைகள் ஏங்குவதும், ஆசைப்படுவதும், அந்தப் பிஞ்சு விழிகளில். எங்கோ ஒரு மூலையில் அவர்களையும் மீறி அவை சோகச் சித்திரமாய்ப் பிரதிபலிக்கத்தான் செய்தன.

அதுதான் இயற்கை. ஆனால்--

அதைக் கண்டு கொள்ளவும்; புரிந்து கொள்ளவும்; தெரேசாவின் கண்கள் வேண்டும்.

அவர்களுக்காக இரக்கப்பட, வேதனைப்பட, மனமுருக, தெரேசாவின் நெஞ்சமும் வேண்டும்.

ஆம்!--

இந்த ஏழைகளின் நியாயமான ஆசைகளையும், கபடமற்ற அவர்களது இதயங்களையும், தெரேசாவைப் போல் புரிந்து கொண்டவர்கள் எவரும் இல்லை என்றால் அது மிகை அல்ல.

இது போன்ற சந்தர்ப்பங்களிலெல்லாம் தெரேசாவின் விழிகள் பனிக்கும். கேட்டுக்கு வெளியே ஓடிச்சென்று, அந்த ஏழைக் குழந்தைகளை அன்புடன் வாரி அணைத்துக் கொள்ள வேண்டும் போல் தெரேசாவின் கைகள் துடுக்கும்.

ஆனால்--

தெரேசாவால் அப்படிச் செய்ய முடியாது.

ஏனெனில்--

தடையாயிருப்பது பள்ளியின் இரும்பு கேட்மட்டுமல்ல;

மடத்தின் கட்டுப்பாடுகளும், பள்ளியின் சட்ட திட்டங்களுமே குறுக்கே நின்றன.

அன்பிற்கும் இங்கே ஓர் எல்லை--

அன்பிற்கும் இங்கே ஓர் அடைக்கும் தாழ்--

மடத்தைச் சேர்ந்த கன்னிகையர் வெளியே சென்று அன்புப் பணியபுரியக் கூடாது.

இதைத்தான் தெரேசாவினால் ஜீரணிக்கவே முடியவில்லை.

அவரது இதயம் உள்ளூர எரிமலைபோல் குமுறிக் கொண்டேயிருந்தது.

அந்த எரிமலையை ஒரு நாள் இறைவன் வெடிக்கவும் வைத்தான்.

★★★

புதிய பிறவி, பழைய சிந்தனை

6

"எவர் தமக்கு மட்டுமே
சமைத்துக் கொள்கிறார்களோ,
அவர்கள் பாவத்தை
உண்கிறார்கள்" -கீதை

கல்கத்தா புனித மேரியன்னை உயர்நிலைப் பள்ளியில் புவிஇயல் ஆசிரியையாக, 1929-ம் ஆண்டு தெரேசா பொறுப் பேற்ற நாளிலிருந்து, இடைவிடாத இதயப் போராட்டங்களுடன் இரண்டு வருடங்கள் வாடி உதிர்ந்து விட்டன.

ஓயாத பள்ளிப் பணி; படிப்பு மிகுந்த நேரத்தையெல்லாம் தியானத்திலும், ஏழைகளுக்கான ஆழ்ந்த பிரார்த்தனைகளிலுமே தெரேசா செலவிட்டார்.

1931ம்- ஆண்டு மதசம்பந்தமான ஒரு சபை நடந்தது. அந்த சமயத்தில் தெரேசா கன்னிகைகளுக்குரிய மூன்று முக்கிய விரதங் களை ஏற்றார். தன்னை முழுமையாக ஏசுவிற்கே அர்ப்பணித்தார்.

அப்போது தெரேசாவுக்கு வயது இருபத்தி ஒன்று.

தெரேசாவுக்கு பெற்றோர் இட்ட இயற்பெயர் 'அக்னெஸ் கானஷா போஜாக்ஷு' -- (Agnes Gonxha Bojaxhiu) என்பதாகும். செல்லமாக அவரை எல்லோரும் 'அக்னெஸ்' என்றே அன்றுவரை அழைத்து வந்தார்கள்.

இன்று தீட்சை பெற்ற அக்னெஸ்ஸுக்கு "தெரேசா" என்னும் புதிய நாமகரணம், ஒரு விசேஷ முக்கியத்துவத்துடன் செய்து வைக்கப்பட்டது.

அன்றிலிருந்து 'அக்னெஸ்'; 'அன்புள்ள தெரேசா' வானார்.

தன்னுடைய இந்தப் புதிய பெயர் பழக்கப்பட்டு வர தெரேசாவுக்குச் சில நாட்களாயின.

“தெரேசா!” என்று யார் கூப்பிட்டாலும், திரும்பிப்பார்க் காமலே கூட அவர்போய்க் கொண்டிருப்பார். அந்த நாட்கள் வேடிக்கையானவை.

ஆனால், விரைவிலேயே தன் பெயரைப் பழக்கப்படுத்திக் கொண்டு விட்டார் தெரேசா.

இந்தப் பெயர் மாற்றம், தெரேசாவினிடம் ஒரு புதிய உத்வேகத்தை ஏற்படுத்தியது.

சிறுவயதிலிருந்தே ஏழை, பணக்காரர்; உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று பாகுபடுத்தித் தன் அன்பு இதயத்தை கூறுபோட அவருக்குத் தெரியாது.

உலகம் முழுவதையும் அன்பு மயமாகக் காண்பவர் தெரேசா! ஆகவே தன் அன்பையும் உலக மக்களிடம்வாரி இறைக்க அவர் ஆசைப்பட்டார். அந்த அன்பு வெறிதான் இப்போது அவருள் ஒரு ஆவேசமாக உருப்பெற்று நின்றது.

தன் அன்புப் பணியின் ஆரம்பப் பாடத்தை, சேரியிலிருந்து ஆரம்பிக்க வேண்டும் என்று தெரேசா ஆசைப்பட்டார்.

சேற்றிலே தவழும் சிரித்த முகங்களை சிந்தித்துப் பார்த்தார். அந்தப் பிஞ்சுக் கரங்களில் கரும்பலகையையும், பலுப்பத்தையும் திணிக்கும் பொன்னாளைக் கனவு கண்டார்.

அதற்கு வேண்டிய வாய்ப்பைத் தனக்கு அளிக்க இறைவனை இடைவிடாது பிரார்த்தித்தார்.

1944--ம் ஆண்டு இப்பள்ளியின் முதல்வராக தெரேசா பொறுப்பேற்றார்.

இந்தப் பதவி உயர்வைப் பலர் பாராட்டினர். தெரேசாவின் சக ஆசிரியைகள் எல்லோரும் வந்து கைகுலுக்கினர்.

எல்லாக் கன்னிகைகளிலும் தெரேசாவின் உள்ளத்தை நன்கு புரிந்து கொண்டவர் மதர்சினடே. தெரேசாவிடம் அளவற்ற அன்பும் பாசமும் கொண்டவர் அவர்.

இந்தச் செய்தியைக் கேட்டதும் ஓடோடியும் வந்து, தெரேசாவை ஆரத் தழுவிக் கொண்டார். அவரது நெற்றியில் தனது அன்பு முத்தத்தைப் பதித்து ஆசிகள் வழங்கிப் பாராட்டினார்.

ஆனால் தெரேசா சிறிதும் அலட்டிக் கொள்ளவே இல்லை. சிறிதும் தன் மகிழ்ச்சியை வெளிக் காட்டிக் கொள்ளவே இல்லை. மிகவும் அமைதியாகவே காணப்பட்டார்.

இந்தப் பதவிகளும்பட்டங்களும் அளிக்கிற மகிழ்ச்சிக்கு ஒரு எல்லைஉண்டு. அதற்கும் மேற்பட்ட மகிழ்ச்சியை அநுபவிக்கிற அநுபவங்களை தெரேசா எப்போதோ பெற்றுவிட்டார். தன் உள்ளத்திற்கு உண்மையான மகிழ்ச்சி அளிக்க வல்லது எது என்பதை, தெரேசாவே அறிவார்.

ஒவ்வொரு சேரிக்கும் செல்ல வேண்டும். அங்குள்ள ஏழை எளிய மக்களுக்கெல்லாம் சேவை செய்ய வேண்டும். சமூகத்தில் பகிஷ்கரிக்கப்பட்ட மக்களுடன் எல்லாம் உறவு கொள்ள வேண்டும்; அவர்களுக்கு உதவ வேண்டும்.

அந்தப் பாக்கியம் கிட்டுகிற நாளையே--தனக்கு நிறைவான மகிழ்ச்சி தரும் நாளாக தெரேசா கருதினார்.

அதற்கான முயற்சிகளை தெரேசா முழுமூச்சுடன் செய்யத் துவக்கினார். அதற்கு அந்த முதல்வர் பதவி உதவியாக இருந்தது.

தன்னுடைய பள்ளிக் குழந்தைகளையெல்லாம் ஒன்று திரட்டினார். ஏழைகளிடம் அன்பும் கருணையும் காட்ட வேண்டுமே என்று அடிக்கடிப் போதித்தார்.

ஏழைகளை வெறுக்கக் கூடாது; பாதிக்கப்பட்டவர்களுக்கு, வெட்கத்தை விட்டு உதவி செய்யவேண்டும் என்று சொல்லிக் கொடுத்தார்.

அதற்கான பயிற்சியையும் அவ்வப்போது அளித்து வந்தார். மாணவர்களும் மனமுவந்து தங்கள் தலைமை ஆசிரியையுடன் ஒத்துழைத்தனர்.

ஒரு நாள்--

தன்னுடைய பரீட்சார்த்தத் திட்டத்தை அடுத்துள்ள சேரியில் செயல்படுத்தவும் ஆசைப்பட்டார்.

ஆனால்--

அந்த ஆசிரியை கண்ட லட்சியக் கனவுகளும்; இதயம் பூரிக்கும் செயல்களும்; எண்ணங்களும் ஆரம்பத்திலேயே அடித்து நொறுக்கப் பட்டுவிட்டு விட்டது. மலரத் துடித்த மலரை; அரும்பிலேயே முட்கள் குத்தி வேதனைப் படுத்திவிட்டன.

★★★

இதய தாகம்

7

"அன்பிற்குத் தடை என்றால்--
அந்த வேலிகளைத் தாண்டவே
விரும்புவேன்"
- அன்னை தெரேசா

தெரேசா மனம் உடைந்துபோனார். பள்ளிக்கு வெளியே சென்று ஏழைகளுக்கு இத்தகைய தொண்டு செய்ய மடத்தின் விதிமுறைகளில் இடமில்லை.

மடத்துத் தலைவியின் அனுமதியும் கிடைக்கவில்லை.

அத்துடன், மதகுருக்கள், மதசம்பந்தப்பட்ட பேராசிரியர்கள் ஆகியோரது ஆதரவும் கிட்டவில்லை. அவர்களில் பலர், தெரேசாவின் எண்ணத்தைப் பலமாக எதிர்க்கவே செய்தனர்.

இந்த மிகப்பெரும் அதிர்ச்சி தெரேசாவின் மனதைப் பெரிதும் பாதித்து விட்டது.

அன்று இரவு முழுவதும் தூங்காமல் தெரேசா ஏசுவின் பாதங்களில் வணங்கி கண்ணீர் வடித்த படியே இருந்தார்.

மடத்தின் கட்டுப்பாடுகளை, கோட்பாடுகளை, சட்ட திட்டங்களை அவர் மீறியதில்லை; மீற விரும்பவுமில்லை; ஆனால், அவை மட்டும்தான் சரி என்று ஒப்புக் கொள்ள தெரேசாவின் மனம் தீவிரமாக மறுத்தது.

அன்பு செலுத்துவதற்குத் தடை என்றபோது, அந்தத் தடையைத் தாண்டிக் கடக்கவே அவரது மனம் துடித்தது.

தன்னுடைய அன்பை ஒரு கோட்டிற்குள் அல்லது வளையத்திற்குள் நிறுத்திக்கொள்ள வேண்டுமென்பதுபோல்--

மடத்தின் நான்கு மதில் சுவருக்குள் மட்டுமே தனது அன்பு அடைபட்டுக் கிடக்க வேண்டும் என்கிற கட்டளையை தெரேசாவால் ஏற்க முடியவில்லை.

சேரிக்குச் சென்று தொண்டு செய்யத் துடிக்கும் தனது உள்ளத்து ஆசைகளை மற்றவர்கள் மறுப்பதின் பொருளை தெரேசாவால் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

--'என்னுடைய விருப்பம் நியாயமானதல்லவா! இது ஒரு அவசரமும் அவசியமும் ஆன சமூக அன்புப் பணியல்லவா!

--'அப்படி இருந்தும் இதை மற்றவர்கள் ஏன் மறுக்கிறார்கள்?

'சமூகத்தால் தூக்கி எறியப்பட்ட ஆயிரமாயிரம் மனித தெய்வங்களை நிதமும் காண்கிறேன். உதவுவாரின்றி அவர்கள் தவிப்பதைப் பார்க்கிறேன்.

'அவல நிலையிலுள்ள சேரிக் குழந்தைகள், பசியாலும், பட்டினியாலும், நோயாலும் கதறி அழுவதை அன்றாடம் பார்க்கிறேனே!

--ஒரு துண்டு ரொட்டிக்காக அழும் குழந்தை;

--அதை வாங்கிக் கொடுக்க வகை இல்லாததாய்;

--அழுகையை நிறுத்தாமல் கிடைக்காத ரொட்டிக்காக அடம்பிடிக்கும் குழந்தை;

--தன்னுடைய வறுமையை மறைக்க; அழுவதைக் காரண மாகக் காட்டி கோபத்தோடு அடிக்கும் தந்தை;

அடியின் வலிதாளாமல் மண்ணில் புறண்டு அழும் குழந்தை--

இந்தக் காட்சிகளை யெல்லாம் பார்க்கும்போது, அங்கு அப்போதே ஓடிச் சென்று அந்தக் குழந்தையை வாரி எடுத்து, என் வெள்ளை அங்கியால் அழும் குழந்தையின் கண்ணீரைத் துடைக்க ஏங்கும் என்னுடைய பிரார்த்தனைகளுக்கு தேவகுமாரன் என்று செவிசாய்ப்பான்?

ஏழைகளாய்ப் பிறப்பது பாபம் என்றே; அதிலும் ஏழைகள் வயிற்று மக்களாகப் பிறப்பது மகாபாபம் என்றோ நான் கருதவில்லை.

எங்கு பிறந்தாலும் குழந்தைகள் குழந்தைகள் தாமே!

'பால்வடியும் அந்தப் பிஞ்சு முகங்களில் ஒரு களங்கத்தையும், எவ்வித குறையையும் என்னால் காண முடியவில்லையே!

சேற்றிலே புரள்கிறார்கள்--

புழுதியை வாரி உடம்பெல்லாம் பூசிக் கொள்கிறார்கள்.

அழுக்கேறிப் போய் நிற்கிறார்கள்--

இது அவர்கள் குற்றம் மட்டும் தானா?--

அவர்களைச் சேறும் சகதியும் நிறைந்த சூழலில் வாழவிட்டிருப்பவர்கள் நாமேயல்லவா?

அன்பைத் தான் மறுக்கிறோம்--

அவமானப் படுத்தாமலாவது இருக்கலாமல்லவா!

சேற்றிலே தவழும் இந்த இளஞ்செந்தாமரைகளைக் கழுவி இறைவனுக்கு மகிழ்வூட்ட, ஒரு பக்தன்கூட வேண்டாம்--ஒரு சாதாரணத் தொண்டனே போதுமே!

அப்படியொரு தொண்டனுக்குத் தொண்டனாகப் பணிபுரியக் கூட என்னால் இயலவில்லையே! தொண்டு செய்யத் துடிக்கும் என் கரங்களுக்கு விலங்கு பூட்டப் பட்டது போல் அல்லவா துடிக்கிறேன்.

இத்தனைக்குப் பிறகும்--

ஏழைகளின் சேவைக்கு வாய்ப்பில்லாத இந்தப்பள்ளிப் பணி எனக்கு எதற்கு?

'என்னுடைய உள்ளமும், சேவையும், நான் கற்ற கல்வியும், இந்தப் பள்ளியின் அழகிய மெருகு குன்றாக சுவர்களுக்குள்ளேயே அடங்கிவிட வேண்டியதுதானா?

'இந்தப் பரந்த மக்கள் சமுதாயத்தில் வசதியான குழந்தை களுக்கு மட்டு தானா என் சேவை; என் படிப்பு, என் இதயம்?--

இந்த ஏற்றத் தாழ்வான அன்பைச் செலுத்தவா நான் அல்பேனியாவை விட்டு இங்கு வந்தேன்?

நான் நாடு துறந்தது,

சொகுசான இந்த மடத்தில் வாழ்வதற்கும்; இங்கு வரும் வசதியான குழந்தைகளுக்குப் பாடம் போதிக்கும் ஆசிரியைப் பணிக்காகவும் மட்டும் தானா?--

கடலைப்போல் ஆர்ப்பரித்த தெரேசாவின் இதயப் போராட்டம் அடங்கவே இல்லை.

சூறாவளியில் சிக்கயி சிறு படகுபோல் மனம் பல திசைகளிலும் அலைக்கழிக்கப்பட்டது.

'விடை காண முடியாத கணக்குகளா இவை?'--

'கரை எங்கே?' என்று கடும்புயலில் சிக்கிய மாலுமி தேடுவதே போல்--

தெரேசாவில் உள்ளம் 'இதெற்கெல்லாம் விடை என்ன? விமோசனம் என்ன?'-- என்று திரும்பத் திரும்ப ஒரே கேள்வியைக் கேட்டுக் கொண்டிருந்தது.

அலைபாயும் மனத்தைக் கட்டியிழுத்து வந்து மீண்டும் மீண்டும் தெரேசா பிரார்த்தனைகளிலேயே மூழ்கினார்.

--"இறைவனே எனக்குத் தெளிவைக் கொடுங்கள்!

என் லட்சியப் பாதையில் என்னை வழி நடத்திச் செல்லுங்கள்;

அதற்குத் தடையாக உள்ள கதவுகளைத் திறந்து விடுங்கள்"--

இடைவிடாத பிரார்த்தனைகள்.

இதயம் நெகிழ்ந்த ஜெபங்கள் தெரேசாவின் மூடிய விழிகளினின்றும் வடிந்த கண்ணீரில் அங்கியெல்லாம் நனைந்திருந்தது.

உள்ளத்தில் எங்கோ இனிய தென்றல் வீசுவது போன்ற சுகம்.

எப்போதோ கேட்டுப்பழக்கமானது போன்று 'குரலுக் குள்ளிருந்து, குரலாய் ஒலிக்கும்' மிக அமைதியான குரல்--

--'கடைப் பட்டவர்களில் யாருக்காவது, ஏதாவது நீ செய்தால், அதை எனக்கே செய்வதாகும்'--

தெரேசா மெய் சிலிர்க்க கரம் கூப்பியபடி எழுந்தார். ஜெபமாலையைப் பற்றியிருந்த விரல்கள் லேசாக நடுங்கின.

தேடியவிடை கிடைத்து விட்டது--

தான் செல்ல வேண்டிய பாதை பொர்ணமி நிலவில் தெரிவது போல் தெரிந்தது.

நன்றிப்பெருக்கோடு ஏசுவையே பார்த்துக் கொண்டிருந் தார் தெரேசா.

★★★

ஓடும் ரயிலில்... 8

"நல்ல கருத்துக்கள்
உயர்ந்த இலட்சியங்கள் இவற்றைப்பற்றி
அடிக்கடிச் சிந்தனை செய்தால் -
அவற்றில் ஈடுபாடு உண்டாகும்.
ஈடுபாடு உண்டானால் -
அவற்றிற்காக ஏங்குவோம் ஏங்கினால் தேடுவோம்
தேடினால் ஒருநாள்; அழகும், அருளும்
நம்வாழ்வில் நாமறியாமலே புகுந்து - அவை
நமக்குச் சொந்தமாகும்"
-வேன்டைக்

தெரேசாவிடம் அன்பு கொண்டிருந்த எல்லோருமே மிகுந்த கவலை அடைந்தனர்.

இடைவிடாத சிந்தனை--

நீண்ட நேரப் பிரார்த்தனைகள்--

சலியாத உழைப்பு--

எல்லாவற்றிற்கும் மேலாக ஏமாற்றம்.

இவை காரணமாக தெரேசாவின் உடல்நலம் வெகுவாகக் குன்றியது.

'தெரேசாவுக்கு நல்ல ஓய்வு வேண்டும்', என்று அனைவருமே கருதினார்; அதையே அவரிடமும் வற்புறுத்தினர். ஆனால்--

மற்றவர்கள் இதைச் சொல்லும் போதெல்லாம் தெரேசா சிரித்துக்கொண்டே போய் விடுவார். ஏனெனில், தன் உடலைப்பற்றி தெரேசா என்றுமே பெரிதாகக் கருதுவதில்லை. கவலைப் படுவதுமில்லை.

ஆனால், இப்போது--

மடத்தின் தலைவியே வற்புறுத்தினார்.

அதோடு தெரேசாவின் நலனில் அதிக அக்கறையும், அவரிடம் அளவற்ற மதிப்பும் வைத்திருக்கும் தவத்திரு.வேன்னும், தெரேசாவை ஓய்வெடுத்துக் கொள்ளும்படி வற்புறுத் தினார். அதன் பிறகு தெரேசாவால் மறுக்க முடியவில்லை.

இறுதியில்-

டார்ஜிலிங் சென்று ஓய்வெடுத்துக் கொள்ள தெரேசா ஒப்புக்கொண்டார். பயணத் தேதியும் நிச்சயிக்கப்பட்டு விட்டது.

அன்று-

1946-ம் வருடம் செப்டம்பர் மாதம் 10-ம் தேதி.

டார்ஜிலிங் செல்லும் ரயிலில் தெரேசா அமர்ந்திருந்தார். பிளாட்பாரத்தில் வழியனுப்ப வந்த சக ஆசிரியைகள்: நண்பர்கள் நிறைந்திருந்தனர். சிக்னலில் பச்சைவிளக்கு எரிந்து கொண்டிருந்தது. கார்டின் விசிலைத் தொடர்ந்து, பச்சைக் கொடி காற்றில் ஆடியது.

வண்டி மெல்லப் புறப்பட்டுச் செல்லத் துவங்கிய போது அவர்கள் அனைவருக்குமே துக்கம் தாளவில்லை. தங்களிலிருந்து ஏதோ ஒன்று பிரிந்து செல்வது போன்ற வேதனையும், துக்கமுமே மேலோங்கி நின்றது.

ஆயினும், தெரேசா உடல் நலத்திற்காக ஓய்விற்காகவே செல்வதை எண்ணி, அவர்கள் ஆறுதலடைந்தனர்.

அந்த ரயில்-

இயற்கை அழகுகள் நிறைந்த மலைப் பாதைகளின் வழியாக, வளைந்து வளைந்து டார்ஜிலிங்கை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

கண்ணுக் கெட்டடிய தூரம் வரை பசுவையான மரங்களும், இளஞ் செடி கொடிகளும் அடர்ந்து, வளர்ந்தோங்கி நின்றன.

சிற்சில இடங்களில், அழகிய சிறிய நீர் வீழ்ச்சிகள்; பயங்கரப் பள்ளத்தாக்குகள்.

மலையடிவாரப் பகுதிகளில் ஆங்காங்கே சில சிறுவர்கள் ஆடுமாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தனர்.

இனியவாடைக் காற்று காட்டிலுள்ள பலவித மலர்களின் நறுமணத்தை கலந்து வீசிக் கொண்டிருந்தது.

அந்த நீண்ட மலைத் தொடரையும், அதன் இயற்கை அழகையும் தெரேசா மிகவும் ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

இந்த இனிய காட்சிகளும், இயற்கைச் சூழலும் அவருக்கு, அல்பேனியாவில் தான் பனிரெண்டு வயதில் இருந்ததையும், அங்கு பார்த்து ரசித்த காட்சிகளையும் நினைப்பூட்டியது.

மனதைப் பரவசப் படுத்தும் அந்த அமைதியும், ஆனந்தமும் சூழ்ந்த சூழலில்-

தெரேசா விழிகளை மூடி ஆழ்ந்த தியானத்தில் மெய் மறந்து ஈடுபட்டிருந்தார்.

அவரது உடலும், உள்ளமும் தன்னை மறந்து இறைவனடிகளிலேயே ஒன்றிப் போயிருந்தது.

விவர்ம் தெரிந்த நாளிலிருந்து பிரார்த்தனை செய்து வரும் தெரேசாவின் உள்ளத்தில்,

அன்றையப் பிரார்த்தனை; இறைவன் அருகிலேயே சென்று கொண்டிருப்பது போன்ற ஓர் ஆனந்தப் பரவச நிலையை அவருள் மூட்டியது.

பழக்கத்தின் காரணமாக விரல்கள் தாமாக உருட்டிக் கொண்டிருந்த ஜெபமாலையின் அசைவு சிறிது சிறிதாகக் குறைந்து விரல்கள் எதிலோ தடைபட-

அந்தத்தடைபட்ட சிலுவைக் குறியையே கரங்கள் கெட்டியாகப் பற்றிக் கொண்டிருந்ததன் காரணமாக;

ஜெபமாலை அசை விழந்து, விரல்களில் தொங்கிக் கொண்டிருந்தது.

இமைகள் மூடி-

மூடிய விழிகளினுள் இறைவனை நிறுத்தி--

அந்த இறைவனை இதயத்துடன் இணைத்து--

புற உணர்வுகள் அறவே அற்ற, ஐம்புலன்களையும் ஒருமைப் படுத்தி--

அமைதியான, ஆழ்ந்த தியானத்தில தெரேசா தன்னை மறந்து மூழ்கித்திளைத்துக் கொண்டிருந்த போது--

உடல்--உடலின்றும்,

உள்ளம்-- உள்ளத்தினின்றும்,

நினைவுகள்--தன் சுயநினைவுகளினின்றும்,

எங்கோ கழன்று;

எதிலோ--எதனுடனோ இணைவது போன்ற; இதுவரை அனுபவத்தறியாத ஓர் இனிய இன்பமயமான உணர்வை தெரேசாவின் மனம் அனுபவித்துக் கொண்டிருந்த போது--

மலை ஏற்றத்திற்காக, பின்புறமும் ஒரு இஞ்சினை இணைத்துக் கொள்ள ஒரு சிறிய ஸ்டேஷனில்; ரயில் நின்றது.

'ஸ்டேஷனை ஒட்டிய கப்பிச் சாலை ஓரத்தில், ஒரு நோயாளிக் கிழவன் கால் கைகளை உதறிக் கொண்டு வாழ்வோடும், சாவோடும் மரணப் போர் நிகழ்த்திக் கொண்டிருக்கிறான்; ஆயினும்-

அவனைக்கவனிப்பதற்கு அங்கு யாரும் இல்லை.

அவனது ஈனக் குரலுக்குச் செவி மடுப்பவர் எவரும்மில்லை,

எந்த மனிதருடைய உதவியும் இன்றி; எவ்வித ஆதரவுமின்றி--அந்த ஏழைக்கிழவன் அனாதையாக இறந்தான்'-

திடுக்கிட்டு, விழித்துக் கொண்ட தெரேசாவின் தியானம் அக்கணமே கலைந்தது,

மனம் பதறியது-

விழிகள் பரபரப்புடன் சுற்று முற்றும் துழாவின.

ரயில்-

தனது இயற்கையான ஓசையுடனும், இன்னும் அதிக வேகத்துடனும்; புதிய 'இஞ்சினை' இணைத்துக் கொண்ட பெருமையில் ஓடிக்கொண்டிருந்தது-

ஆனால்-

இந்தப் புதிய இணைப்பு

ரயிலுக்கு மட்டும்தானா?--

மாலைமாலையாக தெரேசாவின் விழிகளினின்றும் கண்ணீர் வழிந்தோடிக் கொண்டிருந்தது.

மனம் அலைபாய்ந்தது--

இறைவா!

இது நினைவா! இல்லை கனவா?

அல்லது--

நான் கண்ட இந்தக் காட்சி, இந்த இரண்டுமற்ற ஒரு மனப் பிரமை தானா?

அப்படி--

நினைவல்ல வென்றால்--

நினைவல்லாத ஒன்றை, என்னை ஏன் நினைக்க வைத்தாய்?-

கனவென்றால்--

நெஞ்சை நடுங்கவைக்கும் இநத்க் கோரக்கனவை, என்னை ஏன் காணவைத்தாய்?

இது ஒரு பிரமையே என்றால்--

மனதைப் பரதவிக்க வைக்கும் இந்த மனப் பிரமையை என்னுள் என் மூட்டினாய்?--

இதயம் இதயத்தினிடமே, கேள்வியும் பதிலுமாக மாறி மாறிக் கேட்டுக் கொண்டிருந்தது.

அதனால் மனம் குட்டையாகக் குழம்பிப் போயிருந்தது.

'இறைவா--

எனக்குத் தெளிவைக் கொடு--

என் மனதிற்கு அமைதியைக் கொடு'--

என்று திரும்பத் திரும்ப இறைவனிடம் முறையிட்டுக் கொண்டிருந்தது

ஆயினும்-

எத்தனை முயன்றும், காணாது கண்ட அந்தக் காட்சி அவர் கண்முன் நின்று மறைய மறுத்தது.

தெரேசா தோற்றுப் போனார்.

அந்தச் சாலைக் கிழவனினின்றும்--

அவனது தீனக் குரலினின்றும், தன்னை விடுவித்துக் கொள்ளவும், மறக்கவும் முடியாமல்--

தன்னால் உதவவும் முடியாமற்போன அந்த பரிதாபத்திற் குரிவனுக்காக தெரேசா--

மனம் கசிந்து--

நெஞ்சம் உருக. .

தனக்குள்ள ஒரே பற்றுக்கோடான பிரார்த்தனையில் முழுமையாகச் சரண் அடைந்தார்.

உலகப் பிரக்ஞை அற்று--தன்னையே முற்றுலும் மறந்த ஆழ்ந்த தியானத்தில் அவர் லயித்து, ஒன்றிப் போயிருந்த போது தான்; அந்த அற்புதம் நிகழ்ந்தது

உடலினுள்--

உள்ளத்தினுள்--

உயிருக்குள் ஓர் உயிராய்; அந்த உயிரின் குரலாய்--

அதாவது--

உடல், உள்ளம், உயிர் இம் மூன்றிற்கும் அப்பாற்பட்ட ஆத்மாவின் அற்புதக் குரலாய்

மௌனக் குரலாய்; உள் குரல் ஒன்று--

மெல்ல--

மெல்ல--ஒலித்துப் பின்னர்,

அதுவே ஆர்ப்பரிக்கும் அலைகளாய்--

அந்த அலைகளின் பெருங்குரலாய்;

ஓசையாய். . . .

இடிமுழக்கமாய்--

இதயக்கடலில் முழங்கிக் கொண்டிருந்தது.

அந்த ஓசையை உணர--

அந்தக் குரலைக் கண்டு கொள்ள--

கேட்டுத் தெளிவு பெற--

அதற்கு ஒரு பக்குவம் தேவை.

அந்தப் பக்குவம் பெற்று விட்டாற் போல் அன்னை தெரேசா அதை உணர்ந்தார்--

இது ஓர் அலாதி அனுபவம்--

அந்த அதிசய அனுபவம் அவரை ஆட்ட கொண்டது;

மூடிய விழிகளில் பார்வை இருந்தது.

வெளியோசைகள் எதுவும் புக இயலாது அடைபட்டுப் போன செவிகளுக்கு--

அகத்து ஒலிக்கும் அந்த உள் குரலை மட்டுமே கேட்க உணர்விருந்தது

புறச் சூழல்களின் பாதிப்புகளினின்றும் முற்றிலும் விடுபட்டு --

தன்னை மறந்து அவர் அந்த உள் குரலைக்கேட்டுக் கொண்டே இருந்தார்.

அந்தக் குரல்--

தான் அத்தனை காலம் யாரிடமும் கேட்டறியாத அன்புக்குரலாய்---

அத்தனை காலம் எங்கு தேடியும், எவரிடமும் கேட்டறியாத தனது கேள்விகளுக்கெல்லாம் விடையாகவும்--

அந்த விடைகளுக்கெல்லாம் கேள்வியாகவும்--

அவருள்--

அந்த உள் குரல் ஒலித்துக் கொண்டிருந்தது.

“நான் பசித்திருந்தேன்”

- உணவுக்காக மட்டு மல்ல; பரிசுத்த இதயத்திலிருந்து வரும் சாந்திக்காகவும்;

“நான் தாகமாயிருந்தேன்”

- தண்ணீருக்காக அல்ல - போர் ஆசை என்னும் தணியாத தாகத்தைத் தீர்க்கும் சாந்திக்காக.

“நான் உடையற்றிருந்தேன்”

- துணிமணிகள் இல்லாமல் அல்ல; ஆண்களுக்கும், பெண்களுக்கும் தங்கள் உடல்களைப் பொறுத்து இருக்க வேண்டிய சிறந்த கண்ணியம் கிடைக்காததன் காரணமாக.

“நான் வீடற்றிருந்தேன்.”--

“மண்ணாலும், செங்கலாலும் கட்டப்பட்ட ஒரு குடிசை இல்லாமல் அல்ல; அன்புடன் நேசிக்கவும், அரவணைக்கவும், புரிந்து கொள்ளும் ஓர் இதயம் இல்லாத காரணமாக!

“ஒடுக்கப் படுபவனும்--
தெருவில் நிர்க்கதியாய்
இறந்து கிடக்கிறவனும்--

தொழு நோயால் மனம் நைந்து;
உள்ளம் வெதும்புபவனும் நானே."

"கடைப் பட்டவர்களில் யாருக்காவது, ஏதாவது நீ செய்தால்;
அதை எனக்கே செய்வதாகும்."
மீண்டும் மீண்டும் அந்தக் குரல்--
மீண்டும் மீண்டும், அந்தக் கடைசி வாக்கியம்.

தெரேசா சிலிர்த்துப் போய் விழிகளைத் திறந்தார்.

பனியில் நனைந்து, தோய்ந்தது போன்றிருந்த நீல விழிகளின் இமை ஓரங்களில், பனிமுத்துக்கள் போல், கண்ணீர் கரை கட்டி நின்று;-பார்வைக்குத் திரையிட்டது.

ஆக்ரோஷமாகப் பொங்கி எழுந்த கடல் அமைதியடைந்து விட்டதே போல்--

மனம் அமைதி அடைந்து காணப்பட்டது.

பால் போன்ற நிலவில்--

தான் செல்லவேண்டிய திசையைக்காட்டி, சொல்லவேண்டியதைச் சொல்லி, கடமையை நிறைவேற்றி விட்டாற்போல்--

அத்தனை நேரம் ஒலித்துக் கொண்டிருந்த உள்குரல்--

தன்னை ஒளித்துக் கொண்டுவிட்டது.

ஆயினும்--

உள்ளத்துப் படபடப்பு அடங்கிய பாடில்லை.

அத்தனை கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்த சிலுவைக் குறி டாலரிலிருந்து, சுய உணர்வு பெற்ற விரல்கள் விடுபட்டன.

எத்தனை மகத்தான அநுபவம் ஒரு புதிய சிருஷ்டி உருவாகும் போது நிகழும் எண்ணற்ற ரசாயனக் கலவைகளின் சேர்க்கையும்; மாற்றமும் போன்ற இந்த அநுபவம்தான் எத்தனை அற்புதமானது--

ரயில்; எங்கோ ஒரு வளைவைத் திரும்பி பாலத்தின் மீது 'கடகட' வென்னும் ஓசை எழுப்பி ஓடிக் கொண்டிருந்தது.

ரயிலின் சாளரத்தின் வழியே, நீண்ட மலைத்தொடர்கள் கண்ணுக்குத் தெரிந்தது.

'சிறு வயதில் செகாப்ஜியில் தனக்கு வழி காட்டிய மலை நாதன் தான்; இப்போதும் இந்த மலைகளுக்கு மத்தியிலிருந்து

தன் குரலை என் இதயத்தில் எதிரொலிக்கச் செய்து, தெளிவு பெற வைத்தானோ?--

அந்த அழகிய மலைத் தொடர்கள்களினின்றும் குரல் கொடுத்த இறைவனைத் தேடுவது போல் தெரேசாவின் விழிகள் அந்த மலைகளைத் துழாவின.

மோத்திஜில் சேரிக் குழந்தைகளைக் கண்டும்--நகர மெங்கும் என் கண்களில் படுகிற நிராதரவானவர்களைக் கண்டும் அவர்களுக்குத் தொண்டு செய்ய ஆசைப்பட்ட போது--

என் ஆசைகள் புறக்கணிக்கப்பட்டு--

அவை நிராசைகளான வேதனை தாளாமல் நான் கதறித்துடித்தபோது; என்னை எனக்கு உணர்த்திய கடவுள் தான்;

இன்று--

என் பணி என்ன வென்பதையும்;

அதற்கான வழிகளையும் எனக்குக் காட்டிவிட்டுச் சென்று விட்டானோ!

கடவுளின் கருணை உள்ளத்தை உணர நேரிட்ட போது--

நன்றிப் பெருக்கால் தெரேசாவின் உடலும் உள்ளமும் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது;

அந்த உணர்ச்சிப் பெருக்கோடும்;

பரபரப்போடும்;

அந்த நாளில்--

அந்த ரயிலில்--

அந்த நேரத்தில்--

அந்த காகிதத்தில்--

எழுதிய எழுத்துக்கள்; பொன் எழுத்துக்களில் பொறிக்கப்பட வேண்டியவையாகும்.

அந்த எழுத்துக்களே

அன்னை தெரேசாவின் பிறக்கப் போகிற இயக்கத்தின் இயல்புகளும்; சட்டத்திட்டங்களின் அடித்தளமும்; ஆணிவேரும் ஆகும்.

எத்தனையோ ரயில்கள் நிதம் நிதம் அதேபோல டார்ஜிலிங்கை நோக்கிப் போய்க் கொண்டுதானிருக்கின்றன.

ஆனால்--

அந்த ரயில்--

1946--ம் வருஷம் செப்டம்பர் மாதம் 10 தேதி அன்னை தெரேசாவைச் சுமந்து கொண்டு சென்று சரித்திரத்தில் அல்லவா இடம் பிடித்துக் கொண்டுவிட்டது.

★★★

கடலில் குளித்தொரு முத்தெடுத்தேன்... 9

"ஒருவன் பிறர் இலட்சியத்திற்காக
இறக்க முடியும்; ஆனால்--
அவன் வாழ்வதானால், தன்
இலட்சியத்திற்காகவே வாழவேண்டும்." -இப்ஸன்

தாய் நாட்டிற்காகத் தங்கள் நல்வாழ்வை அர்ப்பணித்தவர்களைத் தியாகிகள் என்கிறோம். உயரிய இலட்சியங்களுக்காகத் தொண்டாற்றியவர்களை உத்தமர்கள் என்கிறோம். மக்கள் நல்வாழ்விற்காகப் பிரார்த்தனை செய்கிறவர்களை மகான்கள் என்கிறோம்.

சுயநலமில்லா சிந்தனையுடைய இத்தகையவர்களே, மக்களில் மேன்மக்களாக மதிக்கப்படுகின்றனர்;

பிறவிப்பயன் பெற்றவர்களாகப் போற்றிப் புகழப்படுகிறார்கள்.

இவர்களின் இலட்சியமும், தொண்டும், சரித்திரத்தில் இடம் பெற்றுப் பிரகாசிக்கின்றன.

இவர்களது நினைவை உலகம் என்றென்றும் மறப்பதில்லை.

இத்தகைய மனித மனம்--

தன் உன்னத இலட்சியத்திற்காகப் போராடத் துவங்கி விட்டால்,

அதன் பிறகு--

அந்த மனத்தின் மனிதனை எந்த ஒரு சக்தியாலும் தடுத்து நிறுத்திவிட முடியாது.

தன் லட்சியம் ஈடேறும் வரை; இடையே எத்தனை சோதனைகள் வந்தாலும், அந்த மனித மனம் ஓயாது.

இத்தகைய சோதனைகள்தான் அன்னை தெரேசாவின் வாழ்க்கையிலும் விடாமல் தொடர்ந்து கொண்டே இருந்தன.

அவற்றை யெல்லாம் சமாளித்து வெற்றி காண; இவர் எத்தனை துன்பங்களை ஏற்றார்!

ஒவ்வொரு கட்டத்திலும் தன் எண்ணங்களைச் செயல் படுத்த முனையும் போது; அவர் எதிர்கொண்ட எதிர்ப்புகள்தான் எத்தனை–

ஏழைகளின் அன்புப் பணிக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டி, இறைவனிடம் எத்தனை முறை அவர் கதறிக் கண்ணீர் விட்டிருக்கிறார் என்பதை எண்ணிப் பார்க்கும்போது; நெகிழாத நெஞ்சமும் நெகிழும்.

அன்னை தெரேசாவின் வாழ்க்கையே ஓர் ஆத்ம சோதனையின் வெற்றிநாடகம்தான்.

இதோ, அடுத்த காட்சி தயாராகி விட்டது.

கல்கத்தா ரயில் நிலையத்தில் மீண்டும் ஒரு முறை லொரேட்டா கன்னியர்கள் நிறைந்து காணப்பட்டனர்.

அனைவரது கண்களும், தூரத்தே வந்து கொண்டிருக்கும் ரயிலின் மீதே பதிந்திருந்தது.

வண்டி பிளாட்பாரத்தில் வந்து நின்றதும், அந்த கன்னிகையர்கள், கூட்டமாகவும் ஓட்டமாகவும் அன்னை தெரேசா இருக்கும் பெட்டியை அடைந்தனர்.

உடல் நலம் தேறி கல்கத்தா திரும்பி வந்துவிட்ட அன்னை தெரேசா, கைகளைப் பற்றிய அனைவருடைய அன்பையும், முத்தங்களையும் ஏற்றுக் கொண்டார்.

மடத்தில் அன்னையைப் பார்த்தவர்கள் அனைவரும் மகிழ்ந்தனர்.

உடம்பு நன்றாகத் தேறியிருப்பதாகக் கூறிக்கொண்டனர்.

ஆனால்--

அன்னையின் உடம்பு மட்டுமல்ல; மனமும் நன்றாகவே தேறிவிட்டது என்பது அவர்களில் யாருக்குமே அப்போது புரியவில்லை.

ஆனால் அன்னைக்கோ--

வழக்கம் போல் தன்னுடைய பள்ளி அலுவல்களில் இனியும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள இயலும் என்கிறநம்பிக்கையை வந்த அன்றே தெரேசா இழந்து விட்டார்.

இந்த இழப்பு--

உண்மையிலேயே அவருடைய மனத்திற்குப் பிடித்தமான இழப்பாகவே இருந்தது.

ஏனெனில்--

இனியும் தன்னை ஒரு சிறிய அல்லது குறுகிய வட்டத்திற்குள் அடக்கிக் கொண்டு வாழப் போவத்தில்லை என்கிற திடமான முடிவிற்கு அன்னை தெரேசா வந்து விட்டார்.

பரந்து கிடக்கும் உலகில், கண்ணெதிரே சிதறிக் கிடக்கும் எண்ணற்ற அனாதைகள் அவரைக் கை ஏந்தி அழைப்பதைப் போல் உணர்ந்தார்.

'இப்படி என் இறைவன் என்னை வெளியே நின்று அழைக்கும்போது என்னால் எப்படிப்போகாமல் இருக்க முடியும்?'--என எண்ணினார்.

'துளி அன்பிற்காக ஏங்கித் தவிக்கும் அந்த ஏராளமானவர் களுக்கு ஏசுவின் சித்தப்படி நான் ஏதாவது செய்தாக வேண்டுமானால், இந்த மடத்தைத் துறப்பது ஒன்றே வழி'--என்கிற தீவிரமான முடிவிற்கு அவர் மனம் வந்து விட்டது.

தெரேசா திரும்பி வந்து விட்டதை அறிந்த தவத்திருவேன், அவரைப் பார்க்க மடத்திற்கு வந்தார்.

இருவரும் பேசிக்கொண்டே பள்ளித்தோட்டத்தில் அமைதியான ஒரு இடத்திற்கு வந்தனர்.

தன்னுடைய உடல்நலன்களை அக்கரையோடு விசாரித்துக் கொண்டிருந்த தவத்திருவேன் அவர்களிடம் அன்னை தெரேசா, ஓடுகிற ரயிலில் தனக்குக் கிடைத்த அபூர்வமான அநுபவத்தைப் பற்றி எடுத்துக் கூறினார்.

அன்று, அந்த ரயிலில் தான் எழுதிய துண்டுக் காகிதங் களையும் தவத்திருவேன் அவர்களிடம் அமைதியாகக் கொடுத்துவிட்டு, அவருடைய கருத்துக்காகக் காத்திருந்தார்.

மிக விரைவாக எழுதப்பட்டிருந்தாலும்--

அந்தக் காகிதங்களில் அன்னை தெரேசா அனைத்தையும் விபரமாகவே எழுதியிருந்தார்.

தான் ஆரம்பிக்கவிருக்கிற இயக்கம்--

அதன் இலட்சியம்--

அது செயல்பட வேண்டிய முறை--

அதற்கான சட்ட திட்டங்கள்--

அனைத்தும் பிரமிப்பூட்டுபவையாக இருந்தன.

படித்துப் பார்த்த வேன் அவர்கள், 'இது தெய்வத்தின் திருவருளே' என்று பூரணமாக நம்பினார்.

"எனது இந்த இயக்கம் ஆரம்பிக்கிற பணிக்கு நீங்கள் தான் உதவ வேண்டும். என் இயக்கம் லொரேட்டா மடத்துக்கு வெளியே தனித்து இயங்கினாலும்; மதக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டே இருக்கும்; கன்னிகாமடமாகவே இருக்கும்; எனக்கு உங்கள் ஆசியையும், ஆதரவையும் தருவீர்களா?" --என்று தெரேசா மிகவும் பணிவான குரலில் கேட்டார்.

உடனே தவத்திருவேன் அவர்கள், 'என்னுடைய ஆசியும், அன்பும், உதவியும், உனக்கு என்றும் உண்டு; ஆயினும் இது ஒரு மிகப் பெரிய விஷயம். எனவே, இதுபற்றிய ஆலோசனைகளுக்கு கல்கத்தா பெரிய மதகுரு (ஆண்டகை) பெர்ட்டினாண்டு பெரியரைச் சந்தித்துக் கூறி, அவரை கருத்தை அறிவதே நல்லது" என்றார்.

உடனே தெரேசாவும், "அப்படியே செய்யுங்கள்", என்றார்.

அதன் பிறகு, தவத்திரு. வேன் அவர்கள் பெரிய மதகுருவைச் சந்தித்தார். அன்னை தெரேசாவின் கருத்தை எடுத்துக் கூறினார்.

அதைக் கேட்டவுடனேயே பெரிய மதகுருவின் முகம் சிவந்தது, வார்த்தைகளும் சற்றுக் கோபமாகவே இருந்தன.

அந்தக் கோபத்தில் அவர் கூறிய வார்த்தைகள் தெரேசாவை அதைரியப் படுத்துபவையாக இருந்தன.

அதனால் தவத்திரு. வேன் அவர்கள் தெரேசாவிடம் அதை உடனே கூறவில்லை.

ஆனால் தெரேசாவோ, தவத்திரு. வேன் அவர்களிடம் நிதமும், 'பெரிய மதகுரு என்ன கூறினார்?' என்று கேட்டுக் கொண்டே இருந்தார்.

தவத்திரு. வேன் அவர்கள் தெரேசாவிடம், "பெரியருக்கு உங்கள் இயக்கத்தையும் அதுபற்றித் தாங்கள் எடுக்கவிருக்கும் முடிவையும் எடுத்துக்கூறி ஒரு கடிதம் எழுதுங்கள்!" என்று கூறினார்.

அதன்படியே தெரேசா, தான் துவங்க இருக்கும் இயக்கத்தைப்பற்றியும்; அதற்காக, தான் தற்போது இருக்கும்

லொரேட்டா கன்னிகா மாடத்தைத் துறந்து விட அனுமதியும் கேட்டு எழுதினார்.

அந்தக் கடிதத்தைப் படிக்க பெரிய மதகுரு முன்னிலும் அதிக கோபம் கொண்டார். தவத்திரு. வேன் அவர்களை அழைத்து, "வேன், இதென்ன வடிகட்டின முட்டாள்தனமாக இருக்கிறது தெரேசாவை துவக்கத்திலிருந்தே எனக்குத் தெரியும். மெழுகு வர்த்தியைக் கூடக் கொளுத்தத் திராணியில்லாதவள். தெரேசா கேட்பதை செய்து முடிக்கும் தகுதி அவளுக்கு இல்லை" என்று கோபத்தோடு கூறிமுடித்து விட்டார்.

தவத்திரு. வேன் அவர்களுக்கு ஒரு நிமிஷம் ஒன்றுமே புரியவில்லை.

தெரேசா இந்தக் கடிதத்திற்கு பெரிய மதகுருவிடமிருந்து வரும் ஆதரவான பதிலை எவ்வளவு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்.

பெரியமதகுரு தெரேசாவின் இவ்விஷயத்தில் ஏன் இப்படி நடந்துகொள்கிறார் என்பது ஆரம்பத்தில் புரியாமல் இருந்தாலும், அவரைப்பற்றி திரு வேன் அவர்கள் நன்கு அறிவார்.

இயற்கையில் பெரியமதகுரு மிகவும் நல்லவரே பழுத்த அனுபவசாலி.

ஆயினும்--

இப்படிப்பட்டவர், தெரேசாவின் விஷயத்தில் ஏன் இப்படி இருக்கிறார் என்பது,

தவத்திரு வேன் அவர்களுக்குப் புரியவில்லை. அவர் மிகவும் சஞ்சலப்பட்டுப் போனார்.

இனி என்ன செய்ய முடியும் என்பதைவிட--அன்னை தெரேசாவை எப்படிச் சென்று சந்திப்பது? என்ன பதில் கூறுவது--என்பதே தவத்திரு. வேன் அவர்களுக்குப் பெரும் சங்கடமான பிரச்சனையாக ஆகிவிட்டது.

அசுரவேகத்தில் தன்னுடைய இயக்கத்தை ஆரம்பிக்கத் துடித்துக் கொண்டிருக்கும் தெரேசா ஒரு புறம்--

--கூறியவுடனே முகத்திலடித்தாற் போன்று அன்னை தெரேசாவின் கருத்துக்கு மறுப்புத் தெரிவித்து விட்ட பெரிய மதகுரு ஒரு புறம்--

என்ன செய்வது?--

சற்று நிதானமாக--

யோசித்துப் பார்த்ததில், மதகுரு கூறியது ஒருவிதத்தில் சரி என்பது போலவே தவத்திரு வேன்னுக்கும் தோன்றியது. ஏனெனில்--

ஒரு இயக்கம் என்று ஆரம்பித்தால் அதைக் கட்டிக்காக்க, பல வலுவான கைகள் வேண்டும். போதிய நிதிவசதி வேண்டும் மேலும், இந்தியப் பின்னணி பற்றி அல்பேனியப் பெண்ணான தெரேசாவுக்குத் தெரியாது. எல்லாவற்றிற்கும் மேலாக, பெரிய மதகுருவிடம் அப்போது அதற்கான நிதி வசதியும் இல்லை.

அதோடு, 'ஒரு இயக்கத்தை நிர்வகித்து நடத்த, அதற்கு அதிகப் பயிற்சியும், நிறையக் கல்வி அறிவும் வேண்டும்', என்பதும், பெரிய மதகுருவின் கருத்தாக இருக்கலாம்--

--'எப்படி இருந்தாலும் சரி, காலம் தாழ்த்துவதில் பயனில்லை. தெரேசாவிடம் நடந்தவற்றைக் கூறிவிட வேண்டியதுதான்;' என்கிற தீர்மானத்துடன் தவத்திரு. வேன், என்டேலிப் பள்ளிக்குச் சென்றபோது அங்கே--

தெரேசாவுக்குப் பதில், பெரிய ஏமாற்றமே--அவரை எதிர்க்கொண்டு வரவேற்றது.

ஆம்!--

தெரேசாவை வேறு மடத்திற்கு மாற்றிவிட்டார்களாம்.

மாற்றப்பட்ட அசென்ஸால் மடத்தில்தான் தெரேசா இப்போது இருக்கிறாராம்.

--அவர் அயர்ந்து போனார்.

★★★

மடம் மாறினாலும் மனம் மாறாது

10

"ரோஜா செடியில்
முள் இருப்பதற்கு வருந்தாதே--
முட்செடியில் அழகிய மலர்
இருப்பதற்கு மகிழவாய்"

-ஆவ்பரி

'எதற்காகத் தெரேசாவிற்கு இந்தத் திடீர் மாற்றம்', என்பதைப் புரிந்து கொள்ள தவத்திரு. வேன்னுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை.

--அன்னை தெரேசா மடத்திற்கு வெளியே ஒரு தனி இயக்கம் ஆரம்பிக்கப் போகிறார் அல்லவா? இந்தச் செய்தி, யார் மூலமோ டப்ளினில் இருக்கிற லொரேட்டா கன்னிமாடத் தலைவியின் செவிக்கு எட்டிவிட்டது.

தெரேசாவின் இந்த அசட்டு எண்ணத்தை மறக்கடிக்க வேண்டும் என்கிற எண்ணத்தில் உடனே, தெரேசாவை அசென் சால் மடத்திற்கு மாற்றி, மடத்துத் தலைவி உத்தரவு பிறப்பித்து விட்டார்.

--'இறைவன் திருவருளை யார் அறிவார்? லட்சியத்திற்காகப் போராடுகிறவர்கள், இடையே வருகிற இடர்ப்பாடுகளை எல்லாம் ஏற்றுக்தானே ஆகவேண்டும்!'-- என்று, வேன் தன்னைச் சமாதானப் படுத்திக் கொண்டார்.

ஆனால், பெரிய மதகுருவினால் அத்தனை சுலபமாகத் தன்னை அப்படிச் சமாதானப் படுத்திக் கொள்ளஇயலவில்லை.

தெரேசா துவங்க விரும்பிய புதிய இயக்கத்திற்கு அவர் உடனடி ஊக்கமும் ஆதரவும் தரவில்லை என்பது உண்மைதான். ஆயினும், தெராசா இதன் காரணமாக, பர்டுவானிலுள்ள அசென்ஸால் மடத்திற்கு மாற்றப்பட்டதை அவர் மனம் ஏற்கவில்லை.

தவத்திரு. வேன்னை பெரியமதகுரு உடனே அழைத்தார்.

"நீங்கள் தொடர்ந்து முன்போல் தெரேசாவின் ஆத்ம விஷயங்களைக் கவனித்து வரவேண்டும். அடிக்கடி தெரேசாவுக்கு கடிதங்கள் எழுதிக் கொண்டிருங்கள். இதற்கு ஆகும் செலவைப்பற்றிக் கவலைபட வேண்டாம், நான் தந்து விடுகிறேன்" என்று சிரித்துக் கொண்டே கூறினார்.

'தெரேசாவைப் பற்றி அன்று அப்படிச் சிடுசிடுப்பாகக் கூறியவரா இன்று இப்படிக் கனிவோடு பேசுகிறார்?'

தவத்திரு. வேன்னுக்கு பெரிய மதகுரு புரியாத ஒரு புதிராகவே தோன்றினார்.

தவத்திரு. வேன் தெரேசாவின் நலன்கள் குறித்து அடிக்கடி கடிதங்கள் எழுதி வத்தார்.

தெரேசாவும், "நான் இங்கு மகிழ்ச்சியுடனேயே இருக்கிறேன்," என்று எழுதி வந்தார். இது ஓரளவுக்கு, வேன் னுக்கு ஆறுதலளிப்பதாக இருந்தது.

அதன் பிறகு அடுத்தடுத்து தெரேசாவிடமிருந்து கடிதங்கள் வந்து கொண்டிருந்தன. அவற்றிலிருந்து வேன் னுக்கு ஒருவிஷயம் மிகத் தெளிவாகப் புரிந்தது.

--'எவ்வவளவு எதிர்ப்பு இருந்த போதிலும், தெரேசா தன்னுடைய லட்சியப் பிடிப்பிலிருந்து இம்மியும் தளரவில்லை'--என்பதுதான் அது.

ஆயினும் தெரேசாவைப் பற்றி வேன் அவர்களால் நேரடியாகக் கவலைப்படாமல் இருக்கவும் முடியவில்லை.

ஏனெனில், தெரேசா காண்பது மிகப் பெரிய கனவு. அந்தக் கனவு நனவாவதற்கு, தெரேசா அரும்பாடுபட்டாக வேண்டி இருக்கும். முக்கியமாக, மிக வலுவான மூன்று சக்திகளை எதிர்த்து தெரேசா போராடியாக வேண்டும்.

முதலாவாது, அவர் ஆரம்பிக்கிற இயக்கத்தைக் குறித்து ரோமாபுரியிலுள்ள கத்தோலிக்க மதத்தலைவர் போப் அவர்களிடம் அனுமதி பெற வேண்டும்.

இரண்டாவது, இதற்கு கல்கத்தா பெரிய மதகுரு சம்மதம் தரவேண்டும்.

மூன்றாவது, அப்போது டப்ளனில் இருக்கும், லொரேட்டா கன்னிகா மாடத் தலைவி இதற்கு ஆதரவு தரவேண்டும்.

இவையெல்லாம் மிக மிகப் பெரிய காரியங்களகேவே தவத்திரு வேன்னுக்குப் பட்டது.

ஆனால்-

எல்லாவற்றிற்கும் மேல், தெரேசாவின் பங்கில் இறைவன் அருள் இருப்பதற்கான அறிகுறிகளும் அவருக்குத் தென்படாமல் இல்லை.

வழக்கம் போல் பூஜை செய்வதற்காக தவத்திரு வேன் என்டேலி பள்ளிக்குச் சென்றார். அங்கு சற்றும் எதிர்பாராமல் பூஜை அறையில் அன்னை தெரேசாவைக் கண்டதும், அவரால் ஒரு கணம் தன் கண்களையே நம்ப முடியவில்லை. -

அவர் மனம் ஒரேயடியாக மகிழ்ச்சியால் நிரம்பித் தளும்பியது.

அன்னை தெரேசாவின் இந்த மாற்றலுக்கு, பெரிய மதகுருவின் 'தலையீடுதான் காரணம் என்று அவருக்குப் பின்னர் தெரிய வந்தது. எத்தனையே பெரிய உள்ளம் அவருக்கு!

இம்முறை தெரேசாவை, தவத்திரு வேன் சந்தித்த போது, தெரேசாவுக்கு, எவ்வித நிர்வாகப் பொறுப்பும் மடத்தில் இல்லை!

அன்னை தெரேசாவின் புதிய இயக்கத்திற்கான விண்ணப்பங்கள் எல்லா இடத்துக்கும் அனுப்பப் பட்டு வந்தன.

அன்னை தெரேசாவும், விடாப்பிடியாகப் பெரிய மதகுருவிடம் தன் லட்சியத்தைச் செயல் படுத்த அனுமதி வேண்டி விண்ணப்பித்துக் கொண்டே இருந்தார்.

மதகுருக்கள், மதசம்பந்தப்பட்ட பெரியார்கள், பேராசிரியர் கள் என்று; இப்படி மிகப் பலரிடம் பெரிய மதகுரு அன்னை தெரேசாவின் ஆசையை வெளியிட்டு, கருத்தைக் கேட்டறிந்தார்.

அவர்களில் மிகப் பலர் அன்னையின் எண்ணத்தை வலுவாக எதிர்த்தனர். அதையெல்லாம் பெரிய மத குரு பொருட்படுத்தவில்லை.

ரோமாபுரிக்கு அவர் சென்றிருந்த சமயம், இயேசு சபைத் தலைவரையும், கிரகோரியன் பல்கலைக் கழகப் பேராசிரியர் களையும் சந்தித்தார்.

அன்னை தெரேசா புதிதாகத் துவங்க இருக்கும் இயக்கத்தைப் பற்றி எடுத்துக் கூறி அவர்களது கருத்தைக் கேட்டார்.

ஆனால், அவர்களும் அன்னை இயக்கத்திற்கு ஆதரவான பதில்களைக் கூறவில்லை; எதிர்ப்புத்தான் தெரிவித்தார்கள்.

அதன் பிறகு-

1948-ம் ஆண்டு, ஜனவரி மாதம் ஒரு நாள்-

ரோமாபுரிக்குத் தன்னுடைய விருப்பத்தை நேரிடையாகவே எழுதிக் கேட்க அன்னை தெரேசாவுக்குப் பெரிய மதகுரு அனுமதி அளித்தார்.

அத்துடன் அவரே டப்ளின் கன்னிகா மடத் தலைவிக்கும் தன் கைப்படவே அன்னை தெரேசாவின் இலட்சிய ஆர்வத்தைச் சுட்டிக் காட்டி ஆதரவு அளிக்கும்படி வேண்டி எழுதினார்.

அன்னை தெரேசா ரோமாபுரிக்கு எழுதிய விண்ணப்பத்தில் தனது புதிய இயக்கத்தின் அடிப்படையை மிகத் தெளிவாக விளக்கி எழுதினார்.

-தன் இயக்கம் சுதந்திரமாகச் செயல் பட்டாலும் மதக் கட்டுக் கோப்புகளுக்கு உட்பட்டே இருக்கும்.

கற்பு போன்ற விரதங்களைப்பின்பற்றும் கன்னிகாமாடமா கவே செயல்படும் என்பதை அழுத்தமாகக் குறிப்பிட்டிருந்தார்.

இது வேன் அவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சியளித்தது.

ஏனெனில், அன்னை தெரேசா கன்னிகாமாடத்தை முழுதுமாகத் துறந்து விட்டால், "மடத்தைத்துறந்த கன்னிகை," என்ற அவதூறுக்கு ஆளாக நேரிடும்;

மக்கள் அவரிடம் கொண்டுள்ள நம்பிக்கை சிதைந்துவிடும்.

அதன் பிறகு இயக்கத்தில் சேருவதற்கு அவர்கள் தயக்கம் காட்டுவார்கள் என்பதே வேன் அவர்களின் கருத்து.

ஆனால் பெரிய மதகுரு, ஆரம்பத்திலிருந்தே தெரேசாவின் இயக்கத்தின் இந்தக் கொள்கையை ஒப்புக் கொள்ளவில்லை.

"தெரேசா தனி இயக்கம் ஆரம்பிக்க ஆசைப்பட்டால், கன்னிமாடத்திலிருந்து முழுவதுமாக வெளியேறி விடட்டும்," என்றே கூறி வந்தார்.

இப்போது ரோமாபுரிக்கு தெரேசா எழுதிக் கொடுத்திருந் தும் விண்ணப்பத்தில் கூட பெரிய மதகுரு அதில், மாறான தன்னுடைய கருத்தைத் தான் சிபாரிசு செய்திருந்தார்.

ரோமாபுரிக்கு அன்னை தெரேசாவின் கடிதம் போய் இரண்டு மூன்று மாதங்கள் ஓடிவிட்டன.

தவத்திரு. வேன் ஒவ்வொரு நிமிஷமும் "ரோமா புரியிலிருந்துஆதரவான பதில் வர வேண்டுமே என்று எண்ணிக் கொண்டே இருந்தார்.

பெரிய மதகுருவின் மனமும் மிகவும் சஞ்சலப் பட்டுக் கொண்டே இருந்தது.

இந்த சமயத்தில் அன்னை தெரேசாவின் மடத்துத் தலைவியிடமிருந்து பதில் வந்தது.

அதில், அன்னை தெரேசாவின் இயக்கம், லொரேட்ட கன்னிகாமாடஉறவுடன்தனித்துஇயங்கஅனுமதிஅளித்திருந்தார்.

இரண்டு பெரிய பிரச்னைகள் தீர்ந்துவிட்டன.

கடைசியாக, இப்போது எல்லோருடைய கவலையும் ரோமிலிருந்து வரவேண்டிய கடிதத்தைப் பற்றியே இருந்தது!

அங்கிருந்து அன்னைக்குப் பாதகமான பதில் வந்துவிடக் கூடாதே என்று; எல்லோரையும்விட தவத்திரு. வேன் தான் அதிகம் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்.

ஏனெனில், 'இது அன்னையின் வாழ்வில் ஒரு திருப்பு முனை பிரச்னை யாயிற்றே' என்பதே அவர் கவலைக்குக் காரணம்.

ஆனால், அன்னை தெரேசாவின் முகத்தில் எவ்வித சலனத்தையும், யாராலும் காண முடியவில்லை.

'என் கடமையை நான் சரிவரச் செய்து விட்டேன். அது நியாயமானதாயிருந்தால் இறைவன் நிறைவேற்றி வைப்பான்' என்பதே போல், யாருடனும் போசாமல்; மௌனமாக, மிகவும் அமைதியுடனேயே அந்த நெருக்கடியான நேரத்திலும் அன்னை தெரேசா நம்பிக்கையுடனேயே இருந்தார்.

நம்பிக்கையும், அன்பும் ஆன்மாவின் தாய்ப்பாலைப் போன்றது. அந்த அன்பையும், 'நம்பிக்கையையும் கொள்ளா விட்டால், ஆற்றல் முழுதுமே அல்லவா அழிந்து போகும்!

★★★

11

கூண்டைத் துறந்த பறவை

11

"அன்பு நிறைந்த இதயமே
உலகின் மிகப் பெரிய
எண்ணங்களின் இருப்பிடம்."
-வாலனார்கூஸ்

1948 ஆகஸ்ட் முதல் வாரம்.

எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த ரோமாபுரி கடிதம் வந்து விட்டது.

பெரிய மதகுரு பெரியர் கடிதத்தை பரபரப்புடன் பிரித்துப் படித்தார்.

அதில் அவர் சிபாரிசு செய்திருந்த 'மடத்தைத் துறந்து விடுதல்' என்பது திருத்தப்பட்டிருந்தது.

பெரிய மதகுருவின் கருத்துக்குப் பதில், அன்னை தெரேசாவின் விருப்பமே அதில் நிறைவேற்றப்பட்டிருந்தது.

பெரிய மதகுரு மகிழ்ச்சியோடு தவத்திரு. வைனை அழைத்தார்.

மிகவும் உணர்ச்சி பொங்கிய குரலில். . . "வேன், தெரேசா நினைத்து நடந்து விட்டது," என்றார்.

அன்னை தெரேசாவின் லட்சியக் கனவு பலித்து விட்டதை எண்ணி தவத்திரு. வேன் உள்ளூர மகிழ்ந்தார்.

பெரிய மதகுரு அவரை, உற்சாகமாகத் துரிதப்படுத்தி, "நீங்களே இந்த உத்தரவைச் செயல் படுத்துங்கள்; போய் தெரேசாவிடம் காட்டுங்கள்" என்று கூறி கடிதத்தை வேன் கையில் கொடுத்தார்.

திரு வேன் ஒரு கணம் பெரிய மதகுருவைப்பற்றி எண்ணிப் பார்த்தார்.

முன்பு-

தெரேசாவின் இயக்கம் என்று ஆரம்பித்தாலே எரிந்து விழுகிற பெரிய மத குருவா இன்று இத்தனை உற்சாகத்தோடு இப்படிக் கூறுகிறார்?

திரு வேன் னுக்கே அப்போது புரியாம லிருந்த விஷயம் அதாவது-

'கொள்கைப் பிடிப்பில் தெரேசா எத்தனை உறுதியோடு இருக்கிறார் என்பதைச் சோதித்து அறியவே பெரிய மதகுரு அப்படி நடந்து கொண்டார்'- என்பது வேன்னுக்கு இப்போது புரிந்தது.

ஓ! பெரிய மதகுருதான் எத்தனை பெரிய அனுபவம் நிறைந்த மனிதர்!-

நன்றிப் பெருக்கோடு கடிதத்தைப் பெற்றுக் கொண்டார் வேன்!

உடனே போய் இந்த சாதகமான முடிவை அன்னையிடம் சொல்லித் தீர்க்க வேண்டும் என்று அவரது உள்ளத்தில் ஆர்வம் பொங்கியது.

புறப்படத் தயாரான வேன்னை, ஏதோ சட்டென்று நினைத்துக்கொண்ட, மதகுரு தடுத்து நிறுத்தினார்.

"இப்பொழுது போகவேண்டாம்வேன் பள்ளி நாளில் வீணாகப் பரபரப்பு ஏற்படும் வரும் ஞாயிறு தெரேசாவைப் போய்ப் பாருங்கள்" என்று கட்டளை இட்டார்.

அன்று ஞாயிற்றுக் கிழமை-

காலை நேரம்--

கன்னிகா மாடத்து வரவேற்பறையில் அமர்ந்து தவத்திரு. வேன் காலை உணவு அருந்திக்கொண்டிருந்தார். மேஜைமீது, தான் கொண்டுவந்திருக்கும் ரோமாபுரிக் கடிதத்தை வைத்திருந்தார்.

பிரார்த்தனைகளை முடித்துவிட்டு வந்துகொண்டிருந்த அன்னை தெரேசா, உணவருந்திக்கொண்டிருக்கும் தவத்திரு. வேன் அவர்களைப் பார்த்தார்.

அவர் பக்கத்திலிருந்த அந்த நீண்ட உறையைப் பார்த்ததும், அன்னை தெரேசாவின் முகம் லேசாக வெளிறியது

சட்டென்று, "இருங்கள்," என்று அவரிடம் கூறி விட்டு பிரார்த்தனைக் கூடத்தை நோக்கி வேகமாகச் சென்றார் அன்னை தெரேசா.

பிரார்த்தனையை முடித்துக் கொண்டு வந்ததும்; சாவதான மாக உறையைப் பிரித்தார். சாதகமான பதிலை எந்தவிதச் சலனமும் இல்லாமல் மிகவும் அமைதியாகப் படித்தார்.

படித்து முடிந்ததும் ஆர்வமும், உணர்ச்சியும் பொங்கும் குரலில் அன்னை தெரேசா கேட்ட முதல் கேள்வி-

"அப்படியானால், நான் இப்பொழுதே சேரிக்குச் செல்லலாம் இல்லையா?"-என்பதுதான்.

ஏழைகள்மீது அன்னை தெரேசா கொண்டிருக்கும் அன்பின் ஆழம் இது-

ஒதுக்கப்பட்டவர்கள் மீது அன்னை வைத்திருக்கும் அன்பைப் பார்த்தபோது, "இவ்வளவு ஆவேசமான அன்பை, இத்தனை ஆண்டுகள் தெரேசாவால் எப்படி மனதில் தேக்கி வைத்திருக்க முடிந்தது?" என்று நினைத்தபோது அவருக்குப் புல்லரித்தது.

அதன் பிறகு காரியங்கள் வேகமாக நடக்கத் துவங்கின.

1948, ஆகஸ்ட் பத்தாம் தேதி.

அன்னை தெரேசா தான் அணிந்திருக்கும் லொரேட்டா மடத்து பாணி உடைகளை மாற்றிக் கொண்டார்.

ஒரு சாதாரண வங்காளப் பெண் உடுத்தும் மூன்று நீலநிற பார்டர்களைக் கொண்ட, மிக மலிவான ஒரு வெள்ளை நிறப் புடவை.

அதனை, இந்திய முறைப்படிக் கட்டிக்கொண்டிருந்தார். ரவிக்கை போன்ற ஒரு வெள்ளை முழுக்கை சட்டை. புடவையை நன்றாக நெற்றிப் புருவம் வரை இழுத்துப் போர்த்தியிருந்தார்.

இடது தோன் பட்டையின் கீழே புடவையின் மீது, ஓர் உலோகத்தினால் ஆன சிலுவைச் சின்னம் தொங்கிக் கொண்டிருந்தது. கால்களுக்கு திறந்த செருப்பு.

இதுதான் அன்னையின் புதிய இயக்கத்தின் உடை. இந்த எளிய பாணி உடையே, இன்றுவரை இயக்கத்தில் உள்ள அனைவராலும் பின்பற்றப்படுகிறது.

தனது புதிய இயக்கத்திற்குத் தன்னை அன்னை தெரேசா தயார்ப்படுத்திக் கொண்டிருந்தார்.

அதற்குத் தேவையான மருத்துவ பயிற்சிக்காக அன்னை தெரேசாவை, பெரிய மதகுரு பாட்னாவுக்கு அனுப்பி வைத்தார்.

அங்கு மருத்துவப் பணிக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட லொரேட்டா மடத்தைச் சேர்ந்த கன்னியர் இருந்தனர். இவர்கள் பெயர் 'அமெரிக்கன் மெடிகல் மிஷனரி ஸிஸ்டர்ஸ்' (American Medical Missionary Sisters) என்பதாகும்.

அன்னை தெரேசா லொரேட்டா மடத்தை விட்டு வெளி யேறுவதை சக கன்னியர்களுக்குத் தெரிவிக்க, அம்மடத்துத் தலைவி அறிவிப்புப் பலகையில் இப்படி எழுதியிருந்தார்:

"போற்றவும் வேண்டாம்,

தூற்றவும் வேண்டாம்,

பிரார்த்தனை செய்யுங்கள்."

எல்லாக் கன்னிகைகளிலும், மதர்சினடே என்பவர் தெரேசாவிடம் மிகுந்த அன்பும், பாசமும் கொண்டவர். இந்த அறிவிப்பைப் பார்த்தவுடன், குழந்தையைப் போல் கேவிக் கேவி அழுதார்.

"எனது வலது கை முறிந்துவிட்டது போல் உள்ளது. தெரேசாவின் உடல்நிலை பற்றி எனக்குத் தெரியும். தெரேசா வால் கஷ்டங்களைத் தாங்கமுடியாது. இந்தப் பள்ளி அவள் இல்லாமல் வெறிச்சோடிவிடும்," என்று கதறியே விட்டார்.

பாட்னாவுக்குச் சென்ற அன்னை மூன்றே மாதங்களில் தனது மருத்துவப் பயிற்சிகளைச் சிறப்பாக முடித்துக் கொண்டு திரும்பிவிட்டார்.

★★★

ஏழைகளின் பிருந்தாவனம்

12

"உன்னையே நீ தெரிந்துகொள்,"
என்கிற பொன்மொழி அவ்வளவு சரியல்ல-
"பிறரை நீ புரிந்துகொள்"
என்பதே இன்னும் பொருத்தமானது.
-மினாண்டர்

இலையுதிர் காலத்தில் அன்னை தெரேசா என்டேலி பள்ளியில் கண்ட கனவு, மாரிக்கால நினைவுகளாக மணம் பரப்பத் தயாராகி விட்டது.

1948 டிசம்பர் 21ம் தேதி-

அன்றுதான் கல்கத்தாவின் பிரசித்தி பெற்ற மோத்திஜில் சேரியில் அன்னை தெரேசா காலடி எடுத்து வைத்தார்.

உள்ளே நுழைந்ததுமே சுறுசுறுப்புடன் சேரி முழுவதையும் சுற்றிப் பார்த்தார்.

அன்னை தெரேசாவை அப்போது அங்கு யாருக்கும் தெரியாது. அவரை அடையாளம் கண்டு கொள்ளக் கூடியவர்கள் யாரும் அங்கு இல்லை.

அன்னைக்கு அதைப் பற்றி அக்கரையு மில்லை.

சேரியின் மத்தியில் காலியாயிருந்த ஒரு குடிசை அன்னையின் கண்ணில் பட்டது.

"இதற்கு என்ன வாடகை?", என்று அருகிலிருந்தவர்களைக் கேட்டார்.

அந்தக் குடிசையின் சொந்தக்காரன், "மாதம் ஐந்து ரூபாய்", என்று கூறினான்.

உடனே அன்னை, "இந்தக் குடிசையை நான் வாடகைக்கு எடுத்துக்கொள்கிறேன்" என்று கூறி அப்போதே அதில் குடியும் புகுந்து விட்டார்.

அப்போது அன்னை தெரேசாவிடம் இருந்ததெல்லாம் இந்த ஒரே ஒரு ஐந்து ரூபாய் நோட்டுத்தான்.

சேரியில் குடி புகுந்த அன்றே அன்னை தன்னுடைய சுறுசுறுப்பான பணியைத் துவக்கிவிட்டார்.

இதற்குள் அன்னையைச் சுற்றி சேரி மக்கள் கூட்டம் கூடிவிட்டனர்.

கூடியிருந்த எல்லோரிடமும் அன்னை கலகலப்பாகப் பேசிப் பழகினார். எல்லோரையும் குசலம் விசாரித்தார்.

"நான் இங்கிருந்து கொண்டு, உங்களுக்குத் தொண்டு செய்ய வந்திருக்கிறேன். நீங்கள் அடிக்கடி என்னை உதவிக்குக் கூப்பிடவேண்டும; கூப்பிடுவீர்களா?" என்று இனிய குரவில் சிரித்துக்கொண்டே கேட்டார்.

அனைவரும் பேசப் பயந்துகொண்டே தலையசைத்தனர்.

அன்னை மீண்டும் ஒரு முறை சிரித்துவிட்டு; கண்ணுக்குத் தெரிந்த இடங்கில்ல இருந்த குப்பை கூளங்களை யெல்லாம் அகற்றிச் சுத்தம் செய்தார்.

அன்னையின் அழகையும், நிறத்தையும்;

அவரது தூய உடையையும்; வலுவில் அவர் வந்து செய்கிற காரியங்களையும் கண்டு;

அந்தக் கள்ளங் கபடம் அறியாத ஏழை மக்கள் ஒன்றும் புரியாமல், ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஆனால் இந்த விவகாரம் எல்லாம் மதியத்திற்குள் சரியாகிவிட்டது. அன்னைத் தங்களில் ஒருவராக, அவர்கள் புரிந்து கொண்டுவிட்டனர்.

அரைநாளில் அன்னை காட்டிய அன்னையும், சேவையையும், அவர்கள் ஆயுளில் அனுபவித்ததில்லை போல் மகிழ்ந்தனர்.

குளிக்க அடம் பிடித்துக்கொண்டிருந்த ஒரு விறுவனை அன்னை அன்போடு கூப்பிட்டார். தன்னிடமிருந்த சோப்பால் அவனைத் தேய்த்துக் குளுப்பாட்டி, குவட்டி அனுப்பி வைத்தார்.

வேறொரு பகுதியில் குடியிருந்த நகர சுத்தித் தொழிலாளர்களின் குடிசைக்குள் அன்னை திடீரென்று நுழைந்தார்.

இடுப்பில் கைக்குழந்தையை வைத்துக்கொண்டே ஒரு பெண், புகையும் அடுப்பை சிரமப்பட்டு ஊதிக் கொண்டிருந்தார்.

அவள் கையிலிருந்த குழந்தையைத் தன்னிடம் தரும்படி அன்னை கேட்டார். அவள் பயந்துகொண்டே குழந்தையைக் கொடுக்க மறுத்தாள்.

மறுகணம் அன்னை, அங்கு புகைந்துகொண்டிருந்த அடுப்பை நன்றாக ஊதி எரியவைத்து விட்டு விடை பெற்றுச் சென்றார்.

நோய்வாய்ப் பட்டிருந்த அனாதைக் கிழவன் ஒருவனை, அன்னை கையைப் பிடித்து ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றார். மருந்தும், அவனுக்கு இரவு ரொட்டியும் வாங்கிக்கொண்டு சேரிக்குத் திரும்பினார்.

அன்னை தெரேசா மோத்திஜில் சேரியில் குறியேறிய இரண்டாம் நாள்.

பல மாதங்களாகத் தங்களுடன் பழகிப்போன ஒருவர்போல், அன்னை தெரேசாவிடம், அந்தச் சேரி மக்கள் அனைவரும் உறவு கொண்டாடினர்.

முதல்நாள் சேரிக்கு வராத ஒரு குடிகாரன் மறுநாள் வந்தபோது, அன்னை ஒரு குடிசையில் வசிப்பதைப் பார்த்தான். அதைவிட அவனுக்கு வியப்பை அளித்த விஷயம் வேறொன்றிருந்தது.

அவன் தனது குடிசைப் பக்கம்வந்து கொண்டிருந்தான்; அப்போது ஒரு குடிசையிலிருந்து சில சிறுவர்கள் உரத்த குரலில் வங்காள மொழியில் ‘அ’ னா, ’ஆ’ வன்னா சொல்லிக் கொண்டிருந்தனர்.

சேரிக்குள் அவன் இதுவரைக் கேட்டிராத அல்லது கண்டிராத காட்சியைக்கண்ட, அந்தக் குடிகாரன் குரல் வந்த அன்னையின் குடிசைப் பக்கம் வந்தான்.

அவனுக்கு மனைவி இல்லை. ஒரு மகன் மட்டும் இருக்கிறான். நன்றாகப் பாடுபட்டு உழைப்பான். நல்லவனும் கூட. ஆனால் அவனால் குடிக்காமல் இருக்க முடிவதில்லை. குடித்து விட்டால் எங்காவது விழுந்து புறண்டு கொண்டிருப்பான்.

குடிக்காதபோது--அதாவது குடிக்கக் காசு இல்லாதபோது--தன் மகனைப் போய்ப் பார்க்க வேண்டுமென்று அவனுக்கு ஆசை வரும். அப்போதெல்லாம், தன் குடிசையை நினைத்துக் கொண்டு ஓடிவருவான். அந்தச் சிறுவனுடன் கொஞ்சுவான். பிறகு சொல்லாமல் கொள்ளாமல் இரவு போய்விடுவான்.

அப்படிப் பட்ட ஒரு ஆசையோடு, அதிலும் அதிசயமாகத் தன் பிள்ளைக்கு அன்று சில மலிவான இனிப்புப் பண்டங் களையும் வாங்கிக் கொண்டுதான் வந்திருந்தான் அவன்.

மேலே கடந்து செல்ல எண்ணியவன், மீண்டும் அந்தக் குடிசையிலிருந்து வரும் பாலர் பாடங்களைக் கேட்டு ஒரு கணம் நின்றான்.

தான் இந்தச் சேரிக்குப் புதியவன் என்று அன்னை எண்ணிவிடக் கூடாது என்று எண்ணினானோ என்னமோ, "நீங்க யாருங்க?" என்று அன்னையிடம் ஒரு கேள்வியைத் தூக்கிப் போட்டான்.

அன்னை மிகவும் அமைதியாக,

"நான் ஒரு ஏழை," என்றார்

"அதில்லாமே, பணக்காரங்களா இங்க வந்து குடியிருப்பாங்க; பாடஞ் சொல்லிக் கொடுக்கிறீங்களேன்னு கேட்டேன்" என்றான்.

"நான் ஒரு ஆசிரியை" என்று அன்னை அவனுக்குப் பதில் கூறிக் கொண்டிருப்பதற்குள். குடிசையினுள் அன்னையிடன் பாடம் சொல்லிக் கொண்டிருந்த சிறுவர்களில் ஒருவன் தன் தந்தையின் குரலைக் கேட்டு, வெளியே ஓடி வந்து "அப்பா" என்று தன் தந்தையைக் கட்டிக் கொண்டான்.

குடிகாரன் பிரமித்துப் போனான். உள்ளே பாடம் படித்துக் கொண்டிருந்தவர்களில் தன் மகனும் ஒருவனா!

இவனுமா 'அ'னா. 'ஆ' வன்னா சொல்லிக் கொண்டிருந்தான்?

தந்தையின் பிரமிப்பையும், அதற்கான காரணத்தையும் புரந்து கொண்டு விட்டான் சிறுவன்.

"இந்த டீச்சரம்மா ரொம்ப நல்லவங்க அப்பா; எங்களுக்கெல்லாம், பணமில்லாமே, இனாமாப் படிப்புக் சொல்லிக் கொடுக்கத்தான் இங்கே வந்திருக்காங்க" என்று மளமள வென்று கூறித் தன் தந்தையின் சந்தேகத்தையும், கையாலாகாத்தனத்தையும் தெளிய வைத்தான்.

குடிகாரனின் கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்தது. தன் கையிலிருந்த இனிப்புகளை அன்னையின் முன் வைத்தான்.

"டீச்சரம்மா, தயவு செய்து இதை நீங்க ஏத்துக்கணும்; என் மகனும் என்னைப் போலே ஆகமே அவனை நீங்கதான் காப்பத்தணும்" என்று அன்னையின் காலில் விழுந்து விட்டான்.

அன்னை அவனுக்கு ஆறுதல் கூறினார். அவன் வாங்கி வந்த இனிப்புகளை, அங்கிருந்த அத்தனை சிறுவர்களுக்கும் பகிர்ந்து கொடுத்தார். மிகக் குறுகிய காலத்திலேயே அந்தக் குடிகாரன் குடிப்பதை நிறுத்தி விட்டான். தன் பொறுப்புகளை உணர்ந்து சேமித்தான். நிதமும் தனது மகனைப் பார்த்து; தன்மகனது வளர்ச்சியைப் பார்த்து மகிழும் ஒரு நல்ல குடிமகனாக, அன்னை அவனை உருவாக்கி விட்டார்.

அந்தச் சேரியில் பள்ளி ஒன்றுக்கு அனுமதி கோரி, அன்னை விண்ணப்பித்திருந்தார். விரைவிலேயே அதற்கு அனுமதியும் கிடைத்துவிட்டது.

சேரியில் அதுதான் முதல் திண்ணைப்பள்ளி. மொத்தம் 21 பிள்ளைகள் சேர்ந்து விட்டார்கள். சேர்ந்து விட்டார்கள் என்பதைவிட, அன்னை ஒவ்வொரு குழந்தையாகத் தேடிப் பிடித்துச் சேர்த்துக்கொண்டார் என்பதே சரியாகும்.

இன்று தான் பாடம் கற்பிக்கும் 21 குழந்தைகள், நாளை இரு நூறாகும், இரண்டாயிரமும், அதற்கு மேலுமாகும் என்பது அன்னையின் அசைக்க முடியாத நம்பிக்கை.

பாடம் படிக்க தினம் தவறாமல் வரும் குழந்தைகளுக்கு இனிப்பு, சோப்பு, பரிசுகள் என்று எல்லாம் கொடுத்து; குழந்தைகளை வசீகரித்துப் படிக்கச் செய்தார் அன்னை. அனைவருக்கும், கரும்பலகை, பலுப்பம் கிடைக்க வழி பண்ணினார். அவர்கள் மகிழ்ந்து போனார்கள் (வீடு வீடாகச் சென்றும். பல தெருக்களில் அலைந்தும், இந்த ஏழைகளுக்காக பழைய துணிமணிகளையும்; உணவுப் பொருட்களை யாசித்து டின்களில் நிரப்பிக் கொண்டு வந்து கொடுப்பார்--

ஏதும் கிட்டாதபோது, பல நாட்கள் தன்னுடைய உணவை அந்தக் குழந்தைகளுக்குக் கொடுத்து விட்டுப் பட்டினி கிடந்திருக்கிறார்.

பண்டிகைகளிலும், விருந்துகளிலும் கலந்து கொள்ளும் போதும் சரி;

எங்காவது, ரயிலிலோ, பஸ்ஸிலோ பிரயாணம் செய்யும் போதும் சரி; தன் அருகில் இருப்பவர்களிடம், "நீங்கள் சாப்பிடும் போது, இந்த ஏழைகளையும் நினைத்துக் கொள்ளுங்கள் நீங்கள் வேண்டாம் என்று தூக்கி எறியும் எப்படிப்பட்ட உணவையும் கொடுங்கள்; ஏழைகளுக்குச் சுமந்து சென்று கொடுக்க நான் தயாராரயிருக்கிறேன்," என்று கேட்டுப் பெற்றுச் செல்வார்.

எப்போது வெளியே சென்றாலும், இப்படி ஏதாவது பொருள்களைக் கைநிறையப் பெற்றுக் கொண்டு வருவார்.

அன்னையின் வரவை நோக்கி ஆவலோடு அந்தக் குழந்தைகள் சேரிவாசலிலேயே கூட்டமாகக் கூடி நிற்பார்கள்.

சொகுசான என்டேலி பள்ளியில், தலைமை ஆசிரியைப் பதவி வகித்தபோது கிட்டாத மன அமைதியையும், ஆனந்தத்தையும், அந்தச் சேரிப்பள்ளியில் அனுபவித்தார் அன்னை தெரேசா.

சேரியிலுள்ள அந்த ஏழைகளுக்கு அன்னையிடம் நாகரீமாக நன்றி கூறத் தெரியவில்லைதான்; ஆனால் அன்னையின் உள்ளத்தைப் புரிந்து கொண்டு, மனமுருகிக் கண்ணீர் விடத் தெரிந்திருந்தது.

அன்னையின் பணி சேரியில் நாளுக்கு நாள் விரிவடைந்து வந்தது. பல சகோதரிகள் அன்னையின் இயக்கத்தில் சேர முன்வரலாயினர்.

அன்னைக்கு இது தெம்பூட்டுவதாயிருந்தது.

சேரியில் இப்போது கொஞ்சம் கொஞ்சமாகப் புதுமெருகு சேரத் துவங்கியது; அங்குள்ள ஏழைமக்கள் வாழ்க்கையிலும் தான்.

ஒவ்வொருநாளும், சேரியில் உள்ள பெண்மணிகளைக் கூட்டமாகச் சேர்த்து; சுத்தம், சுகாதாரம் இவற்றின் அவசியத்தைச் சொல்லிக் கொடுப்பார்.

ஒழுக்கமில்லாத கணவனை வெறுக்கவோ; அவனோடு சண்டை போடுவதோ சரியான பரிகாரமாகாது; என்று அறிவுறுத்தினார். அன்பைக் கொடுத்துத்தான் அன்பைப் பெறவேண்டும் என்பதை அவர்களுக்குப் புரிய வைத்தார்.

சேரியையும், வீட்டையும், தங்கள் குழந்தைகளையும் எப்படி சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டுமென்பதை அன்னையும் சக ஊழியர்களும் அடிக்கடிக் கூறி வந்தனர். 'இப்போது அவர்கள்

அதைப் புரிந்து கொள்ளத் துவங்கி விட்டார்கள்' என்பதை அன்னை உணர்ந்தார்.

தன்னுடைய இயக்கத்தில் புதிய அங்கத்தினர்கள் சேர்ந்த பிறகு; அன்னைக்கு அவசரமாக ஒரு வீடு தேவைப்பட்டது.

நகரத்தில் அத்தனை சீக்கிரம் ஒரு வீடு கிடைத்து விடுமா? தன்னுடைய ஒரு சிறு பணியகத்திற்கான வீட்டைத் தேடி, அன்னை அலைந்து அலைந்து சோர்ந்து போனார்.

அன்று அன்னை தன்னுடைய நாட்குறிப்பில் பின் வருமாறு எழுதினார்:

-"கால்வலிக்க நடந்தேன்;"

சாதாரண உணவுக்கும்;

எளிமையான கூரைக்கும்;

ஏழைகள் தேடி அலையும் போது, அவர்கள் எவ்வளவு வேதனையும் விரக்தியும் அடைந்திருப்பார்கள் என்பதைத் தத்ரூபமாக உணர்ந்து கொண்டேன்."

★★★

சுபாஷிணிகள் 13

"மக்களிடையே இரக்கமும்
சகோதர பாசமுமே;
மனித வாழ்வில் பெறுவதற்காக
முயலவேண்டிய
பேருணர்ச்சி களாகும்."

-மார்லி

இந்த சமயத்தில் தவத்திரு வேன் அவர்களின் உதவி அன்னைக்குக்கிட்டியது. திரு. வேன்னுக்குப்பரிச்சயமானவர் திரு. கோம்ஸ் அவர்கள். அவர்களது குடும்பம் 14ம் நம்பர் கிரீக் தெருவில் வசித்து வந்தது. அவர்கள் வீட்டு மாடியில் ஒரு அறை காலியாக இருந்தது. அந்த அறையை அன்னை தெரேசாவின் இயக்கத்திற்கு வாடகைக்குக் கொடுக்க வேண்டுமென்று திரு. வேன் கேட்டுக்கொண்டார்.

திரு. கோம்ஸ் அவர்கள், மலர்ந்த முகத்துட னேயே ஒப்புக்கொண்டார்.

சிறிய அறை; ஆயினும் அந்த இடம் அன்னைக்கு மிகவும் பிடித்திருக்கிறது. மரப்படிகளின் மீதேறி அந்த மாடிக்குப் போக வேண்டும். நாள் முழுதும் சேரியில் தன்னுடைய கடுமையான பணியை முடித்துக்கொண்டு களைப்போடு இரவு வெகு நேரம் கழித்து வருவார் அன்னை.

எவ்வளவு நேரமானாலும் படுப்பதற்கு முன்: நடந்து செல்லும் அந்த மரப் படிக்கட்டுகள் அத்தனையையும் தண்ணீரால் கழுவி சுத்தம் செய்துவிட்டுத்தான் உறங்கச் செல்லுவார். ஒருநாள் அன்னையின் இந்த வீட்டைத் தேடி சில வங்கப் பெண்கள் வந்தனர். அவர்கள் என்டேலி பள்ளியில் அன்னையிடம் பாடம் படித்த மாணவிகள். மகிழ்ச்சியோடு அவர்களை வரவேற்றார் அன்னை. அவர்களில் ஒருவள் பெயர் சுபாஷிணி அன்னையிடம் மிகுந்த பணிவும், பக்தியும் கொண்டவள்.

"மதர், நாங்கள் உங்கள் இயக்கத்தில் சேர்ந்து பணிபுரிய ஆசைப்பட்டு இங்கு வந்திருக்கிறோம்" என்றாள் சுபாஷிணி. அன்னை மகிழ்ச்சியோடு அவளை அணைத்துக் கொண்டார்.

அவர்கள் அனைவரும் நல்ல வசதியான குடும்பத்திலுள்ளவர்கள். அந்தப் பெண்களின் அன்பு உள்ளம் அன்னையைக் கவர்ந்தது. அவர்களில் முதலில் அன்னையிடம் தீட்சை பெற்றுக்கொண்டவள் சுபாஷிணியே

அவளுக்கு அன்னை, தன்னுடைய பெயரையே சூட்டி, "சகோதரி அக்னெஸ்" ஆக்கினார். சுபாஷிணியைத் தொடர்ந்து இன்னும் பல பெண்கள் அன்னையின் இயக்கத்தில் வந்து சேர்ந்தனர். இயக்கத்தின் வளர்ச்சிக்கேற்ப அன்னை சில சட்ட திட்டங்களையும் நடைமுறை ஒழுங்குகளையும் எழுதினார்.

1950-ம் ஆண்டு அக்டோபர் மாதம 7-ம் தேதி-

தன்னுடைய இயக்கத்திற்கு அன்னை, "அன்பின் தூதுவர்கள்" (Missionaaries of charity) என்று பெயர் சூட்டினார்.

அன்னை எழுதியுள்ள சட்ட திட்ட விதிகளுடன் கல்கத்தா உயர் நீதி மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது. மதப் பெரியவர்களும் இதனை அங்கீகரித்தார்கள்.

இதன் பிறகு--

அன்னையின் இயக்கம் வேகமாக வளரத்துவங்கியது. கல்கத்தா வெங்கிலுமிருந்தும், பல பெண்கள், அன்னையின் மிஷினரீஸ் ஆப் சாரிடிஸில் வந்து சேரத்துவங்கினார்.

ஒரு நாள்--

தவத்திரு வேன் அன்னையைப்பார்க்க வந்திருந்த போது, புதிதாகச் சில பெண்களுடன் அன்னை உற்சாகமாக உரையாடிக் கொண்டிருந்தார்.

உடனே அன்னை--

தவத்திரு வேன் அவர்களிடம் வந்திருப்பவர்களை அறிமுகப் படுத்தி இயக்கத்தில் சேர அவர்களது விருப்பத்தையும் கூறினார்.

வந்திருந்த பெண்கள் மிகவும் உற்சாகத்துடன் காணப்பட்டனர். அன்னையின் இயக்கத்தின் சட்ட திட்டங்களுடன் அதில் சேர விரும்பும் சகோதரிகள் கடைப்பிடிக்க வேண்டிய மூன்று முக்கியமான விஷயங்களும் இருந்தன.

1 ஆரோக்கியமான உடல்;

ஆரோக்கிமான மனம்.

2 நிறைய உலகப் பொது அறிவு.

3 பகுத்தறிந்து செய்தல்; எப்போதும் புன்னகையுடன் சேவை செய்தல்-

இவைகளையும், அவர்களுக்கு தவத்திரு. வேன் படித்துக் காட்டினார்.

வந்திருந்த பெண்கள், மிகுந்த மகிழ்ச்சியுடனேயே அவற்றை ஏற்று "மிஷனரீஸ் ஆஃப் சாரீடீஸ்" பதிவுப் புத்தகத்தில் கையெழுத்திட்டனர்.

அன்னையின் அன்புப் பணியைப் பற்றியும்--

அன்னையின் இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றும் கன்னிகையரின் கனிவான சேவையையும்--

இயக்கத்தின் தன்மையையும்பற்றிப் பலர் அறியலாயினர்.

நாளுக்கு நாள் வந்து சேரும் அங்கத்தினர்களின் எண்ணிக் கையை, கிரீக்தெரு வீட்டு மாடியினால் சமாளிக்க முடியவில்லை.

லோயர் சர்குலர் வீதியில் 64.ஏ. எண்ணுள்ள ஒரு பெரிய வீடு விற்பனைக்கு இருப்பதாக அன்னை அறிந்தார். இந்த வீட்டின் சொந்தக்காரர் ஒரு பாரசீக வியாபாரி. அன்னையும், திரு. வேன் அவர்களும் வீட்டைச் சென்று பார்த்தனர் இருவருக்குமே வீடு மிகவும் பிடித்த மாயிருந்தது.

ஆனால், அந்த வியாபாரி வீட்டிற்குக் கூறியவிலை மிகவும் அதிகமாயிருந்தது. பொது நலப் பணிக் காதலால், விலையைச் சிறிது குறைத்துக் கொள்ளும்படி அன்னை கேட்டுக் கொண்டார். ஆனால் அந்த வியாபாரி, வியாபாரரீதியிலேயே பிடிவாதமாக மறுத்து விட்டார்.

ஆனால், அன்னைக்கு அந்த வீடு அப்போது அவசரமாகத் தேவைப்பட்டது. அதற்கு மேல் அன்னை பேரம் பேசவில்லை. பணத்தை முதலில் கொஞ்சம் கொடுத்து வீட்டை வாங்கிவிட்டார். பிறகு மீதிப் பணத்தையும் அன்னை மிகவிரைவிலேயே அடைத்துக் கடனைத்தீர்த்து விட்டார்.

அன்று அன்னையின் ஜாகை அங்கு மாறிய பின்னர்--

அன்றிலிருந்து இன்று வரை அந்த இல்லமே, (Mission aries of charity) தர்மமிஷனரிகள் அல்லது அன்பின் தூதுவர்களின் மையப் பணியகமாக விளங்கி வருகிறது. இங்கிருந்து தான் பல கிளை ஸ்தாபனங்களை அன்னை ஸ்தாபித்தார்.

1963-ம் ஆண்டு மார்ச் மாதம் 25-ம் தேதி கல்கத்தா ஆர்ச்பிஷப்பின் ஆசியோடு அன்னை ஒரு கிளையை முதன் முதலாகக் கல்கத்தாவில் துவக்கினார்.

கன்னிகையர் பங்கு பெற்று பணியாற்றுவதே போல--

சகோதரர்களும் தனது இயக்கத்தில் பங்கு கொள்ளும் வண்ணம் இந்தப் புதிய கிளையைத் துவக்கினார். அதில் இன்று, நூற்றுக் கணக்கான சகோதரர்கள் தங்கள், நல்வாழ்வைத் தியாகம் செய்து, ஏழைகளுக்காகப் பாடுபட்டுப் பணி புரிகிறார்கள்.

இதனை அடுத்து-

இந்தியாவில் பல இடங்களிலும் அன்னையின் கிளைகள் பரவின. இந்தியாவில் மட்டுமின்றி--

ஸ்ரீலங்கா, ஆஸ்திரேலியா, தான்சானியா, நியூஜினிவா, இத்தாலி, வெனின்சுலா, ஐயர்லாந்து, இங்கிலாந்து ஆகிய நாடுகளிலும்-

மத்திய கிழக்கு நாடுகள், மற்றும் ஆபிரிக்கா, லடின் அமெரிக்கா ஆகிய உலகின் பல பாகங்களிலும் ஏழைகளிலும் ஏழைகளுக்கான அன்னையின் புனிதப் பணி புகழ் பெற்றது.

சேரிகளில், பள்ளிகளாகவும்; மருத்துவ விடுதிகளாகவும்; மனைநோய் இல்லங்களாகவும்; குழந்தைகள் காப்பகங் களாகவும்; பணி ஆற்றுவதோடு நின்று விடாமல்;

நாட்டில் இயற்கையின் சீற்றங்களினால் புயல், வெள்ளம், தீ, போன்ற வற்றால் பாதிக்கப்படும் மக்களின் துயர் துடைப்பு ஸ்தாபனங்களாகவும் அன்னையின் இயக்கம் அருந் தொண்டாற்றி வருகிறது.

பங்களா தேஷ் போரின் போது இந்தியாவில் தஞ்சம் புகுந்த லட்சோப லட்சம் நிராதரவான அகதிகளுக்கு அன்னை ஆற்றிய நிவாரணப்பணி, உலகையே வியப்பில் ஆழ்த்தியது.

அந்த அகதிகள் முகாம்களில், அன்னையும், அன்னையரது கன்னிகையர்களும், தெய்வப் பிறவிகள் போல் அவர்களுக்குக் காட்சியளித்தனர்.

இப்படிப் பலதரப்பட்ட சேவைகளின் மூலம் மக்களின் நெஞ்சில் பதிந்துவிட்ட அன்னையைப் பற்றியும் அன்னையின் இயக்கத்தைப் பற்றியும் அறியாதவர் எவருமே இல்லை.

அவரது அன்பும், தொண்டும், கடல் கடந்து உலகெங்கும் மணம் பரப்பிக் கொண்டிருக்கிறது. ஆயினும்--இன்னும்

அன்னை தெரேசாவின் மனம் அமைதி அடையவில்லை. அவரது உள்ளத்திற்குச் சமாதானமில்லை. காரணம்--

மனித சமுதாயத்தில், இன்னும் பிரச்னைகள் தீரவில்லை. தீர்க்கப்படாத பிரச்னைகளைவிட, கொடிய ஏற்றத் தாழ்வைத்தான் அன்னையால் சகித்துக் கொள்ளவே முடியவில்லை.

சமத்துவம்-சகோதரத்துவம் என்பதெல்லாம்

அர்த்தமற்ற வார்த்தைகளாகி;

சமூகத்தில் புதிது புதிதாய் முளைக்கும் பிரச்னைகளைச் சந்திக்கும் போதெல்லாம்; அன்னையின் விழிகள் குளமாகும் அதற்குப் பரிகாரம் காணவேண்டி; அன்னையின் கருத்தில் உடனே ஒரு புதிய இயக்கம் உருவாகும்.

இன்றுகாணும் இல்லங்கள் ஒவ்வொன்றும்; இப்படிப் புதிய புதிய பிரச்னைகளில் பூத்தவைகளே.

இந்த இல்லங்கள் ஒவ்வொன்றும்; வெவ்வேறான உலகங்கள்; வேதனையான உலகங்கள்.

அன்னையின் இந்த இல்லங்களில் நாம் காணும் ஒவ்வொரு மனித உயிர்களும் இரக்கத்திற்கும், பச்சாத்தாபத்திற்கும் பாத்தியப் பட்டவர்கள். ஏனெனில்-அவர்கள் அங்கு வந்து சேர்ந்ததற்கு அல்லது சேர்க்கப் பட்டதற்கு-ஒவ்வொருவரிடம் ஒரு சோகம் நிறைந்த உண்மை கதை உண்டு. அதை அவர்கள் வாயாலேயே கேட்க முடியும். ஆனால்-அந்தக் கதைகள் கேட்போரின் நெஞ்சைப் பிழிபவையாக இருக்கும். நாம்--

நம்மைச் சுற்றியுள்ள எத்தகைய மனித சமுதாயத்திற்கு மத்தியில் வாழ்கிறோம் என்பது அங்குதான் புலப்படும்.

சுருங்கச் சொன்னால்--மனித சமுதாயத்தின் கீறல் விழுந்த நிலைக்கண்ணாடிகளே இந்த ஒவ்வொரு இல்லங்களும். இந்த இல்லங்களைப் பார்ப்பதும், அங்குள்ளவர்களுக்காக மனமுருகுவதும் ஒரு பிரார்த்தனையாகும்.

அவர்களுக்கு நாம் கூறும், ஆறுதல்களும், அன்பான வார்த்தைகளுமே அவற்றிற்கான பிராயச் சித்தமும்; அங்கு நாம் சிந்தும் கண்ணீரே, அவர்களுக்கு நாம் செலுத்தும் காணிக்கையுமாகும்.

இத்தகைய கருணை இல்லங்களில் சிலவற்றை நாம் இப்போது சென்று காண்போம்.

★★★

அன்னையின் அன்பு இல்லங்கள் 14

"உங்களில் தலைவனாக
இருக்க விரும்புபவன்;
உங்களுக்கு ஊழியனாக
இருக்கக் கடவன்" -கிறிஸ்து

ஆலய மணியின் நாவு சிறியதுதான்; ஆனால் அது எழுப்பும் இனிய ஓசை எங்கெல்லாம், எதையெல்லாம் கடந்து சென்று ஒலிக்கிறது; எத்தனை எத்தனை பேரைத் தட்டி எழுப்புகிறது!-

அன்னை தெரேசாவின் உயரம் நான்கே அடிதான். ஆனால் இந்தச்சிறிய உருவம்தான் வானளாவிய அரும்பெரும் சாதனைகளைச் சாதித்திருக்கிறது.

அன்னையின் குரல் ஒரு மோஹன கீதம். கேட்போரை மெய் மறக்கச் செய்யும். அவரது ஒளிவீசும் நீலநிற கண்கள் சக்தி மிகுந்தவை!

யாரையும் தன்பால், தன் சேவையின்பால், தர்மத்தின் பால் ஈர்க்கும் தெய்வீக சக்தி படைத்தவை.

அன்னையின் பரிசுத்தமான இதயம் ஏசுவிற்கே அர்ப்பணிக்கப்பட்ட ஒன்று

அதனின்றும் வெளிப்படும் அன்பு அலைகள்,

அக்ஷரேகைகளைத் தாண்டி

நாடுகளின் காலாசார வேறுபாடுகள், முரண்பாடுகளைக் கடந்து,

இன்று உலகத்தையே தன் அன்பால் அணைத்துக் கொண்டுள்ளது வரலாறு கண்ட உண்மை.

--இந்த உண்மைக்கு

இன்று உலகம் முழுதும் பரவி வரும் அன்னை தெரேசாவின் அழிவற்ற உயிருள்ள இல்லங்களே சாட்சி!

இந்த இல்லங்கள்; அன்பு மயமானவை!

ஆனால், இவை பிறந்த கதைகள்-

சோக மயமானவை!

இந்த இல்லங்களும், இயக்கங்களும் இன்று உலகம் முழுவதும் பரவுவதற்கு மூலதனம், அன்பு வற்றிப்போன-அல்லது அன்பு பாராட்ட மறுக்கும் மனித சமுதாயமே!

மனித குலத்தின் சுய நலம், ஏற்றத் தாழ்வு, புறக்கணிப்பு, உதாசீனம், ஒழுக்கக்கேடு, தன்னம்பிக்கை இல்லாத்தனம் ஆகியவையே அன்னையின் இந்த இல்லங்கள் பிறப்பதற்குக் காரணமும்;

வளர்வதற்கு வற்றாத மூலதனமுமாயின.

இந்த உலகம் முழுவதும் என்று ஒரே அன்பு மயமாக இயங்குகிறதோ; அன்று இந்த இல்லங்களுக்கு அவசியமில்லை.

இந்த அன்பு உணர்ச்சியும், பாசப்பிணைப்பும் மக்களிடையே பிறக்காத வரை--

இந்த இல்லங்களும் பிறக்கும்; வளரும். அதுவரை அன்னையின் கரகங்களுக்கும் ஓய்விருக்காது.

1963, மார்ச் 25ம் தேதியன்று, சகோதர்கள் தர்ம மிஷனரி என்றும் இந்தப் புதிய கிளையைத் துவக்கினார் அன்னை.

1965-ல் சர்வதேச சக ஊழியர்கள் இயக்கமாகப் பெருகிய இந்த அமைப்பும்; பின்னர் மைய இயக்கத்துடன் இணைந்தது.

இயக்கத்தைத் துவக்கிய அன்னை; அதை வளர்ப்பதிலும், கட்டிக் காப்பதிலும், நிகரற்ற திறமை உடையவர்.

அன்னை மிகவும் இனிமையாகப் பழகுவார்; ஆனால் அதிகம் பேசமாட்டார்.

எப்போதும், எதிலும் அவருக்குப் பேச்சைவிட செயலே தான் முக்கியம்.

அன்னை தெரேசாவின், கண்களும் செவிகளும், எப்பொழு தும், எங்கு சென்றாலும், தயார் நினையிலேயே இருக்கும்.

தெருவில் நடந்தோ, காரிலோ போகும் போதெல்லாம் அவரது விழிகளும், செவியும், கூர்மையாக, சாலையின் இரு புறங்களின் மீதே பதிந்திருக்கும்.

நல்ல மழையில், ஒரு சிறு முனகல் சப்தம் கேட்டாலும் போதும்; அன்னையின் கார் அங்கு அப்போதே நின்று விடும். மறுநிமிஷம் முனகலுக்குரிய மனித உயிர் பரிசோதிக்கப்பட்டு முதல் உதவி அளிக்கப்படும்.

--அந்த முதல் உதவி மருந்தாகவும் இருக்கலாம், அல்லது அப்போது அந்த உயிருக்குத் தேவைப்பட்ட ஒரு கிண்ணம் பாலாகவும் இருக்கலாம்.

பிறகு, அந்த உயிரின் நிலைமைக்கும் தேவைக்கும் ஏற்ப-- கவலையின்றி விட்டுச் செல்லவோ; அல்லது கவலையோடு காரில் ஏற்றி அழைத்துச் செல்லவோபடுவர்.

இப்படிக் காப்பாற்றப்படுகிறவர்கள் உடல்நலமுற்றதும்; தாங்கள் விரும்புகிற இடத்திற்குத் திரும்பிச் செல்லலாம்.

எங்கும் செல்ல இடமில்லாத; யாருமற்ற அனாதையாக இருந்து--அவனும் தன்னைக் காப்பாற்றிய இயக்கத்திற்கு சேவை செய்ய உளமார விரும்பினால்--

அப்போதே அவன், அன்னையின் அந்த இயக்கத்தில் ஒரு அங்கத்தினராகிவிடலாம்.

இப்பட்டிச் சிறு சிறு சம்பவங்களினாலும்--

பிரச்னைக்குரிய பெரிய பல சம்பவங்களாலும் பெருகியது தான் அன்னையின் பல இல்லங்கள்.

ஒவ்வொரு இல்லம் பிறந்தமைக்கும், ஒரு உண்மைக் கதை உண்டு.

அந்த உண்மைக் கதைகளில் சிலவற்றைப் படிக்கலாம்; பார்க்கலாம்.

★★★

நிர்மல ஹிருதயம் 15

"மனிதன் இறப்பதற்குத்
தகுந்த இடம், மனிதனுக்காக
மனிதன் இறக்குமிடமே".
-எம். ஜே. பாரி

மனிதாபிமானத்திற்கு, யாரும் ஏகபோக உரிமை கொண்டாட முடியாது.

உண்மைதான்-

ஆனால்-

மனிதாபிமானமே அற்றவர்,-

மனிதாபிமானமே உருவான அன்னையைப் பார்த்து தூஷித்தனர்; அவதூறு பேசினார்.

ஒரு நாள் அன்னையை அந்தக் கல்கத்தா பகுதியைவிட்டே விரட்டிவிட, கோவில் அர்ச்சகர்களும் ஆஸ்திகர்களும், அந்தப் பகுதி மக்களும் முடிவுடன் திரண்டெழுந்தனர்.

இவர்களது கோபத்துக்குக் காரணமென்ன?

--கல்கத்தா பிரசித்தமான நகரம்--

அங்கு ஹூப்ளி நதிக்கரையில் இருக்கும் காளி கோவிலும் பிரசித்தமான கோயில்.

கோவிலை ஒட்டி, பயணிகள் தங்கும் தர்மசாலை இருந்தது. அது மாநகராட்சிக்குச் சொந்தமானது.

நடைபாதையில் நாதியற்று உயிர் விடும் மனிதர்களைப் பார்த்து மனம் இரங்கிய அன்னை, இவர்களுக்கு ஓர், 'இறப்போர் நல இல்லம் வேண்டும்' என்று ஆசைப்பட்டார்.

'அழகாக வாழத்தான் கொடுத்து வைக்கவில்லை;

இவர்கள் அழகாக இறப்பதற்காகவாவது வகை செய்யலாமே' என்பதே அன்னையின் ஆசை.

தனது இந்த சேவைக்கு ஓர் இடம் ஒதுக்கித் தரும்படி அன்னை; மாநகராட்சி அதிகாரிகளிடம் அடிக்கடி விண்ணப்பித்துக் கொண்டே இருந்தார்.

1952 ல் ஒரு நாள்--

அந்த அதிகாரிகள் மாநகராட்சிக்குச் சொந்தமான 'தர்மசாலா'லை அன்னைக்குக் கொடுத்து விட்டார்கள்.

அன்னை அதற்கு 'நிர்மல் ஹிருதய்' என்று பெயர் மாற்றினார்கள்.

மாநகராட்சியின் இந்த முடிவு; பெரிய சலசலப்பையும், பலபகுதிகளில் கொந்தளிப்பையும் ஏற்படுத்தியது.

கோயில் அர்ச்சகர்கள், காளிகாட் பகுதியினர், ஆஸ்திகர்கள், அனைவருமே அன்னைக்கெதிராக ஆர்ப்பாட்டக் கொடி பிடித்தனர்.

அவர்கள் வன்முறையில் இறங்கிய சந்தர்ப்பங்களும் உண்டு.

அமைதியாகத் தன்னுடைய பணியைச் செய்து கொண்டிருந்த அன்னை, இந்த நேரங்களில் காவல் துறையின் பாதுகாப்புடன் சேவை செய்ய நேர்ந்தது.

--தன்னை மதமாற்றம் செய்ய வந்தவளாகப் பாவித்து சண்டை போட்ட மக்களுக்கெல்லாம் அன்னை--

"தன் நோக்கம் இறப்போருக்குத் தொண்டு செய்வதுதான்; மதமாற்றம் நோக்கமே அல்ல"--என்று எவ்வளவோ விளக்கியும், சிலர் முழுச் சமாதானமடையவில்லை.

நீண்ட நாளாக காச நோய்க்கு ஆளாகி இருந்தவர், காளி கோவில் தலைமை அர்ச்சகர்.

குடும்பத்தினரால் நிராதரவாகக் கைவிடப்பட்டு அவதிப் பட்டுக் கொண்டிருந்தார்.

அன்னை தனது நிர்மல் ஹிருதயத்திற்கு அவரை அழைத்து வந்தார். தன்னால் இயன்ற அளவு வைத்திய சிகிச்சை யெல்லாம் அளித்துக் காப்பாற்ற முயன்றார்; பலனில்லை.

உயிர் பிரியும்போது, அந்த அர்ச்சகர் அன்னையின் இருகரங்களையும், கெட்டியாகப் பிடித்துக் கொண்டு;

“மதர், இத்தனை நாளாக நான் காளிக்குச் செய்து வந்துள்ள பூஜைகள் வீண்போகவில்லை. அவள் மடியில் உயிர்விட எனக்கு வரம் தந்து விட்டாள்” என்றார் குரல் தழுதழுக்க.

இத்தகைய பல தரப்பட்ட சம்பவங்களைக் காதால் கேட்டும்; தர்மசாலையில் அன்னை புரியும் சேவையைக் கண்ணார கண்டும் கூட மனம் மாறாத மதவாதிகள் சிலர் இருந்தனர்.

அவர்கள் கூட்டமாகச் சென்று அந்தப் பகுதியின் காங்கிரஸ் தலைவரைச் சென்று சந்தித்தனர்.

“இந்த கிருஸ்துவ அம்மையார் மதமாற்றம் செய்வதற் காகவே, இவ்வித சேவைகளைச் செய்வதுபோல் நாடகமாடு கிறார்கள். நீங்கள் உங்களுடைய அதிகாரத்தை உபயோகித்து, இந்த அம்மையை இங்கிருந்து உடனே விரட்ட வேண்டும்,” என்று முறையிட்டனர்.

அந்த காங்கிரஸ் தலைவர், அவர்களையும் அழைத்துக் கொண்டு, அன்னை தெரேசாவிடம் பெரும்பாலான அந்தப் பகுதி மக்களின் கோரிக்கையை எடுத்துரைக்கச் சென்றார்.

இவர்கள் அங்கு சென்றபோது-

அந்த தர்மசாலையின் கோடியில்; புற்று நோயால் துடித்துக் கொண்டிருந்த ஒரு நோயாளியின் உடலை அன்னை சுத்தம் செய்துகொண்டிருந்தார்.

--சுற்றிலும், இனிதே உயிரைத் துறக்கவந்த மனித உயிர்களின் மரண ஓலம்.

--பரவலான துர்நாற்றம் நாசியைத் துளைத்தது.

காங்கிரஸ் பிரமுகர் பிரமித்துப் போய் நின்று விட்டார்.

மனிதாபிமானத்தால், மனிதன் தெய்வமாய் ஜொலிக்கிற காட்சியை அன்றுதான் அவர் முதன் முறையாகக் கண்டார்.

கூட்டமாக வந்தவர்களைப் பற்றி ஏதுமே அறியாது--அல்லது அக்கரைப்படாது; கருமமே கண்ணாக இருந்தார் அன்னை.

பிரமுகரின் கரங்கள் அவரையுமறியாது அன்னை இருந்த திசையை நோக்கிக் குவிந்தது.

மௌனமாக வெளியேறி விட்டார். கூட வந்தவர்களுக்கு உற்சாகம் போய்விட்டது.

வெளியே வந்த காங்கிரஸ் தலைவர் கூட்டத்தினரைப் பார்த்து;

--"இங்கு வருவதற்கு முன்பு இந்த அம்மையாரை விரட்டி விடுவதாக வாக்குக் கொடுத்தேன் அதில், இப்பொழுதும் மாற்றம் இல்லை.

அதற்கு முன் உங்களிடம் ஒரு வேண்டுகோள்

உங்கள் தாய்மார்களும், சகோதரிகளும் இந்த அம்மையார் செய்து வரும் சேவையைத் தொடர முன் வந்தால்; அன்னை தெரேசாவை இப்போதே இங்கிருந்து வெளியேற்றுவது என் பொறுப்பு," என்றார்.

சற்றைக்கெல்லாம் கூட்டத்தைக் காணோம்.

--'மனிதாபிமானம் தெரேசாவின் ஏகபோக உரிமை என்று நான் சொல்லவில்லையே; இவர்கள் எல்லாம் ஏன் நன்றிகூடச் சொல்லாமல் வேகமாய்ப் போகிறார்கள்'-என்று பிரமுகரும் திரும்பினார்.

--இவ்வித ஆரம்ப எதிர்ப்புகளுக்கிடையே ஆரம்பிக்கப் பட்ட அன்னையின் பணி; இன்று அமைதியாக தர்ம சாலையில் நடந்து கொண்டிருக்கிறது

காளி கோயிலுக்கு வருகிறவர்களுக்கு; தர்மசாலையிலும் தரிசனம் கிடைக்கிறது.

உயிர் ஊசலாடும் நிலையில், நிதம் எத்தனையோ பேர் இங்கு கொண்டுவிடப் படுகிறார்கள் வைத்திய உதவி பெறு கிறார்கள்: இனிதே உயிர் துறக்க வந்தவர்களில் அன்னையின் கரம்பட்டு உயிர் பிழைத்தவர்கள் அனேகர். இவர்கள் அனேகமாக, மீண்டும் வெளியே செல்வதில்லை

அன்னையின் இயக்கத்தில் சேர்ந்து, அங்கேயே தன்னைப்போன்ற மற்றவர்களுக்குச் சேவை செய்கிறார்கள். அன்னையின் இயக்கத்தில் இன்னொரு சிறப்பு அம்சம்;

தன்னுடைய மதத்தினரைப் போலவே பிற மதத்தினரையும், மதித்து, அவற்றிற்குரிய, மரியாதையையும் கௌரவத்தையும் அவர் அளிப்பதே ஆகும்.

அன்னையின் இயக்கத்தில், மதப்பிரச்னைக்கே இடமில்லை. தன்னைப் போலவே மற்றவர்களும் அவரவர்களின் மதக்கோட் பாடு வழியேதான் வாழ வேண்டும் என்று விரும்புபவர்.

அன்னையின் இயக்கத்தில், இது ஒரு மிகச் சிறப்பான அம்சம்

நிர்மல ஹிருதய இல்லத்தில் இறக்கும் ஒருவன் ஹிந்துவாக இருந்தால்--

மரணத்தருவாயில், அவனதுவாயில் கங்கை நீர் ஊற்றப்பட்டு; ஹிந்து முறைப்படியே அவனது தகனம் நடக்கிறது.

அவனே ஒரு முஸ்லிமாக இருந்தால், மரணத்தருவாயில், குர்ரான் ஓதப்பட்டு--அவர்களின் மதசம்பிரதாயப் படியே நல்லடக்கம் செய்யப்படுகிறான்.

1952-ம் வருஷம் வரை கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான--தர்மத்தையே கண்ணால் காணாத--"தர்மசாலா" வாக இருந்த இந்த இடம் இப்போது,

"நிர்மல் ஹிருதய்"--"நிர்மலமான இருதயம்," என்னும் அன்னையின் புனிதப் பெயருடன்; இறப்போரை வாழவும் வைத்துக் கொண்டிருக்கிறது.

★★★

என்னதவம் செய்தோமோ! 16

"ஆன்மாவின் பெருந்தன்மை என்பது
எத்தனை சந்தர்ப்பங்களில்
நாம் இரக்கம் காட்டுகிறோம் என்ற
அளவைப் பொறுத்ததே" -பேக்கன்

வாழ்க்கையில் கடைப்பட்டவர்களுக்குத் தொண்டு செய்வதே அன்னையின் இயக்கம் கடையனிலும் கடையனுக்கு--ஏழைகளிலும் பரம ஏழைகளுக்கு உதவுவதே இந்த இயக்கத்தின் லட்சியம்.

இந்தப் பட்டியலில் முக்கிய பங்கு வகிப்பவர்கள் தொழு நோயாளிகள்.

இந்த நோய் ஒருவருக்கு வந்துவிட்டால், மனிதனை மனிதன் கண்டு நடுங்குவான்.

அவர்கள் மேல் பட்டுவிடக் கூடாதே என்று ஒதுங்கி ஓடுவார்கள்.

இப்படிப் பார்க்கவே அருவவெறுப்பு என்றால்; அந்த நோயாளிகளை யார் தீண்டுவார்கள்? யார் அவர்களை அன்போடு ஆதரித்து உணவு ஊட்டுவார்கள்?

அப்படியானால், இந்த மனித உயிர்கள் எல்லாம், யாருமற்ற அனாதைகளாக மாண்டு மடியவேண்டியதுதானா?

--அன்னை தெரேசாவின் இந்தச் சிந்தனைக் குடைச்சலின் விளைவாகப் பிறந்ததுதான் 'டிட்டகர் தொழுநோயாளர் இல்லம்'

கல்கத்தாவிற்கு கிழக்கே பதினாறு மைல் தொலைவில் இந்த இல்லம் இருக்கிறது.

இந்த இல்லத்திற்குள் நுழைந்ததும் நம் திருஷ்டியில் படுபவை:

உருக்குலைந்த கரங்கள்

சுருங்கிப்போன முகங்கள்

அரிக்கப்பட்ட கால்கள்

--இவைகளைச் சுமக்கும் உளுத்துப்போன உடல்கள்.

மனித இனத்தின் துன்பங்கள் ஒன்று கூடி இப்படி பூதாகாரமாகத் தோற்ற மளிக்கும் தொழுநோயாளி.

சமூகத்தால், சுற்றத்தாரால், பகிஷ்கரிக்கப் பட்ட இந்த நோயாளிகள் அனைவருமே, சாலை ஓரத்தில் சாம்ராஜ்யம் நடத்துவர்கள் மட்டுமல்ல; பல லட்சாதிபதிகளையும் கூட அன்னையில் இந்த இல்லத்தில் காணமுடியும்.

ஏனெனில்-

அவர்கள் அனைவருமே நம்பிக்கை இழந்து நிற்கும் மன நோயாளிகள். அவர்களது நொந்த உள்ளத்திற்கு வேண்டுவதெல்லாம், அன்பு கனிந்த சொற்களும்,

யாரும் தங்களை வெறுக்கவில்லை; ஒதுக்கவில்லை என்பதைக் காட்டக்கூடிய ஒப்புயர்வற்ற மனித ஸ்பரிசமுமே ஆகும்!

தங்கள் சொந்த வீட்டிலும், வெளியிலும் கிடைக்கப் பெறாத அன்பையும், ஆதரவையும் அன்னையின் இல்லத்தில் அவர்கள் பஞ்சமின்றிப் பெறுகிறார்கள்.

இந்த நோயாளிகளைத் தொட்டுத் தூக்கி குளிப்பாட்டுதல்; அன்புடனும் ஆதரவுடனும் மருந்திடுதல், உணவு உட்டுதல், ஆகிய பலபணி விடைகள்.

இவைகளை இந்தக் கன்னிகைகள் மனமுவந்த ஈடுபாடுடன் சிரத்த முகத்துடன் செய்வதைப்பார்க்கும் போது, நீரற்றுப் போன விழிகளும் கண்ணீரைச் சொரியும்,

அன்னை தெரேசாவின் இந்தக் கன்னிகைகள் எல்லாம், உண்மையிலேயே சாதாரணமனிதப் பிறவிகளே அல்ல; தேவகன்னிகைகள் என்றே எண்ணத்தோன்றும்.

"ஒடுக்கப் படுபவனும்;

தொழுநோயால் வாடுபவனும் நானே"--

என்று கூறிய ஏசுவின் இருதயத்தை இங்கு காணலாம்.

★★★

கொஞ்சும் குழந்தைகள்

17

"கடவுளைக் காணவேண்டுமா;
குழந்தைகளைப் பாருங்கள்"
- ப்ளூபெல்

கல்கத்தாவிலுள்ள 'டம்-டம்' விமான நிலையத்திலிருந்து பார்த்தால் எதிரே 'நிர்மலா கென்னடி இல்லம்' என்கிற ஒரு பெரிய அழகான கட்டிடம் தெரியும்.

இதுவே அன்னை தெரேசாவின் "சிசுபவனம்", "குழந்தைகள் காப்பகம்."

இந்த சிசுவனம் பிறப்பதற்கு; ஒரு சமூகப் பின்னணி உண்டு.

அதே போல்--

இந்த சிசுபவனம் "நிர்மலா கென்னடி இல்லம்" பெயர் தாங்கி; இவ்வளவு பெரியதாகவும் அழகாகவும் இருப்பதற்கும் ஒரு சரித்திரப் பின்னணி உண்டு.

1971-ல் நடந்த வங்கப்போரின் விளைவாக நிர்க்கதியாக பல அகதிகள் கல்கத்தாவில் தஞ்சம் புகுந்தனர்.

அந்த அகதிகளில் பலருக்கு அன்னை தெரேசா இந்த இல்லத்தில் தான் புகலிடம் கொடுத்தார்.

செனட்டர் கென்னடி அகதிமுகாம்களைப்பார்வையிட வந்த போது, அன்னையின் இந்த இல்லத்திற்கும் வந்தார். அன்னை தெரேசாவின் மனிதாபிமான மிக்கப் பணிகளைப் பார்த்து மகிழ்ந்து, ஒரு லட்சம் ரூபாயைப் பரிசாகக் கொடுத்தார்.

அதுவே இந்த சிசுபவனத்தின் அழகிய வளர்ச்சிக்கு மேலும் மெருகூட்டியது.

இது சிசுபவனம் வளர்ந்த கதை; இனி, சிசுபவனம் பிறந்த கதையைப் படிப்போம்.

ஒரு அதிகாலை நேரம். அன்னை தெரேசா ஒரு அவசர காரியமாக ஒருவரைச் சந்திக்கத் தன்னுடைய காரில் வேகமாகச் சென்று கொண்டிருந்தார்.

சிலுசிலுத்த வாடைக் காற்று வீசிக் கொண்டிருந்தது. அப்படியும் அன்னை தனது காரின் கதவுக் கண்ணாடிகளை மூடிக் கொள்ளவில்லை. கதவு வழியாகத் தலையை வெளியே நீட்டி, பார்வையைச் சாலையின் மீது படியவிட்டுக் கொண்டிருந்தார். இது அன்னையின் வழக்கம்.

ஜனநெருக்கடியும், பரபரப்பும் மிகுந்த தெருக்கள் கூட இன்னும் விழித்துக் கொள்ளவில்லை.

கார் பல வளைவுகளைக் கடந்து; கோணலும், மாணலு மான ஒரு, குறுகலான தெருவைக் கடந்து கொண்டிருந்த போது அன்னை சட்டென்று உரத்த குரலில், "காரை நிறுத்துங்கள்", என்று டிரைவரிடம் அவசரமாகக் கூறினார்.

கார் நின்றது, அன்னை தெரேசாவேகமாகக் காரின் கதவைத் திறந்து கொண்டு, நாற்சந்தியில் இருந்த குப்பைத் தொட்டியை நோக்கி வேகமாக நடந்தார்.

அந்தக் குப்பைத் தொட்டியின் மீதிருந்த காகிதப் பொதி; அப்போதும் லேசாக அசைந்து கொண்டே இருந்தது.

மிகவும் கவனமாக அந்தப் பெரிய காகிதப் பொதியை தெரேசா கையில் எடுத்துப் பிரித்தார். அதனுள்ளே;

ஒரு பச்சைக் குழந்தை.

சில மணி நேரங்களுக்கு முன்பே பிறந்திருந்த ஒரு பச்சைக் குழந்தை அது. சிறிது ஊனமுற்றிருந்த அந்தக் குழந்தை, இன்னும் உயிருடனேயே இருந்தது.

யாருக்கும் வேண்டாத அந்தப் பச்சைக் குழந்தைக்கு, அக்கணமே 'அன்னை' தாயானார்.

வேகமாக அந்தக் காகிதப் பொதியுடனேயே காரை அடைந்தார். போகவேண்டிய இடத்தைப் பற்றி அவர் சிந்திக்கவில்லைலை. "காரை வேகமாக நம் வீட்டிற்கு விடுங்கள்" என்று டிரைவருக்குக் கட்டளை இட்டார்.

வந்தவழியே அந்தக் கார் முன்னிலும் வேகமாக அன்னையின் இல்லத்தை நோக்கிப் பறந்தது.

குழந்தையைக் குளுப்பாட்டி, உடனடியாகச் செய்ய வேண்டிய உதவிகளைச் செய்தார்.

ஆயிரம் பொதுப் பணிகளுக்கு மத்தியில் கையில் ஒரு குழந்தை.

உடனடியாக ஒரு குழந்தைகள் காப்பகம் தேவை என்பதை உணர்ந்தார். அதற்காக அன்னை தெரேசா வீடு தேடி அலைந்தார்.

ஒரு காலியான வீடு கண்ணில் பட்டது. அதன் சொந்தக் காரன் பெயர், ஆர்மேனியன் மிக்காடி சரியான கஞ்சப் பேர்வழி அவன்.

தன்னுடைய வீட்டிற்கு 300ரூ வாடகை கேட்டான். அன்னை சிறிது தயங்கினார். அவன் தன்னுடைய முன்னூறு ரூபாயில், எதுவும் குறைக்கத் தயாராக இல்லை.

அன்னை ஒப்புக் கொண்டுவிட்டார். குப்பைத் தொட்டியில் கண்டெடுத்த குழந்தையே, சிசுபவனத்தின் முதல் குழந்தை!

நாளடைவில் அந்த வீட்டையே அன்னை விலைக்கு வாங்கிவிட்டார்.

சிசுபவனமும் நன்றாக வளர வாரம் பித்து விட்டது.

வளர்க்க முடியாமல் பிறரால் கை விடப்பட்ட குழந்தைகள்; தவறாகப் பிறந்த குழந்தைகள்; அனாதைக் குழந்தைகள்; இன்னும் எத்தனையோ விதங்களில் யாருக்கும் வேண்டாத குழந்தைகளை எல்லாம் அன்னை தெரேசாவின் சிசுபவன் சிரித்த முகத்துடன் ஏற்றுக்கொள்ளத் தவறுவதே இல்லை.

குழந்தைகள் சுகாதார முறையில் இங்கு வளர்க்கப் படுகிறார்கள். சத்தான உணவுகள் குழந்தைகளுக்குக் கொடுக்கப் படுகின்றன.

இன்று அனாதையாக சிசுபவனுக்கு வந்த குழந்தை; பள்ளிக்குச் செல்லும் பருவம் வந்தவுடன், பால பவனத்தில் வளருவான். பள்ளிப் படிப்பு முடிந்ததும், அவனை சகோதரர்கள் இயக்கம் கவனித்துக் கொள்ளும்.

திறமைக் கேற்பப் படிக்கலாம்; உத்தியோகத்திற்கும் செல்லலாம். அவன் தன்னுடைய வாழ்க்கையை அன்னையின் இயக்கத்தோடு மனமார இணைத்துக் கொள்ளவும் செய்யலாம்; அப்படிச் செய்யாமலும் இருக்கலாம்.

இப்படிப்பட்ட பூரண உரிமையோடு; ஒன்றுக் கொன்று இணைந்த சங்கிலித் தொடர் போன்றதே அன்னை தெரேசாவின் அன்புப் பணியும்; இயக்கங்களும். ஆம்! அறுபடாத அன்புச் சங்கிலித் தொடர்!

★★★

அன்பின் வெற்றி

18

"அன்பு, கனிவு, என்ற
பளிங்குப் பேழைகளை உங்களுக்கு
வேண்டியவர்கள் மரிக்கும் வரைப்
பூட்டி வைத்திருப்பானே?
அவர்கள் வாழ்வை, இனிமையால் நிரப்புங்கள்.
கேட்கச் செவியும், இன்புற இதயமும்
இருக்கும் காலத்திலேயே பாராட்டுகளை
பொழிந்து உற்சாகப் படுத்துங்கள்"
-ஜி. டபிள்யு சைல்டஸ்

- *பத்ம ஸ்ரீ பட்டம்: ஏப்ரல் 1962 புதுடில்லி*
- *ரேமோன் மாக்ஸேஸே அவோர்டு மணிலா: ஆகஸ்டு 31, 1962 பிலிப்பைன்ஸ்*
- *போப் ஜான் X XIII சமாதானப் பரிசு: ஜன 6, 1971- வாடிகன் நகரம்*
- *குட் ஸமாரிடன் அவார்டு: செப் 1971 நியூயார்க் USA*
- *கென்னடி இன்டர்நாஷனல் அவார்டு: அக் 1971 வாஷிங்டன் USA*
- *கௌரவ டாக்டர் பட்டம்: அக், 29,1971 வாஷிங்டன் USA*
- *ஜவஹர்லால் நேரு அவார்டு: 15, நவ. 1972 புதுடில்லி*
- *டெம்பிள்டன் பௌண்டேஷன் பரிசு: 1972*
- *ஸ்ரீமதி காந்தி பரிசு: இந்தியன் ஏர்வேஸ் மூலமும் ரயில்கள் மூலமும் அனைத்திந்திய இலவச பயண அனுமதி.*
- *இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ்: சுமார் 13 லட்சம் ரூ மதிப்புள்ள சொத்துக்கள்.*

- ஒ. பி. இ. ஆர்டர் ஆஃப் பிரிட்டிஷ் எம்பயர் கௌரவ விருது: ஜூலை 1978
- பால்சான் சர்வதேச விருது: 1-3-1979 மூன்று லட்சம் டாலர்.

  (மக்களிடையே அமைதியையும், சகோதரத்துவத்தையும் பரப்புவதில் சிறப்பாகப் பணியாற்றுபவருக்காக இத்தாலிய--சுவிஸ் அற அமைப்பு ஏற்படுத்தியுள்ள 3 லட்சம் டாலர் பெறுமானமுள்ளது)
- நோபல் பரிசு உலக சமாதானத்திற்காக இந்த ஆண்டு வழங்கப்பட்ட பரிசு: 17-10-1979 தங்கப் பதக்கமும், 15,20,000 ரூபாயும் (1,90,000 டாலர்கள்)

இப்படிப் பலப்பல பாராட்டுக்களையும், பரிசுகளையும், பட்டங்களையும் பெற்றாலும், இந்தப் பாராட்டுக்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவராகத் திகழ்ந்தார் அன்னை தெரேசா.

இதைப் பற்றியெல்லாம் எண்ணிக்கூடப் பார்க்க விரும்பாதவர் அவர்.

ஆயினும்-

தகுதியுள்ள பொருள், தகுதியானவர்களை வலியத் தேடி வந்தடைவதைப் போல;

அன்னை தெரேசாவின் மகத்தான மனித சேவைகளைக் கௌரவிக்கும் பொருட்டு 1979-ம் ஆண்டிற்கான உலக சமாதான நோபல் பரிசு 17-10-1979ம் தேதியன்று அன்னை தெரேசாவைத் தேடி வந்தடைந்தது.

1901-ம்வருஷம்இந்தநோபல்பரிசவழங்கத்துவங்கியதிலிருந்து, இந்தியப் பிரஜையாக இந்தப் பரிசைப் பெறும் முதல் பெண்மணி அன்னை தெரேசாவே ஆவார்.

இந்தியாவிற்கு நோபல்பரிசு கிடைப்பது, இது மூன்றாவது தடவையாகும்.

முதன் முறையாக மஹாகவி ரவீந்திரநாதடாகூருக்கு-அவரது கவிதை இலக்கியத்திற்காக-- நோபல் பரிசு வழங்கப்பட்டது.

இரண்டாவது தடவையாக பிரபல விஞ்ஞானி ஸர். சி. வி. ராமனுக்கு-நோபல்பரிசு வழங்கப்பட்டது.

இந்த மூன்றாவது முறை, உலக சமாதானசேவைக்கான பரிசை அன்னை தெரேசா அடையப் பெற்றார்.

நமது பாரத நாடு, எப்பொழுதும் சமாதானத்தையே விரும்பும் ஒரு நாடு. உலக சமாதானமே அதன் கொள்கையாக இருந்து வருகிறது.

இந்த் வகையில் அன்னை தெரேசா, தான் பிறந்த யூகோ நாட்டிற்கும்; தனது தாயகமாகக் கொண்ட இந்திய நாட்டிற்கும் பெருமை தேடித் தந்துள்ளார்.

இந்த ஆண்டு வழங்கப் பெறும் நோபல் பரிசின் மதிப்பு 8,00,000 ஸ்வீடிஷ் கிரோனர். அதாவது, 1,90,000 டாலர்கள் நமது இந்திய நாணய மதிப்பில் 15,20,000 ரூபாயாகும்

ஒவ்வொரு ஆண்டும் ஒரு துறையில் சிறப்பான செயல் புரிந்தவர்களுக்கு இந்த நோபர் பரிசு வழங்கப்படுகிறது.

இந்த உலகப் புகழ் பெற்ற நோபல் பரிசின் பின்னணியில் ஒரு கதை உள்ளது; அதாவது, நோபல் பரிசு பிறந்த கதை. அதைத் தெரிந்து கொள்வோம்.

ஆல்ஃபிரட் பி நோபல் என்பவர் நார்வே நாட்டில் பிறந்தவர். இவர் புகழ்பெற்ற விஞ்ஞானி. மிகவும் பயங்கர விளைவை உண்டாக்கும் "டைனமெட்டை"க் கண்டு பிடுத்தவர் இவரே.

'டைனமெட்' என்னும் வெடிமருந்து, போருக்கு மட்டும் பயன் படுத்துவது அன்று. மலைகளைப் பிளக்கவும்; மலைப்பாங் கான பாதைகளைச் சீர்படுத்தவும், அமைக்கவும் இது பயன்படும்.

அழிவைத்தரும் இந்த வெடிமருந்ததை, ஆக்கப் பணிகளுக்குப் பயன்படுத்த வேண்டுமென்று இதைக் கண்டுபிடித்த செல்வச் சீமானான நோபல் விரும்பினார் யுத்தமற்ற, அமைதியான சமாதான உலகமே அவரது கனவாக இருந்தது.

1896-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10-ம் தேதி நோபல் இறந்தார். இறப்பதற்கு முன் அவர் ஓர் உயில் எழுதிவைத்தார். அதில்:

-'உலக முழுமைக்குமான மனிதகுல வளர்ச்சிக்குப் பயன் பெரும்துறைகளில் சாதனை புரிவோர்களைத் தேர்ந்தெடுத்து பரிசு வழங்க', ஒரு அறக்கட்டளை ஸ்தாபனத்தை ஏற்படுத்தினார்.

இதற்காக அவர் ஒதுக்கியநிதி 90 லட்சம் டாலர்கள்

இந்நிதியிலிருந்து ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டித் தொகையை, ஆண்டு தோறும் பரிசாக வழங்க வேண்டும் என்பதே நோபலின் ஏற்பாடு.

பரந்த உள்ளம் படைத்த இந்த நோபல் பிரபுவின் பெயரால் 1901-ம் ஆண்டிலிருந்து இப்பரிசு வழங்கப்பட்டு வருகிறது.

இலக்கியம், பௌதிகம், ரசாயனம், மருத்துவ விஞ்ஞானம், சமாதானம் ஆகிய பலதுறைகளுக்காகவும் இப்பரிசு வழங்கப் படுகிறது.

அன்னை தெரேசாவுக்கு இந்தப் பரிசு ஆல்ஃப்ரட் நோபல் இறந்த தினமான டிசம்பர் மாதம் 10-ம் தேதி ஓஸ்லோ சர்வகலா சாலை அரங்கில் ஓர் வைபவத்தின் போது வழங்கப்படும்.

இந்த நோபல் பரிசின் சின்னமான ஒரு தங்கப் பதக்கமும், ஒரு பாராட்டுப் பத்திரமும் வழங்கப் படும்.

பரிசின் ரொக்கப் பணம் அன்னை தெரேசாவிடம் பிரத்யேகமாக ஒப்படைக்கப்படும்.

இந்த நோபல் பரிசு அறக்கட்டளை நிர்வாகக் குழுவின் சேர்மனாகப் பதவி வகிப்பவர், திரு. ஜான் சன்னஸ் (Mr John Sanness) ஆவார்.

அவர் அன்னை தெரேசாவுக்கு இவ்வாண்டு பரிசு வழங்கப்படுவது பற்றிப் பின்வருமாறு கூறினார்:

தான் பிறந்த தாய்நாடான அல்பேனியாவை விட்டு இளம் வயதிலேயே இந்திய மக்களுக்குச் சேவை செய்ய வென்று அன்னை தெரேசா புறப்பட்டு வந்தார்.

ஏழைகளுக்கே முழுநேரமும் உதவுவதற்கென்று, தான் பார்த்து வந்த ஆசிரியைத் தொழிலைத் துறந்தார்.

அவரது மனிதாவிமானமும், அன்புப் பணியும் அற்புத மானது. தன்னை ஒரு இந்தியப் பிரஜையாக்கிக் கொண்ட அன்னை தெரேசா, வாழ்வின் இருண்ட பகுதியிலுள்ள கதியற்றவர் களின் நலனுக்காகவே பாடுபட்டார். அவர் களுடைய துயரங்களுக்கு விடிவு காண அவர் தன்னையே முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட பற்றற்ற ஒரு துறவி அவர்.

அதோடு, இந்த உலகக் குழந்தைகள் ஆண்டிற்கான நோபல் பரிசு; அனாதைகள், அகதிகள், ஆதரவற்ற குழந்தைகள்- இவர்களின் நலன்கள், சேவைகள் பற்றி இருந்தது.

எனவே இதற்குத் தகுதியானவர்--

இத்தகைய சேவைகளையே கடந்த30ஆண்டுகளுக்கும் மேலாக மிகுந்த மனிதாபிமானத்துடன் செய்து வரும் அன்னை தெரேசாவே என எங்கள் எல்லோருடைய கருத்தாக இருந்தது என்றார்.

இந்த மகத்தான பரிசு கிடைத்துள்ளது பற்றி அன்னை தெரேசாவிடம் கூறப்பட்டபோது, அவர் தனக்கே உரிய அமைதியுடன் எப்போதும் போலவே காணப்பட்டார்.

அவர் தமது செய்தியில்-

“ஏழைகள் இரப்பதை உலகம் உணரத் துவங்கி விட்டது” என்றார்.

“நாங்கள் இந்த ஏழைகளிலும் ஏழைகளுக்காகப் பாடுபடு கிறோம்.

இந்த ஏழைகளுக்குத் தொண்டு செய்யும் ஒரு கருவியே நான் எனக்கென்று ஏந்தச் சிறப்பும் இல்லை; எனக் கென்று தனிப்பட்டிருந்தச் சொத்தும் இல்லை.

கடவுள்தான் என்னுடைய பாஸ்கர். அவர் இந்த ஏழைகளின் தேவைகளை அறிவார்.

இந்தப் பணத்தைக் கொண்டு ஏழைகளுக்கு இல்லங்கள் கட்டுவேன்” என்றார்.

ஓ! எத்தனை மகத்தான இதயம் கொண்டவர் இந்த அன்னை!

ஆனால்,-

தனக்கென்று எந்தச் சொத்துக்களும் இல்லை என்று கூறும் அன்னைக்கு, உண்மையிலேயே செல்வங்களோ; சொத்துக் களோ இல்லையா என்றால்-

நிறைய இருக்கிறது.

அவருடைய செல்வங்கள் விலைமதிப்பிட முடியாதவை. அவரது சொத்துக்கள் அளவிட முடியாதவை!

ஆம்!

சிசுபவனம், பாலர் பவனம் போன்ற-20 கருணை இல்லங்களில் வளர்ந்துவரும் அத்தனை அனாதைக் குழந்தைகளும், அவரது விலைமதிப்பற்ற செல்வங்களே!’

80 க்கும் மேற்பட்ட பள்ளிகளில் படிக்கும் 7500 ஏழைச்சிறார்களே அவருடைய அன்புப்பொக்கிஷங்கள்.

அன்னையின் 213 மருத்துவமனைகளில் உதவி பெறும் 9,60,000 நோயாளிகளும்-

54 தொழுநோய் இல்லங்களில் சிகிச்சை பெற்று வரும் 47,000 தொழுநோயாளிகளும்;

அன்னையின், 23 இறப்போர் நல இல்லங்களில் அன்பும் ஆதரவும் பெற்று மரணப்போர் நிகழ்த்திக் கொண்டிருக்கும் 3400க்கும் மேற்பட்ட கைவிடப்பட்ட மனித உயிர்கள்; அன்னையின் விலைமதிப்பற்ற சொத்துக்களே!

இப்படி-

ஏழைகளுக்கு வயிறார உணவும், உடையும் இல்லமும் ஈந்தால் மட்டும் போதாது என்று-

அவர்கள் நெஞ்சம் குளிர-

அவர்கள் உணரும்படி அன்பையும் கொடுத்து ஏழைகளின் நம்பிக்கைக்கு வழிகாட்டியவர் அன்னை தெரேசா. "ஒவ்வொரு மனிதப் படைப்பிலும் இறைவனைக் காண்கிறேன் ஒரு தொழு நோயாளியின் ரணங்களைக் கழுவிச் சுத்தம் செய்து மருந்திடும்போது நான் இறைவனுக்கு வைத்தியம் செய்வது போலவே; நோய் வாய்ப்பட்டிருக்கும் அவனுக்குத் தொண்டு செய்வது போலவே உணருகிறேன்; இது ஒரு இன்பமயமான-இனிமையான அநுபவமல்லவா?"-என்று கேட்கிறார்.

இத்தனை பெரிய திக்கற்றவர்கள் சாம்ராஜ்யத்தை தன் அன்புக் கயிற்றால் கட்டி ஆளும் அன்னை தெரேசாவின் ஆதாரசக்தி-

-அவருடைய ஆன்ம பலமே!

-அவருடைய, இறை நம்பிக்கையும்-இடைவிடாத பிரார்த்தனைகளின் பலமுமே!

முன்பு ஒரு நாள்-

ஓடுகிற ரயிலில் நிகழ்ந்தது போல-

இனி என்றாவது ஒரு நாள் தன்னுடைய, ஆழ் மனத்தின் உள்குரலைக் கேட்க இறைவன் அவரை ஆளாக்கினால்-அப்போது அன்னை கேட்கும் அவரது உள்குரல் இப்படிப் பட்டதாகத்தான் இருக்கும்!

நான் பசித்திருந்தேன்-

நான் தாகமாயிருந்தேன்-

நான் உடையற்றிருந்தேன்-

நான் வீடற்றிருந்தேன்-

ஆனால் இப்போது அல்ல;

ஏன் தெரியுமா?--

ஒடுக்கப்படுபவனையும்;

தெருவில் நிற்கதியாய் இறந்து கிடப்பவனையும்;

தொழுநோயால் மனம் நைந்து

உள்ளம் வெதும்புபவனையும்;

அனாதையாய் இறப்பவனையும்;

அனாதையாய்ப் பிறப்பவனையும்;

ஆதரவுடன் போற்றவும்,

அன்புடன் நேசிக்கவும்-

அவர்களைப் புரிந்து கொள்ளவும் கூடிய-

தூய அன்பு நிறைந்த

உன் இதயம் எனக்குக் கிட்டிய தன் காரணமாக'-

என்றே அந்தக் குரல் ஒலிக்கும்.

★★★

1. குடகு
2. தமிழகம்
3. சதுரகராதி
4. வள்ளுவம்
5. கோபுர தீபம்
6. நீதி நூல்கள்
7. மொழிவளம்
8. கல்வி நிலை
9. இசைத்தமிழ்
10. ஔவையார்
11. முத்தொள்ளாயிரம்
12. லெனின் வாழ்கிறார்
13. பழந்தமிழர் நாகரிகம்
14. புகழேந்தி நளன் கதை
15. இலக்கியக் கட்டுரைகள்
16. வெளிச்சத்தை நோக்கி...
17. பாரதியின் புதிய ஆத்திசூடி
18. தமிழர் திருமணத்தில் தாலி
19. சங்கப் புலவர் சன்மார்க்கம்
20. கனவுகளின் பலாபலன்கள்
21. பாரதிதாசனின் சிறு கதைகள்
22. சுதந்திரப் போரின் எழுச்சிக் களம்
23. அண்ணா போற்றிய பெருமக்கள்
24. தொல் திராவிட மொழி கண்டுபிடிப்பு
25. புதுமைப்பித்தன் கதைகள் விமர்சனங்களும் விஷமதனங்களும்
26. அன்புப் பணிக்கு ஓர் அன்னை தெரேசா
27. 19ஆம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்

T154

தமிழ் வளர்ச்சித் துறை 70.00